

கல்கி
ALKI
.8.1961
30
காசு

'அவரா லேசில் திருப்தியடைகிறவர்...'



'அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...' என்கிருர் பம்பாய்வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல் லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிக எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்னு எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!'

துணிகளைக் காப்பதற்குத் தூய, வெண்மை வாய்ந்த 'ஸன்லைட்' டைப் போல் வேறொன்றில்லை என்பதே குடும்ப மாதர்களின் துணிபு. அதுவே உங்களுக்கும் இனிது.

ஸன்லைட்


ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!


இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

30-X52 TM



தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122. கன்ஸராசால்...பம்பாய்-2.





பிலவ, ஆவணி 4 **கல்கி** ஆகஸ்டு 20. 1961

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எவ்வளவோ வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர் நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் சுணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைத்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால்தான்.
Rs.
புகையிலையின் வரலாறு... 9 .
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco
பம்பாய்—57.
பனமா
ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.
GT.709 TM
Greens' Advtg.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 3

விலங்குத் திட்டம்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதியாக உருப்பெற்று பார்லிமெண்டில் சமர்ப்பணமாகியுள்ளது. முன் இரண்டு திட்டங்களைவிட இது பலமடங்கு பெரிய டம்பாச்சாரித் திட்டம். ஏழை இந்தியாவைக் கசக்கிப் பிழிந்தும், அதன் கௌரவத்தையும் பொருளாதாரத்தையும் அயல் நாடுகளுக்குப் பணயம் வைத்தும், 11,600 கோடி ரூபாய் செலவிட்டு இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசித்திருக்கிறது காங்கிரஸ் அரசாங்கம்.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றமெல்லாம் அதன் விவசாயம், தொழில் இவற்றின் அபிவிருத்தியைப் பொறுத்ததே. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால் விவசாயத்தில் நாடு தன் நிறைவு பெறும் என்றும், தொழில் உற்பத்தி அமோகமாகப் பெருகும் என்றும் சொல்லப் படுகிறது. கடந்த இரண்டு திட்டங்களின் அநுபவம் இந்த வாக்குறுதியில் அவநம்பிக்கையைத்தான் உண்டாக்குகிறது. இரண்டாம் திட்ட இறுதியிலேயே நாடு உணவில் சுயதேவையைப் பூர்த்தி அடைந்து விடும் என்று முன்பு வாய்ப்பந்தல் போட்டதுண்டு. ஆனால் தினத்துக்கொரு கப்பலாக யாசகம் பெற்ற தானியம் நமக்கு வருவது பிரத்தியட்ச உண்மை. முதல் இரு திட்டங்களால் தொழில் உற்பத்தி 94 சத விகிதம் அதிகரித்திருப்பதாகப் புள்ளி விவரம் சொல்கிறது. இதனால் மக்கள் எந்த அநுகூலமும் பெறவில்லை; எத்தனையோ பிரதிகூலங்களுக்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்பதும் கண்கூடு. எனவே புதுத் திட்டத்தில் காட்டும் புள்ளிக் கோலம் அலங்கோலமாகவே முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

விவசாயமானாலும், தொழிலானாலும் அதில் ஏற்படும் உற்பத்திப் பெருக்கம் மக்களுக்குக் கிடைப்பதே அவசியமல்லவா? உற்பத்தியை விடத் துரிதமாக விலைவாசிகள் உயரும்போது, மக்கள் என்ன நன்மை காண முடியும்? பல்லாயிரம் கோடி ரூபாய் செலவிட்டாலும் இந்தத் திட்டத்தினால் நாட்டின் மொத்த வருமானம் 30 சத விகிதமே உயரும் என்றும், மக்களின் சராசரி வருமானம் 17 சத விகிதமே அதிகரிக்கும் என்றும் சொல்லப்படுகிறது. கடந்த இரண்டு திட்டங்களில் இவை முறையே 42 சத விகிதமும், 16 சத விகிதமும் உயர்ந்தன என்றும் தெரிய வருகிறது. அதை மனத்தில் கொண்டு பார்க்கும்போது மக்களின் செல்வ நிலை இந்தத் திட்டத்தினால் மிகக் குறைந்த அளவுக்கே வளம் பெறப் போவதாகச் சர்க்காரே சொல்வதாக ஆகிறது. இந்த வளர்ச்சியும்கூட மாயக் கற்பனையே! ஏனெனில் இதே கால கட்டத்தில் விலைவாசிகள் 17 சத விகிதத்துக்கும் பலமடங்கு உயருமாதலால் பணத்தின் மதிப்பு மிக மிகக் குறைந்து இன்றைவிட வறுமையான நிலையே ஏற்படும்.

உற்பத்தி உயர்வின் பயனை மக்கள் அநுபவிக்கப் போவதில்லை என்று திட்ட நகலே வெட்கமின்றிக் கூறுகிறது. ஏனெனில் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வெளி நாடுகளிலிருந்து கடனாகப் பெறும் 2200 கோடி ரூபாய் தவிர, நாம் அந்நிய தேசங்களுக்கு 3700 கோடி ரூபாய் மதிப்புக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். உள்நாட்டு உபயோகத்தைப் பெரும் பங்கு குறைத்துக் கொண்டால்தான் இவ்வளவு ஏற்றுமதி செய்ய முடியும். மேலும், மற்ற நாடுகளோடு போட்டியிட்டு நம் பண்டங்களை வெளிநாடுகளில் குறைந்த விலைக்கு விற்க நேரிடுமாதலால் அந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காக உள்நாட்டு விலை ஏகத்தாறாக உயரும். என்றோ வரப்போகும் ஒரு தலைமுறைக்கு சுபிட்சம் ஏற்படப் போகிறதென்று காங்கிரஸ் கூறும் கற்பனைக்

கோட்டைக்காக, மக்களை இவ்வளவு அவதிக்கு ஆளாக்குவது எந்த நீதியைச் சேரும்?

மக்களின் உள்ளத்தையும் கெடுக்கப் போகிறது இந்தத் திட்டம். கண்ட்ரோல்களை மேலும் நெருக்குவதாலும், அதிகார வர்க்கத் தலையீடு அதிகரிப்பதாலும் நாட்டில் ஊழல் பெருகப் போகிறது. 6,100 கோடி ரூபாய்க்குச் சர்க்கார் துறையில் மூதலீடு செய்யப்படும் என்பதே மக்களின் சுய முயற்சியும், சுதந்திர உணர்ச்சியும் எவ்வளவு தூரம் உலை வைக்கப்படும் என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகிறது.

'கட்டுப்பாடுகள் இல்லாமலே சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவேன்' என்று நேரு அவர்கள் காற்று மூட்டை கட்டலாம். இது சம்பாதிக்காமலே செலவு செய்வேன் என்று சொல்வது போன்ற விதண்டாவாதம்தான். ஏற்றுமதியைப் பொறுத்து உற்பத்தியை நிர்ணயிக்கப் போகிறது நேரு சர்க்கார். இது கண்ட்ரோல் பேய்க்குச் சாராயம் வார்ப்பதாகவே முடியும். சர்க்கார் தலையீடு பெருகப் பெருக, அதிகாரவர்க்கப் பட்டாளமும் அதற்கேற்பப் பெருகி, வர்த்தக சமூகமும் அதிகார வர்க்கமும் தகாத முறையில் மறைமுகத் தொடர்பு கொள்ளும். லஞ்ச ஊழல் விசுவரூபமெடுத்துவிடும்.

சர்க்கார் முதலீடு செய்யப்போகும் இவ்வளவு பெரிய தொகை சிக்கனமாகவும் திறம்படவும் செலவாகப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம். அதிகாரத்தை ஓர் இடத்தில் மையப்படுத்தாமல், கீழ் அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தால் தாமதங்களும் தடைகளும் இல்லாமல் சர்க்கார் துறை ஆலைகளின் நிர்வாகம் திறமையாகவும், ஊழல் இன்றியும் நடைபெறும் என்று கனவு காண்கிறார்கள். உண்மையில், இவ்வாறு செய்வதால் தற்போது ஓர் இடத்திலிருந்து மற்றவற்றுக்குப் பரவும் ஊழல்கள், ஒவ்வோரிடத்திலுமே தைரியமாகக் கிளைத்தெழும். எனவே நிலைமை இன்னும் சீர்கேடு அடையும். தனது உடைமை என்ற சுய ஈடுபாட்டுடன் சொத்துக்களை மக்கள் பேணிப் பாதுகாக்கும் சுதந்திரப் பொருளாதாரத்தை நிலைநாட்டுவது ஒன்றே ஊழலற்ற தொழில் அபிவிருத்திக்கு வழி. இதை உணர்வதற்கு மறுத்தே வருகிறது நேரு சர்க்கார்; இந்தத் திட்டத்தில் 6100 கோடி ரூபாயைப் பொறுப்பற்ற சர்க்கார் துறை வசம் ஒப்படைத்திருக்கிறது! தவறுகளுக்கு மருந்து தவறு, விஷத்துக்கு மருந்து விஷம் என்கிற நியாயத்தின் மேல் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

இந்த 'லட்சணமான' திட்டத்துக்காகத்தான் மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களுமாக மேலும் 1720 கோடி ரூபாய்க்குப் புது வரிகள் விதித்து மக்களைப் பிழிந்தெடுக்கப் போகின்றன. இந்தப் பயனற்ற திட்டத்துக்காகத்தான், திருப்பித் தருவதுபற்றி யோசனையேயின்றி 2200 கோடி ரூபாய் அந்நியக் கடன் பெற்றுத் தேசத்தின் மானத்தையும் செல்வத்தையும் மக்களின் வாழ்க்கையையும் அடகு வைக்க முற்பட்டிருக்கிறது காங்கிரஸ். இதெல்லாம் போதாமல் 550 கோடி ரூபாய்க்கு நோட்டுக்கள் அச்சடித்து, விலைவாசிகளை மேலும் உயர்த்தப் போவதும் இந்தத் திட்டப் பகாசுரனின் பணப் பசியைத் தீர்க்கத்தான். மக்கள் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிச் சேமித்திருப்பதைச் சர்க்கார் அதிகாரிகள் விரயம் செய்யப் போவதும் இந்தத் திட்டம் நிறைவேறுவதற்காகத்தான்.

சர்க்கார் துறை தற்போது திறமையாக இயங்கவில்லை என்பதையும், மூன்றும் திட்டத்தின் விளைவாக விலைவாசிகள் மேலும் உயரும் என்பதையும், திட்ட முடிவிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியாது என்பதையும், கள்ள மார்க்கட்டு விஸ்தரிக்கும் என்பதையும் சர்க்காரே ஒத்துக் கொண்டிருக்கிறது என்றால் நிலைமை உண்மையில் எவ்வளவு பயங்கரமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பது புலனாகும்.

இதைவிட அபாயமான ஒரு விஷயமும் இப்போது தெளிவாகியிருக்கிறது. இந்தத் திட்டம் குறித்துப் பலர் கண்டனம் தெரிவிக்கிறார்கள். ஆனால் அதே மூச்சில் 'நம் பொருளாதாரத்தை இந்தத் திட்டங்களுக்கு அடகு வைத்து விட்டதால் அவற்றை நிறைவேற்றாமலிருப்பதற்கில்லை' என்கிறார்கள். அதாவது, கம்யூனிஸ்ட் நாடுகளில் நடப்பது போல், பிரம்மாண்டத் திட்டங்கள் இன்றியமையாதவை என்ற பிரமையைக் காங்கிரஸ் ஆட்சி உண்டாக்கிவிட்டது. இது அஞ்ச வேண்டிய விஷயம். நாட்டு அலுவலின் எல்லாத் துறைகளிலும் நுழைந்து, அவற்றைத் தனக்கு ஆதீனமாக்கிக் கொண்ட துணிச்சலிலேயே காங்கிரஸ் இந்தத் திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றின் மூலம் தன் வலுவை வளர்த்துக் கொள்ளப் பார்க்கிறது. இந்த நிலைக்கு மக்களையும் பழக்கப் படுத்திவிட்டது. 'ஜனநாயகம்' என்பது அரசியல் நிர்ணயச் சட்டம் ஒன்றுக்குத்தான் உட்பட்டது; திட்டங்

களுக்கல்ல. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இடமே பெறாத திட்டக் கமிஷன், நாட்டு நடவடிக்கைகளை மனம் போனபடி ஆட்டி வைப்பதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதே இல்லை. நிதானமாக அபிவிருத்தி அளித்து, தேசத்தைச் சீரான பாதையில் இட்டுச் செல்ல ஒரு கட்சி இருக்கிறது. அதன் ஆட்சியை ஏற்படுத்தினால் இந்தப் பிரம்மராட்சதத் திட்டங்களின் தளையிலிருந்து விடுபட்டுச் சிறுகச் சிறுக சுபிட்ச வாழ்வை அடையலாம் என்பதை மக்கள் அனைவரும் உணர வேண்டும். விடுதலை விழா வாரத்தில் காலுக்கும் கைக்கும் விலங்குத் திட்டம் தயாராகி வந்திருக்கிறது. 'இந்தத் திட்டம் ஒரு சவால்' என்று பிரதமர் நேரு அவர்கள் கூறுகிறார். தங்கள் உறக்க நிலைக்கு இது ஒரு சவால் என்றே மக்கள் உணர்ந்து விழிப்புற வேண்டும்.

சென்னை சர்க்காரின் அறிக்கை

தமிழ் நாட்டில் போதிய வேலை வாய்ப்பின்மையினால் தமிழ் மக்கள் வேலையைத் தேடித் தங்கள் உயிரைப் புல்லென நினைத்து, ஆபத்தான முறையில் கள்ளத் தோணிகளில் இலங்கைக்குப் போகிறார்கள்.

சுதந்திரம்பெற்றுப் பதினான்கு ஆண்டுகளாகியும் ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாவாசிகளுக்கு வேலை வாய்ப்பாகிய அடிப்படை உதவியைக் கூட சென்னை ராஜ்ய சர்க்காரால் செய்து தர முடியவில்லை. இதை மறைக்கச் சற்றும் ராஜதந்திரமற்ற முறையில், இக் கள்ளத் தோணி விவகாரத்துக்குப் பொறுப்பு இலங்கை தோட்ட முதலாளிகளே என்று தமிழ்நாட்டு சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டைமான் சுடச்சுடப் பதில் அளித்திருக்கிறார். "இக்கூற்று முற்றும் தவறு: உண்மை நிலைக்கு மாறானது" என்று கூறுகிறார்.

இலங்கையில் ஏற்கனவே தோட்டங்களில் வேலை செய்து வருபவர்களின் குழந்தை குட்டிகளுக்கு அங்கு வேலை தேடித் தருவதே பெரும் கஷ்டமாக இருக்கிறது. தோட்டங்களில் தொழிலாளர்கள் அளவுக்கு மீறியிருக்கிறார்கள் என்பதால் ஆயிரக்கணக்கான பூர்வீகத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு, இலங்கையிலேயே பிறந்து வளர்ந்து வருபவர்களுக்கு, வேலை மறுக்கப்படுகிறது. இவர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று போராடுவதே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேலையாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் இலங்கை தோட்ட முதலாளிகளின் தூண்டுதலின் பேரில் தான் இக் கள்ளக் குடியேற்றம் நடைபெறுகிறது என்ற தமிழ் நாட்டு சர்க்காரின் அறிக்கை அவர்கள் ஏதோ கனவு உலகத்தில், மயக்கத்தில் வாழ்கிறார்கள் என்றே எண்ணச் செய்கிறது என்கிறார் திரு தொண்டைமான்.

இலங்கைத் தோட்ட முதலாளிகளும் தங்கள் மீது அநியாயமான பழி சுமத்தியதாகக் கருதுகின்றனர். இலங்கை தோட்ட முதலாளிகள் சங்கம் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனரிடம் சென்னை சர்க்காரின் அறிக்கையை ஆட்சேபித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆக, சென்னை சர்க்காரால் தமிழ் நாட்டு ஏழை மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை; ஆனால் அவர்களிடம் இலங்கைவாழ் மக்கள் அனுதாபம் கூடக் கொள்ள முடியாதபடி ஓர் அறிக்கை வெளியிட்டு நிரந்தரமான கெட்ட பெயரைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

சர்க்கரைப் பஞ்சம்

"உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று பிரதமர் நேரு முதற்கொண்டு, நேற்று சேர்ந்த காங்கிரஸ் தொண்டர் வரை கூப்பாடு போடுகின்றனர். அதுதான் நமது வறுமையைப் போக்கும் என்கின்றனர். இன்று இந்தியப் பிரஜை "எதற்காக உற்பத்தியைப் பெருக்குவது?" என்று கேட்கத் தொடங்கி யிருக்கிறார்.

இந்திய நாட்டுக்குச் சர்க்கரையை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த காலத்தில் விசை ஐந்தரை அணவுக்கு நிறையக் கிடைத்தது. இன்று நமது தேவைக்கு அதிகமாகவே இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியாகிறது. இருப்பினும் இரண்டேகால் ரூபாய் கொடுத்தாலும் சர்க்கரை கிடைக்கவில்லை என்று மக்கள் அழுகிறார்கள்! இதற்குத்தானா

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சாமான்யப் பிரஜை கேட்கிறார்.

வெளிநாட்டுச் செலாவணி நமக்குத் தேவைப்படுவதால் வெளி நாடுகளில் நஷ்டத்துக்குச் சர்க்கரையை விற்க நேரிட்டிருக்கிறது. அந்த நஷ்டத் தொகையை இந்தியாவில் சர்க்கரை வாங்குபவன் தலையில் தான் கட்ட வேண்டியிருக்கிறது. இதனால் இன்று சர்க்கரை விலை உலகில் எங்குமில்லாத முறையில் உயர்ந்திருக்கிறது.

அடுத்தபடி கரும்புச் சாகுபடியாளர்களுக்குக் கொடுக்கும் விலையைக் குறைக்கும் திட்டம் வரும். சர்க்கரை உற்பத்தியில் செலவாகிற தொகையைக் குறைத்து அமெரிக்காவிலும் வேறு நாடுகளிலும் குறைந்த விலையில் விற்கப் பார்ப்பார்கள் நமது சர்க்கார்.

பொதுவாக, பொருள் உற்பத்தி அதிகமானால், விலை குறைந்து, மக்கள் மகிழ்ச்சிக்கு வழி ஏற்படும் என்று சொல்வார்கள். ஆனால் அபரிமிதமாகக் கடன் வாங்கிய சர்க்கார், கண்ட்ரோல்கள் போட்டு அரசாங்கத்தை நடத்தினால் உற்பத்தி பெருகப் பெருக நாட்டு மக்களுக்குக் கஷ்டமும் வறுமையும் சர்க்காரின் கெடுபிடியும்தான் அதிகமாகும் என்னும் கசப்பான உண்மையை இந்தச் சர்க்கரை விவகாரம் எடுத்துக் காட்டுகிறது. இன்று சர்க்கரை வாங்கும் ஒவ்வொருவனும், சர்க்கரை சேர்த்த காப்பி, டீ குடிக்கும் ஒவ்வொருவனும் வெளிநாட்டுக் கடன்களை அடைக்க வரி செலுத்துகிறான். தீராத கடனுக்கு வட்டி செலுத்துகிறான்.

சமீபத்தில் மேனாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பி வந்த மந்திரி திரு சி. சுப்பிரமணியம், இன்று தமிழ் நாட்டில் பதினைந்து புதுக் காசுக்குக் கிடைக்கக்கூடிய தக்காளிப் பழம், நாற்பத்தைந்து ஆண்டுகளாக சோஷலிஸத்தைக் கடைப்பிடித்து வரும் ருஷ்ய நாட்டில் இருபத்தைந்து ரூபாய்க்கு விற்கிறது என்று சொல்லுகிறார்.

சோஷலிஸம் பெரிய யந்திரங்களைச் சிருஷ்டிக்கலாம். அணுகுண்டுகளைச் சிருஷ்டிக்கலாம். விண் வெளியில் பறக்கக்கூடிய ராக்கெட் விமான சாதனங்களைத் தயாரிக்கலாம். ஆனால் மக்கள் அன்றாடம் உண்டு வாழ்வதற்குரிய பொருள்களைச் சிருஷ்டிக்காது.

கம்யூனிஸ்ட் சீனா தனது உணவுத் தேவைக்கு முதலாளித்துவ நாடான கனடாவிடம் யாசிக்கிறது!

ஆயினும் காங்கிரஸ் சர்க்காரின் சோஷலிஸப் பிரமை தீரவில்லை!

ஒரு கடிதம்

நவசக்திப் பத்திரிகையின் 5—8—61ந் தேதி இதழில் "சிவகங்கை வக்கீல்கள் க. கட்சியைக் கைவிட்டனர்" என்று கொட்டை எழுத்துக்களில் ஒரு செய்தி பிரசுரமாகியிருக்கிறது. மேற்படி செய்தியில் கண்டுள்ள விஷயங்கள் உண்மைக்கு விரோதமாகவும், சற்றும் ஆதாரமற்றதாகவும் இருப்பதால் அதை மறுத்து அப் பத்திரிகைக்கு எழுதியுள்ளேன். தங்கள் பத்திரிகை மூலமாகவும் அந்தச் செய்தியை மறுக்க வேண்டியது அவசியம் என்று கருதியே இக்கடிதம் எழுதியிருக்கிறேன்.

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பதாக வக்கீல் சங்கத்தின் தூது கோஷ்டியினர் தம்மை 2—8—61ந் தேதி பேட்டி கண்டபோது தெரிவித்ததாக மந்திரி திரு பக்தவத்ஸலம் கூறியது நவசக்திப் பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. சிவகங்கை வக்கீல்கள் காட்டியுள்ள 'நல்வழி' குறித்து திரு பக்தவத்ஸலம் பெருமிதம் கொண்டிருக்கிறார்.

திரு பக்தவத்ஸலம் வருகை பற்றி வக்கீல் சங்கத்துக்கு அறிவிப்பு கிடையாது. அவரைச் சந்திக்கும்படி அழைப்பும் கிடையாது. அவரைப் பேட்டி காணுவதாக வக்கீல் சங்கத்தினர் நினைக்கக்கூட இல்லை. அவரைக் கண்டு அபிப்பிராயம் தெரிவிக்கும்படி வக்கீல் சங்கம் யாருக்கும் அதிகாரம் அளிக்கவில்லை. தேர்தலில் எந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்கவேயில்லை. வக்கீல் சங்கத்துக்குத் தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், நிர்வாகஸ்தர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் யாரும் மந்திரியைச் சங்கத்தின் சார்பில் பேட்டி காணவில்லை. வக்கீல் சங்க அங்கத்தினர்களில் பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களும் கட்சிச் சார்பற்றவர்களும் இருக்கிறார்கள். இந்த நிலைமையில் வக்கீல்கள், காங்கிரஸை ஆதரிப்பதாகப் பிரசுரமாகியிருக்கும் செய்தி வியப்பாக இருக்கிறது.

ஒருசில வக்கீல்கள் திரு பக்தவத்ஸலத்தைச் சந்தித்தது உண்மை. ஆனால் அவர்களில் யாரும் சங்கத்தின் பிரதிநிதியல்ல; வக்கீல்களின் பிரதிநிதியுமல்ல. திரு பக்தவத்ஸலம் கூறியதுபோல் யாராவது அபிப்பிராயம் தெரிவித்திருந்தால் மந்திரியின் தயவைப் பெறும் நோக்கத்துடன் அவ்வாறு திரித்துக் கூறியிருக்க வேண்டும்.

இத்தகைய ஆதாரமற்ற செய்திகளைப் பிரசுரிப்பது காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தின் 'நேர்மை'க்கு எடுத்துக்காட்டாகும்.

சிவகங்கை
8—8—61

ஆர். ராமானுஜம்
அட்வகேட்

பணத்தால் வாங்கக்கூடிய மோட்டார் என்ஜின் ஆயில்களுள் தலைசிறந்தது...
சக்தி விரயமாவதை 50 சதவிகிதம் குறைத்து உதவுகிறது.

புதிய மல்ட்டிக்ரேட்

(சாம்பல் உண்டாகாது!)

சக்தி விரயமாவதை 50 சதவிகிதம் குறைத்து உதவுகிறது இப்புதிய என்ஜின் ஆயில். கடந்த பத்தாண்டுக் காலத்திலே என்ஜின் லூப்ரிகேஷன் சம்பந்த அதிமுக்கியமான முன்னேற்றம் இதுவே என்று நிபுணர்கள் விவரிக்கின்றனர். பல்லாண்டுகளாக ஆராய்ச்சி, ஆய்வுக்கூடங்களிலே விரிவான பரிசோதனைகள், சாலைவழியே 12½ இலட்சம் மைல்கள் வெள்ளோட்டம்.........அனைத்திலும் தேறி வந்துள்ளது இப்புதிய ஷெல் X-100 மல்ட்டிக்ரேடு.

புதிய மல்ட்டிக்ரேடு உங்கள் காருக்கு வழங்கும் நன்மைகளாவன:
உங்கள் என்ஜினைச் சுத்தமுடன் வைத்திருக்கிறது இப்புதிய என்ஜின் ஆயில். மேலும் கூறின்:

* கிளம்புவதிலே அதிக விரைவு.
* வேகம் ஏற ஏற, கூடுதலான குஷி.
* லிட்டரொன்றுக்கு அதிக கிலோமீ. ஓட்டம்.
* பாட்டரியின் ஆயுள் பலம் நீடிப்பு.
* என்ஜின் ஆயுள் பலம் அதிகரிப்பு.
* ஒருமுறை என்ஜின் ஆயில் சேர்த்த பின், மறுமுறை அணுகுமுன் அதிககால உழைப்பு.



புதிய ஷெல் X-100 மல்ட்டிக்ரேடு சாம்பல் உண்டாக்காது. பணத்தால் வாங்கக்கூடிய மோட்டார் என்ஜின் ஆயில்களுள் தலைசிறந்தது. ஆரம்பச் செலவு அதிகமானாலும், என்ஜினுக்கு அபார ஆயுள் பலம், போகப்போக சிக்கனம் அதிகம்.



[illegible]

[illegible] அடிக்கடி வடித்து, அழுக்குக் கழுவி, நிரப்பிக்கொள்வீர் புதிய ஷெல் X-100 மல்ட்டிக்ரேடு
—பணத்தால் வாங்கக்கூடிய மோட்டார் என்ஜின் ஆயில்களுள் தலைசிறந்தது.
[illegible] — [illegible] ஷெல் சேவை நிலையம்!

2-20-8

அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்

அத்தியாயம் இருபது

அவரையும் இவரையும் தராசில் போட்டுப் பார்த்தார் அனந்தசாமி. இன்னொரு ஸப் ரிஜிஸ்டிரார் பரம வைஷ்ணவர். வைஷ்ணவரல்லாத பிராம்மணர்களோடோ, பிராம்மணரல்லாதவர்களோடோ பேசும்பொழுது பூநூலைக் காதில் மாட்டிக் கொண்டு விடுவார். ஆபீசுக்கு வரும்போது பூநூலைக் குறுக்கே போடாமல் மாலையாகப் போட்டு, அதாவது பிராம்மண்யத்தின் மீது வெளி உலகத் தீட்டுகள் படாமல் காப்பாற்றிக் கொண்டிருப்பார். இது பலருக்குத் தெரியாது. சட்டைப் பித்தானைக் கழற்றிப் பார்த்தால் தெரியும். அப்படிக் கழன்ற சட்டை வழியாக அனந்தசாமி ஒரு தடவை இதைப் பார்த்திருக்கிறார். அந்த வைஷ்ணவர் சப் ரிஜிஸ்டிரார் ஆட்சி செய்த ஊர் சற்றுப் பணம் பெருத்த ஊர். கடை கண்ணிகள், மொத்த வியாபாரம், விவசாயத்தை முண்டி முண்டிச் செய்கிறவர்கள்—எல்லாம் கை ஓங்கின இடம். வேறு சப் ரிஜிஸ்டிரார் நிலையம் சுற்றிலும் வெகு தூரத்துக்கு இல்லாததால் எப்பொழுதுமே கூட்டம் அதிகமாயிருக்கிற வழக்கம். வாசல் வராந்தாவும் போதாமல் வாதா மரத்தடியிலும் தூங்குமூஞ்சி மரத்தடியிலும் கிராமத்தார்களும் ஊர்க்காரர்களும் காத்திருப்பார்கள். உள்ளே ஸப் ரிஜிஸ்டிராரின் மேஜைக்கு மேல் பதிவுக்கு வந்த சாசனங்கள் இரண்டு அடுக்குகளாக அடுக்கி வைத்திருக்கும். ஓர் அடுக்கின் மீது சிவப்பாக ஒரு கண்ணாடிக் குண்டு பாரம். இன்னொரு அடுக்கின்மீது பிளாட்டிங் பேப்பர் விலகிப்போன ஒரு வெறும் கட்டை உட்கார்ந்திருக்கும். சிவப்புக் கண்ணாடிக் குண்டு அடுக்கிலிருந்த ஒவ்வொரு சாசனமாக எடுத்து, எடுத்து உரியவர்களைக் கூப்பிட்டுப் பதிவு செய்து கொண்டிருப்பார் ஸப் ரிஜிஸ்டிரார். வெளியே போய்ப் போய் வந்து கொண்டிருப்பான் மீசைக்கார டபேதார். திடீரென்று உள்ளே வருவான், மரக்கட்டைச் சாசன அடுக்கை என்னமோ ஆராய்வது போல் பார்ப்பான். நடுவிலிருந்த ஒரு சாசனத்தை உருவிக் கண்ணாடி அடுக்குக்கு மாற்றுவான். அனந்தசாமி ஒரு நண்பருக்குச் சாட்சி போடப் போய் இந்த மாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். வெகு நேரமாக அவர்களை யாரும் அழைப்பதாக இல்லை. திடீரென்று மீசைக்கார டபேதார் நண்பரிடம் வந்து என்னமோ சொன்னான். இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் ஐந்து ரூபாயை வாங்கிக் காக்கிக் கோட்டில் திணித்துக் கொண்டான். உள்ளே போனான். அவர்களுடைய சாசனம் மரக்கட்டை அடுக்கிலிருந்து கண்ணாடி அடுக்குக்கு மாறியது. சப் ரிஜிஸ்டிரார் கூப்பிட்டார். மகா விஷ்ணுவே சிரிக்கிறாற் போல மலர்ந்த முகத்தோடு வரவேற்றார். ஐந்து நிமிஷங்களில் பதிவு செய்து விடை கொடுத்து அனுப்பிவிட்டார்.

அவருக்கும் இவருக்கும் எவ்வளவு தூரம் என்று கணக்குப் போட்டுக் கொண்டார் அனந்தசாமி. இந்த சப் ரிஜிஸ்டிரார் இவ்வளவு அப்பாவியாக இருக்கிறாரே. ரங்கனை நம்பி இந்த அழகான பெண்ணை விட்டு......? அனந்தசாமியின் மனத்தில் எழுந்த கேள்வி பட்டென்று அறுந்துவிட்டது. சேச்சே... ரங்கனைக் கூட நமக்கு முழுதும் தெரியாதே...நேரே அவனை எங்கே பார்த்துப் பத்து நிமிஷமாவது பேசியிருக்கிறோம்! இந்த நிலையில் அவனைத்தான் எப்படிப் போக்கிரி என்று முடிவு கட்டுவது? இது வரையில் அவருக்கு ஏற்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் கூட நேரடியாக ஏற்படுத்திக் கொண்டவை அல்ல. இரண்டாவது, மூன்றாவது மனிதர்கள் மூலம் கிடைத்தவை. ஆகவே அந்தக் கேள்வியை முடிக்காமல் பதில் சொன்னார்.

"என்னமோ நல்லவர்களாக இருந்தால் சரி, பட்டணத்தில் எல்லாம் பத்துத் தினுசுகள் இருக்கும். எல்லாம்

நம் ஜாக்கிரதையில்தானே இருக்கிறது'' என்று மையமாகச் சொல்லி வைத்தார்.

"அதனால்தானே சிநேகிதர்கள் சிநேகிதர்கள் என்று அப்போதே பிடித்துச் சொல்லுகிறேன். சிநேகிதர்கள் மனசு வைத்தால்தான் எதுவும் நம்ம மனசுக்குச் சங்கடமில்லாமல் நடக்கும். எனக்கு உறவுக்காரர்கள் இல்லையா? இந்த மெட்ராஸிலேயே நூறு பேர்கள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் போகலாமோ?''

இருவரும் பேசும்பொழுது, டொக்கி நடு நடுவே வந்து சமையலறைக்கும் அம்மா படுத்துக் கொண்டிருக்கிற அறைக்குமாகப் போய்க் கொண்டிருந்தாள். சமையல் வேலை அவளுக்கு.

"குழந்தை பாவம், ராத்திரி வேறு கண் விழித்து விட்டு, சமையல் வேறு செய்ய வேண்டியிருக்கிறது'' என்றார் அனந்தசாமி.

"இது என்ன மாமா பெரிய கஷ்டம்!'' என்று சொல்லிவிட்டு "நீங்கள் சும்மாயிருக்கிறீர்களே? ஏதாவது சாப்பிடுகிறீர்களா? கொஞ்சம் காப்பி சாப்பிடுங்களேன்'' என்றாள்.

"வேண்டாம்.''

"டீ?''

"வேண்டாம்.''

"ராகிமால்ட்?''

"ம்ஹும்.''

"ஆரஞ்சு ரஸமாவது சாப்பிடுவீர்களா....?''

"ஒன்றுமே வேண்டாம்.''

"அதெல்லாம் முடியாது, மாமா! அதென்ன, நான் இவ்வளவு சொல்கிறேன். மாட்டேன் மாட்டேன் என்கிறீர்களே'' என்று ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஆரஞ்சு ரசம் கொண்டு வந்து, "இப்பொழுது என்ன பண்ணுவீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே நின்றாள் டொக்கி.

அனந்தசாமியின் மனம் நடுங்கிற்று. 'இவ்வளவு சமர்த்துப் பெண்ணையிருக்கிறதே. இதைப் போய், இந்த ரங்கன் பயல்...' என்று மனத்துக்குள்ளேயே முடிக்காத புலம்பலாகப், புலம்பிக் கொண்டார்.

அவர் விடைபெற்றுக் கொண்டு கிளம்பும் பொழுது கிழவர் சாப்பாட்டு உபசாரத்தைத் தட்ட வேண்டியிருந்தது. "இந்த மூக்கோட்டையை விட்டு நல்ல வீடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அப்பொழுது நீங்கள் வந்து சாப்பிடலாம்'' என்றார்.

"அதை முதலில் செய்யுங்கள். இந்த இடமே நன்றாக இல்லை. அதனாலேயே சிக்குப் படுத்துகிறதோ, என்னவோ?''

"என்ன செய்கிறது? வந்தவுடனே இதுதான் கிடைத்தது. வந்து புகுந்து விட்டால், பிறகு ஏதாவது பார்த்துக் கொள்ளலாம் என்று வந்தாயிற்று. நல்ல வீடாகக் கிடைக்கும். ரங்கன் கூடப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீங்களும் நல்லதாக உங்கள் கண்ணில் தென்பட்டால் சொல்லுங்கள்.''

அனந்தசாமி உள்ளே சிக்காய்க் கிடக்கிற அம்மாளிடமும் போய் விடை பெற்றுக் கொண்டார்.

"இவர்களிடத்திலும் எல்லாம் சொல்லியிருக்கிறேன்'' என்றார் கிழவர் அவனிடம்.

"சொல்லியிருக்கிறீர்களா? நானே சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். அவரும் ஊருக்குப் போய் விடுவார். நீங்கள்தான் வந்து பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைக்கு நல்ல வழியாகக் காண்பிக்க வேண்டும்'' என்றான்.

"எது நல்ல வழி?'' என்று மனத்துக்குள்ளே கேட்டுக் கொண்டே வெளியே வந்தார் அனந்தசாமி.

நாம் காண்பிக்கிற நல்ல வழி எதாக இருக்க முடியும் என்று யோசித்துக் கொண்டே வந்தார்.

மந்தைவெளி பஸ் ஸ்டாண்டுக்கருகே வந்தார். வழக்கத்துக்கு விரோதமாக விடியற்காலையிலேயே வீட்டை விட்டுக் கிளம்பி விட்டதால், குளித்துச் சாப்பிட வேண்டும் என்று வயிறு குமையவே, வீட்டுக்குப் போய்விடும் நோக்கத்துடன் மந்தைவெளி வழியாக ராயப்பேட்டை போகிற பஸ் நிற்குமிடத்தில் வந்து நின்றார். ஆபீசுக்குப் போகிற கூட்டத்தைக்கூடக் காணவில்லை. பத்துமணிக்கு மேலாகி விட்டது. நிற்க முடியாமல் பக்கத்திலிருந்த வெற்றிலைப்பாக்குக் கடையின் சார்ப்பு நிழலில் ஒதுங்கினார்.

"இப்பொழுதுதான் வருகிறீர்களா?'' என்று இரண்டு நிமிஷங்கள் கழித்துக் குரல் கேட்டது, மேற்கே.

திரும்பி வந்தார் அவர்.

கூலிங்கிளாசும், நறுக்கு மீசையும், உடம்பு தெரிகிற சட்டையும், சாணிநிறக் கால் சட்டையுமாக, ஸ்கூட்டரை நிறுத்திக் காலைத் தரையில் ஊன்றிக் கொண்டு நின்றான் ரங்கன். அகன்ற தோள்பட்டை, மார்பு, இரும்புப் பிடி போன்ற கைகள்.

"உங்களைத்தான் சார்...!''

"அடேடே! ஆமாம் சார், இப்பொழுதுதான் வந்தேன்!''

ரங்கன் ஸ்கூட்டரைப் பின்னுக்கு இழுத்து நிறுத்தி விட்டு இறங்கியே வந்து விட்டான்.

சற்றுத் தள்ளிநின்றுபோல நின்று, "அப்புறம்?" என்றான். அனந்தசாமி நிழலை விட்டு அவனிடம் போக வேண்டியிருந்தது. அவன் ஒதுக்குப்புறமாக நின்று பேச ஏதோ நினைத்தது போல் தோன்றியது.

"அம்மாளுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டான்.

"நன்றாக இருக்கிறது. பலஹீனம், அவ்வளவுதான். அது சரியாகிவிடும்."

"கவலை இல்லையே?"

"எதுக்குக் கவலை? ஜுரம் கூட நின்றுவிட்டது."

"அப்படியானால் சரி. கேட்கலாம் என்றுதான் நினைத்தேன்."


"உங்களைப் பற்றிக்கூடச் சொன்னார் அவர். நீங்கள் ரொம்பப் பிரியமாகப் பழகுகிறீர்கள், ரொம்ப நல்ல சுபாவம் என்று உங்களைப் பற்றித்தான் வெகு நேரம் சொல்லிக் கொண்டிருந்தார் அவர். உயிரை வைப்பார்கள் என்று சொல்வார்களே, அந்தமாதிரி பிரியமாய் இருப்பதாகச் சொன்னார்."

ரங்கன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அதை ஏற்றுக் கொண்டு முகம் மலர்ந்து நின்றான்.

"உங்கள்மேல் இவ்வளவு பிரியமாக இருக்கிறாரே அவரும்?"

"நான் சரியான சமயத்தில் வந்து காப்பாற்றினேன். அதுதான் காரணமாக இருக்க வேண்டும்" என்றான் ரங்கன் அனந்தசாமியிடம்.

எதிலிருந்து காப்பாற்றினாய் என்று கேட்கவில்லை அனந்தசாமிக்கு. அவருக்குக் கேட்கச் சங்கோசம். அவனே சொல்லத் தொடங்கினான்: "அந்த மாமா ரொம்ப நல்லவர். அதைவிட அந்த அம்மாள் நல்லவள். அதைவிட அந்தப்பெண் நல்ல பெண். இப்போர்ப்பட்ட ஆட்களை ஏமாற்ற எத்தனை பேர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள் இந்த மெட்ராஸில். அப்படித்தான்



மோசம் போகத் தெரிந்தாள் அந்தப் பெண். சமயத்தில் நான் காப்பாற்றினேன்?....அதை இந்த வெயிலில் உங்களை நிறுத்தி வைத்துக் கொண்டு சொல்ல வேண்டாம். சாவகாசமாக, நிதானமாகச் சொல்கிறேன். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

அனந்தசாமி தம் விலாசத்தைச் சொன்னார்.

''நான் வந்து பார்க்கிறேன். நீங்கள் எப்பொழுது இருப்பீர்கள்?''

''என்னைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. இப்பொழுது வீட்டுக்குத்தான் போகிறேன்.''

''சரி, நான் மத்தியானம் வந்து பார்க்கிறேன். மூன்று மணிவரையில் வீட்டில் தானே இருப்பீர்கள்?''

''ஆமாம்.''

''நான் வருகிறேன்...வெயிலில் நிற்கிறீர்களே. ஒரு டாக்ஸி வேண்டுமானால் வைத்து அனுப்பி விடுகிறேனே.''

''பரவாயில்லை, வேண்டாம்.''

''சரி, அப்பொழுது மத்தியானம் வந்து பார்க்கிறேன்'', என்று கூறிக் கிளம்பி விட்டான் ரங்கன். புதிதாக மாணவர்கள் அணியும் மோஸ்தரில் காட்சியளித்தது ரங்கனின் தோற்றம். நறுக்கு மீசை—மார்பையும் தோளையும் அகலமாகக் காட்டுவது போல உடம்பு தெரிகிற சட்டை; கீழே சாணி நிறக் கால் சட்டை; அதைப் பிடித்துக் கொள்ள ஒரு 'பெல்ட்டு'; கால் சட்டையின் பின்னால் ஒரு பாக்கெட்டு. இந்த வேஷத்துடன் போகும் யாரைப் பார்த்தாலும் சிரிப்பு வந்துவிடும் அனந்தசாமிக்கு. ரங்கனைப் பார்த்தபோதுகூட அப்படித்தானிருந்தது. ஆனால் அது இப்போது உள்ளுக்குள் அடங்கிவிட்டது. அவனுக்கு எந்த உடை போட்டாலும் தகும் என்று தோன்றியது. அவன் சிரிக்கிறபோதெல்லாம் வெகுநாட்கள் பழகி விட்ட ஒரு சுவாதீனம்—ஓர் அன்மை— இதுதான் அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. சரேலென்று எப்படி ஒட்டிக் கொள்ள முடிகிறது இவனால்? இம்மாதிரி வியந்து கொண்டே போனார் அவர், பஸ்ஸில் போகும்பொழுது.

வீட்டுக்குப் போனவர் குளித்துவிட்டு உலை நீரை வைத்தார். குழம்புக்குப் புளியை ஊறவைத்து விட்டுப் பருப்பை வேக வைத்தார்.

குடியிருக்கிறவர்களின் கூடத்துக் கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்தது.

மூன்று மணியை நினைத்துக் கொண்டிருந்தது அவர் மனசு. ஆச்சரியமாயிருந்தது அவருக்கு—எப்படி அவனை

இவ்வளவு எதிர்பார்க்கத் தொடங்கி விட்டோமென்று.

சமையல் முடிந்ததும், இடையில் ஒரு துண்டை மட்டும் உடுத்திக் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்தார். விழியை மூடி, மனத்தை மூடி, எண்ணம் செத்த சூன்யத்தில் லயித்துக் கொண்டார்.

கண்ணைத் திறந்து எழுந்து, இலையைப் போட்டுச் சாதத்தை எடுத்து வைத்துக் கொண்டதும் மங்களப் பாட்டியின் குரல் கேட்டது.

"என்ன சுவாமி, ஜபம் எல்லாம் ஆயிடுத்தா?"

"ஆய்விட்டது பாட்டி."

"சாப்பாட்டுக்கு உட்கார்ந்தாயிற்றா?"

"இப்பொழுதுதான் உட்கார்ந்தேன்."

"சாப்பிடுங்கள்."

"ஏன், என்ன விசேஷம்?"

"ஒன்றுமில்லை."

பாதி சாப்பிடும்பொழுது வந்தாள் பாட்டி. "ஒன்றுமில்லை. நீங்கள் நிஷ்டையிலே இருந்தீர்கள். உங்களைத் தேடிக் கொண்டு ஒரு பிள்ளை வந்தான். இப்படி வந்து நின்றான். எழுப்பாதீர்கள் என்று எனக்கு ஜாடை காட்டினான். வாசலில் போய் நின்றான். 'அவசியமாகப் பார்க்க வேண்டும் என்றால் மாடிக்குப் போய் உட்காருங்கள்' என்று சொல்லி அனுப்பினேன். மாடியில்தான் உட்கார்ந்திருக்கிறான்."

"அப்படியா? எப்பொழுது வந்தார்?"

"வந்து ஒருமணி நேரமாச்சு சுவாமி."

"ஒரு மணி நேரமாகவா காத்துக் கொண்டிருக்கிறார்."

"ஆமாம், சுவாமி."

"எழுப்பக் கூடாதோ?"

"அவருக்கே இஷ்டமில்லை. ஏன், எனக்குக் கூடத்தான் இஷ்டமில்லை. மனக் குரங்கைக் கட்டிப் போட்டு ஆனந்தமா இருப்பவர்களை யாராவது எழுப்புவார்களோ..."

"அது சரி...மனுஷர்களைவிட அதுவா பெரிது...?"

"அது என்ன சுவாமி அப்படிச் சொல்லி விட்டீர்கள்?......புதிதாக என்னமோ சொல்கிறீர்களே?" என்றாள் மங்களப் பாட்டி.

"வெகு நேரமாகக் காக்க வைத்து விட்டேனே என்று சொன்னேன். வேறு ஒன்றுமில்லை."

"அவருக்கு ஒன்றும் அவசரமில்லை. நீங்கள் இருந்து சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்றாள் பாட்டி.

கை கழுவிவிட்டு மாடிக்குப் போன பொழுது ரங்கன் அலமாரியிலிருந்து ஒரு பெரிய புத்தகத்தை எடுத்து, அதில் முழுகிக் கிடந்தான். (தொடரும்)

கொடி பறந்தது!

ஜெகசிற்பியன்

இறைவாணத்தில் செருகி வைத்திருந்த ஐந்து பைசா கார்டுக் கடிதமொன்றை எடுத்துக்கொண்டு வெளியே வந்த பொன்னம்மாள், "என்னு, தே! இந்தக் கடிதாசியைப் பார்த்தியா?" என்று கேட்டாள் சற்றே கடுகடுத்த குரலில்.

மாட்டுச் சாணக் குவியலில் வைக்கோல் கூளத்தைக் கொட்டிக் கால்களால் 'தொம், தொம்' மெனத் துவைத்து மிதித்துக் கொண்டிருந்த வேலாண்டி சாவதானமாக நிமிர்ந்து, "இன்னு, கடிதாசியாம்? உன் பொண்ணுகிட்டேயிருந்து வந்திருக்கா?" என்றான்.

"பின்னே எங்கேயிருந்து வரும்?" என்று கூறியவாறு அவனருகில் வந்து நின்ற பொன்னம்மாள், இரும்புக் குடத்திலிருந்த தண்ணீரை எடுத்துச் சாணக் குவியலின்மேல் ஊற்றிக் கொண்டே, "தபால்காரரே கடிதாசியைப் படிச்சுக் காட்டினாரு. இது அவளுக்கு ஏழாம் மாசமாம். ஊருக்கு வந்து கூட்டிக்கிட்டுப் போகணும்னு எழுதியிருக்கிறாள்" என்று விஷயத்தை விளக்கினாள்.

வேலாண்டி பதில் ஒன்றும் சொல்லாமல், சாணக் குவியலை மிதித்துக் கொண்டே இருந்தான். கலவை பக்குவப்பட்டது. அவன் அந்த உளையிலிருந்து வெளியே வந்தான். தன் கணுக்கால் வரை அப்பியிருந்த சாணத்தை ஓர் ஓட்டாஞ் சில்லியால் வழித்தெறிந்து விட்டுக் குத்துக் காலிட்டு உட்கார்ந்து, கூட்டிக் குழப்பிய சாணக் கலவையைத் தேங்காய்ப் பருமனுக்கு உருண்டை உருண்டையாகப் பிடித்து அவற்றை வைக்கோல் கூளத்தில் உருட்டிப் புரட்டிப் பக்கவாட்டில் தள்ளி விடலானான். கையிலிருந்த கடிதாசியை இறைவாணத்தில் செருகி வைத்து விட்டுத் திரும்பி வந்த பொன்னம்மாள் தன் சேலைத் தலைப்பை இழுத்துச் சுற்றிக் கொண்டு உட்கார்ந்து, வேலாண்டி உருட்டிப் போடும் சாண உருண்டைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் புன்தரையில் ஓங்கி அறைந்து விராட்டி தட்ட ஆரம்பித்தாள். இருவரும் மௌனமாகத் தமது வேலையில் ஈடுபட்டிருந்தனர். ஒன்றரை கிரௌண்டு அளவுள்ள அந்தக் காலி மனையின் அரைப் பகுதி வரை விராட்டி வட்டங்கள் வியாபித்துக் கொண்டிருந்தன.

கடைசி உருண்டையைப் பிடித்துப் போட்டு விட்டு நீண்ட பெருமூச்சுடன் எழுந்த வேலாண்டி, கைகால்களைக் கழுவிக்கொண்டு முண்டாசை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்தவாறு, குடிசைக்கு எதிரே கிடந்த ஒரு நார்க் கட்டிலில் போய்ச் சோர்வுடன் உட்கார்ந்தான். பொன்னம்மாளும் தன் வேலையை முடித்துக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள். உள்ளே சட்டிப் பானைகளை உருட்டும் சத்தம் கேட்டது.

"என்னு, தே! பொண்ணுகிட்டேயிருந்து கடிதாசி வந்திருக்குன்னு சொன்னேன், கம்முன்னு வாயை மூடிக்கிணு இருக்கியே?" என்று கேட்டுக் கொண்டே ஓர் அலுமினியக் கிண்ணியில் நீராகாரத்தை நிறைத்துக் கொண்டு வெளியே வந்தாள் பொன்னம்மாள். வேலாண்டி அதை வாங்கி 'மடக், மடக்' கெனக் குடித்துத் தீர்த்தான். அவனுடைய தலை உடலெங்கும் வியர்வை வாய்க்காலெடுத்து வழிந்தது.

"பொண்ணைக் கட்டிக் கொடுத்து அனுப்பி ரெண்டு வருஷங்களுக்கு மேலே ஆகுது. இன்னும் ஒரு தபாகூட போய்ப் பார்க்கல்லே. அவளும் குளியாம நின்னுக்கிட்டிருக்கிறாளாம். இப்பவாச்சும் போயி கூட்டியாற வேணுமா? இல்லேன்னு அந்தச் சம்பந்தி ஊட்டாரு என்ன நினைப்பாங்க? நம்ம பொண்ணையில்லே வாய்க்கு வந்தபடியா வைஞ்சு கொட்டுவாங்க?.... இன்னு, தே! நான் பாட்டுக்குச் சொல்லிக்கிட்டே இருக்கிறேன்; நீ பாட்டுக்குச் செக்கு உலக்கை மாதிரி உட்கார்ந்துகிட்டே இருக்கியே!"

இவ்வளவு நேரம் சாந்த சொரூபிபோல் உட்கார்ந்து கொண்டிருந்த வேலாண்டிக்கு ஜிவ்வெனக் கோபம் வந்து விட்டது. அவன் தன் கையிலிருந்த அலுமினியக் கிண்ணியை வீசியெறிந்து விட்டு, "இன்னும்மே, நல்லா காட்றே! இவன்னு ஊருக்குப் போயி உன் பொண்ணைக் கூட்டியாறதுன்னு சும்மாப் போச்சா? கையிலே பத்தோ, பதினைஞ்சோ இருக்க வேணுமா? அதுக்கு எங்கே போறது? உன் பாட்டனா இங்கே கொட்டி வைச்சிருக்கிறான்?" என்று எரிந்து விழுந்தான்.

"கொட்டி வைச்சிருக்கிற இடத்திலே போய்க் கேட்கிறது! இங்கே குந்திக்கினு மோட்டு வளையைப் பார்த்து எண்ணமிட்டுக்கினு இருந்தா மட்டும் போறுமா? உனக்கு எப்போத்தான் விடியும்?"

"ஆமாண்டி! இனிமே அங்கே போய்க் கேட்டா, ஜோட்டடிதான் கிடைக்கும். பொண்ணு கண்ணாலத்துக்குன்னு வாங்கின அந்த இருபத்தைஞ்சு ரூவாயே இன்னும் அடைஞ்சபாடில்லே. மாசா மாசம் சம்பளம் கொடுக்கிற போதெல்லாம் அவங்களும் விடாம கேட்கிறாங்க; நானும் பல்லேக்கில்லேக் காட்டி சால்ஜாப் சொல்லிக்கினு வர்றேன். இதுக்கு மேலே அவங்ககிட்டே எப்படிக் கேட்கிறது?" என்று இரைந்தான் வேலாண்டி.

கீழே உருண்டு கிடந்த கிண்ணியை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த பொன்னம்மாள் சீற்றம் தணிந்தவளாய், "அப்போ, இதுக்கு என்னதான் பண்ணப் போறியாம்?" என்றாள்.

வேலாண்டி பதிலொன்றும் சொல்லவில்லை. அவன் பார்வை எதிரேயிருந்த ஓலைக் குடி

சையின்மீது பசுமைப் பசேலெனப் பூவும் பிஞ்சுமாகப் படர்ந்து கிடந்த பூசணிக் கொடிகளை நோக்கிச் சென்றது. உறங்கிக் கொண்டிருக்கும் தாயின் மார்பின்மேல் கையையும் காலையும் ஆட்டி அசைத்துத் துழாவியபடி ஏற முயலும் குழந்தையைப் போல் அந்தக் குடிசையின் கூரைவரை ஏறிப் படர்ந்திருந்த பூசணிக் கொடிகளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவன், சற்று நேரம் கழித்து ''இது என்ன, மார்கழி மாசமா?..... அப்போ, பங்குனி மாச வாக்கிலே ஊருக்குப் போய் நம்ம பொண்ணை அழைச்சுக்கிட்டு வரலாம்...'' என்று முணுமுணுத்தான்.

பொன்னம்மாளின் செவிகளில் இந்த முணுமுணுப்பு விழத்தான் செய்தது. எதை நம்பிக்கொண்டு தன் கணவன் இப்படிச் சொல்கிறான் என்பதை அவள் உடனே புரிந்து கொண்டாள். இதனால் ஓரளவு திருப்தியடைந்தமாதிரியும் காணப்பட்டாள்.

''நான் கொஞ்ச நேரம் இப்படி சாய்கிறேன். அதுக்குள்ளாற அந்த மாடுகளுக்குப் போட்டுப் புண்ணாக்கு கலக்கி வை. சரியா நாலு மணிக்கெல்லாம் என்னை உசுப்பிவிட்டுடு!'' என்று சொல்லிக்கொண்டே நார்க் கட்டிலில் தன் உடம்பைக் கிடத்தினான் வேலாண்டி.

கணவன் சொன்ன வேலைகளைக் கவனிக்கச் சென்றாள் பொன்னம்மாள்.

வேலாண்டி கண்ணை மூடி மூடித் திறந்தான். அவன் உடம்பு களைத்திருந்த அளவுக்கு மனம் களைப்புறவில்லை. கிராமத்திலிருந்து அவனுடைய மகள் செல்லாயி எழுதியிருக்கும் அந்தக் கடிதமே அவனது நெஞ்சின் மடிப்புகளில் சிக்கிச் சுழன்று உறுத்திக் கொண்டிருந்தது.

பொன்னம்மாள் அவனைக் கோபித்துக் கொண்டதிலும் நியாயம் இல்லாமலில்லை. செல்லாயி அவர்களுக்கு ஒரே பெண். அவள் கல்யாணம் செய்துகொண்டு கணவனோடு கிராமத்துக்குப் போய் இரண்டு வருஷங்களாகின்றன. இதுவரை ஒரு முறைகூட அவள் தாய் வீட்டுக்கு வரவில்லை; பெற்றோரும் பெண்ணைப் போய்ப் பார்க்கவில்லை. பந்த பாசத்தை அடிப்படையாகக் கொண்ட இவர்களின் இந்தப் போக்குவரத்து அபிலாஷையைக் கேவலம் பத்தே பத்து ரூபாய்தான் குறுக்கே நின்று தடுத்துக் கொண்டிருக்கிறது என்றால், அந்தப் பத்து ரூபாயின் மகிமையை என்னென்று சொல்வது?

வேலாண்டியைப் பற்றி அறிந்தவர்களுக்கு இப்படி வியப்படையத் தோன்றுது. காரணம், அவனுடைய மாத வருமானமே முப்பத்தொரு ரூபாய்தான். 'அது என்ன, ஒரு ரூபாய் சொச்சம்?' என்று கேட்கத் தோன்றுகிறதா? இந்தச் சிறிய கேள்விக்குப் பதில் அறிய அந்தா தெரியும் அந்தப் பெரிய பங்களாவுக்குப் போயாக வேண்டும்.

ஸ்ரீமான் சுந்தரமூர்த்தியை யாருக்கேனும் தெரியாமலிருக்க முடியுமா? ஆகஸ்டு 47-க்குப் பின் அவர் பெரிய தேசபக்தர் என்று பெயரெடுத்திருப்பவராயிற்றே!

1952-ல் நடந்த பொதுத் தேர்தலின்போது ஓர் அபேட்சகர், 'தம்மைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்தால் தமது தொகுதியிலுள்ள ஒவ்வொரு விதவை வாக்காளருக்கும் தம் சொந்தச் செலவில் ஓர் ஆப்பச் சட்டியும் அடுப்பும் இலவசமாக வழங்கப்படும்' என்று சுவரொட்டி விளம்பரம் செய்ததும், உடனே எதிர்க் கட்சி அபேட்சகர், 'இது தேர்தல் சட்டத்துக்கு முரணான வாக்குறுதி; தேர்தல் முடியட்டும், டிரிபூனல் கோர்ட்டில் ஒரு கை பார்த்துவிடுகிறேன்' என்று மேடைகளில் சண்டப்பிரசண்டம் செய்யவே, தமது அந்த 'அமங்கலி' தான அறிவிப்பைச் சந்தடி செய்யாமல் வாபஸ் வாங்கிக் கொண்டதுமான ஒரு வேடிக்கை விஷயம் பத்திரிகைகளில் அடிபட்டுக் கொண்டிருந்ததே, அதற்கெல்லாம் காரணம் ஸ்ரீமான் சுந்தரமூர்த்திதான்.

சரி; இதுதான் மறந்துபோய்விட்டதென்றால், அவர் ரொம்பக் காலமாகக் குடியிருந்து வந்த இருபது ரூபாய் வாடகை வீட்டைக் காலி செய்துவிட்டு, மக்கள் பிரதிநிதியான மூன்றே வருஷங்களுக்குள் ஓர் இரண்டடுக்கு மாடி வீடு கட்டிக்கொண்டு குடிபோனாரே; அந்தப் 'புதுமனை புகுவிழா'வில் பொறுக்கியெடுக்கப்பட்ட இருநூறு பெரிய மனிதர்களை மட்டும் அழைத்து அவர்களுக்குத் தடபுடலான விருந்து நடத்தி முடித்துவிட்டு மறுநாள் பத்திரிகைகளில் ஐயாயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் அளித்ததாகச் செய்தி வரும்படி செய்தவரை அதற்குள்ளாகவா மறந்து போயிற்று?

எனவே, அவரைத் தெரியாவிட்டாலும் தெரிந்தமாதிரி நினைத்துக் கொண்டு அவருடைய அழகிய பங்களாவுக்குள் நுழையலாம்.

அந்தக் கண்கவர் பங்களாவை வர்ணிக்க வேண்டுமா? அது வீண் வேலை; தேவையும் இல்லை. ஆனால், அதோ கூடத்தறையிலே போடப்பெற்றிருக்கும் சோபாவில் ஒய்யாரமாகச் சாய்ந்து துப்பறியும் நாவல் புத்தகமொன்றை எழுத்துக் கூட்டி இராகம் போட்டுப் படித்துக் கொண்டிருக்கிறாளே ஓர் அம்மையார், அவளையாவது கொஞ்சம் வர்ணிக்க வேண்டும்போல் இருக்கிறது. ஏனென்றால் அவள்தான் ஸ்ரீமான் சுந்தரமூர்த்தியின் தர்ம பத்தினி. ஆனால் கழுதையைப் படம் பிடித்த பிறகு குட்டிச்சுவரைத் தனியாகப் படம் பிடிக்க வேண்டுமா, என்ன? வேண்டாம்!... எனினும், தனது கணவர் 'பெரிய' மனிதரானதும் அந்த அம்மையாரிடம் புதிதாக ஏற்பட்டுள்ள பல்வேறு குண விசேஷங்களில் ஒன்றை மட்டும் இங்கு அவசியம் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். அதாவது, அவளுக்குத் தான் உபயோகிக்கும் எந்தப் பொருளும் எவ்வித கலப்படமுமின்றிச் சுயமாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உண்டு. குறிப்பாகப் பால், தயிர், வெண்ணெய், நெய் முதலானவற்றில் கடுகளவு கலப்படமும் இருக்கவே படாது. நான்கு வேளையும் சுயமான பசும் பாலில் குருவி இரத்தம்போல் இறக்கிய காப்பி 'டிகாக்ஷ'னைக் கலந்து உதடுகள் ஒட்ட ஒட்டப் பருக வேண்டும் என்பதில் அலாதிப் பிரீதி. ஆனால் அவளுடைய இந்த ஆசைக்குப் பால்காரரும் நெய்க்காரரும் அடிக்கடி சோதனை கொடுத்து வந்தார்கள். இதனால் கோபமுற்ற அம்மை

யார், தன் கணவரிடம் சொல்லி, மக்கள் மன்றத்தில் கலப்படம் சம்பந்தமாக ஒரு கேள்வியையே எழுப்பச் செய்து பார்த்தாள். அதிலும் உரிய பலன் உடனடியாகக் கிடைக்காமற் போகவே, சொந்தத்தில் மூன்று கறவை மாடுகள் வாங்கிவிட வேண்டியது என்ற முடிவுக்கு வந்தாள். மறு வாரமே, அவள் வீட்டுப் புறக்கடைக்கு டில்லி எருமை மாடு ஒன்றும், ஹோசூர் பசுக்கள் இரண்டும் வந்து சேர்ந்தன!

மாடுகள் வாங்கி விட்டால் மட்டும் போதுமா? அவற்றைப் பராமரிக்க ஆள் வேண்டுமே? இந்த வேலைக்கென்று வேலாண்டி பிடிபட்டான்!

வேலாண்டி ஏற்கெனவே மூன்று எருமை மாடுகளை வைத்துக் கொண்டு பால் வியாபாரம் பண்ணியவன். ஆனால், பாலில் தண்ணீரைக் கலக்கும்—அல்லது தண்ணீரில் பாலைக் கலக்கும்—ரஸவாதத் திறமையை அவன் கற்க வில்லையாதலால் இந்தப் பட்டணக் கரையிலிருந்து பால் வியாபாரம் செய்து 'குப்பை கொட்ட' அவனால் முடியவில்லை. மாடுகளை விற்றுப் போட்டுப் பிண்ணாக்குக் கடனை அடைத்துவிட்டு 'அம்போ' என்று நின்ற நிலையில்தான் இந்த வீட்டுக்கு அவன் வந்து சேர்ந்தான். அன்று முதல் சுந்தரமூர்த்தியின் வீட்டிலே சுயமான கெட்டிப் பால் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. ஸ்ரீமதி சுந்தரமூர்த்தி கெட்டிக்காரிதான்!

அவளுடைய கெட்டிக்காரத்தனத்துக்கு இன்னொரு எடுத்துக்காட்டும் உண்டு. மூன்று மாடுகளைத் தினமும் கழுவிக் குளிப்பாட்டி, அவற்றுக்கு வேண்டிய தீவன வகையறாக்களைப் புகட்டி, இரண்டு வேளையும் அளவு குறையாமல் பாலைக் கறந்து கொடுத்துவிட்டு, மீதமுள்ள நேரத்தில் தோட்ட வேலையையும் கவனித்துக்கொள்ள வேண்டியது வேலாண்டியின் பொறுப்பு. இதற்கு மாதம் முப்பது ரூபாய் சம்பளம். இந்த ஏற்பாட்டைச் செய்தவள் ஸ்ரீமதி சுந்தரமூர்த்திதான். இது என்ன, இலேசுப்பட்ட கெட்டிக்காரத்தனமா? வறுமை மலிய மலிய உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைய வேண்டியதுதானே!

மாடுகள் வாங்கிய ஆறாவது மாசம் ஒரு சிறிய சம்பவம் நிகழ்ந்தது. ஒரு நாள் ஸ்ரீமதி சுந்தரமூர்த்திக்கு இலேசான காய்ச்சல். அரசாங்க விருந்து ஒன்றில் கலந்து கொண்டு வந்தபின் ஏற்பட்ட அஜீர்ணக் காய்ச்சல் அது. உடனே ஊரிலிருக்கும் பெரிய டாக்டர் ஒருவர் பறந்தடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். நூறு ரூபாய்க்கு 'பிரிஸ்கிரிப்ஷன்' எழுதிக் கொடுத்து விட்டுத் தமது மேலான 'அட்வைஸ்' ஒன்றையும் அருளி விட்டுப் போனார் அந்த டாக்டர்: "குடியிருக்கும் வீட்டில் மாடுகளை வைத்து வளர்ப்பது சுகாதாரத்துக்குக் கேடு. உங்கள் வீட்டிலிருக்கும் மாடுகளை உடனே அப்புறப்படுத்த வேண்டும். இல்லையானால் இந்தமாதிரி காய்ச்சல் அடிக்கடி வந்து கொண்டுதான் இருக்கும்."



'வீட்டில் பசு வளர்ப்பது லட்சுமியைக் குடி வைத்திருப்பது போல' என்ற பழங்காலத்து நம்பிக்கைகளையெல்லாம் இந்தக் காலத்து 'ராக்கெட் உலகம்' ஏற்றுக் கொள்ளுமா? அதிலும், தனது 'அல்சேஷியனை'த் தூக்கிக் காரில் வைத்துக் கொள்ளாமல் வெளியே போவது அநாகரிகம் என்று எண்ணும் ஸ்ரீமதி சுந்தரமூர்த்தியால் ஏற்றுக்கொள்ள முடியுமா? டாக்டரின் அந்த மேலான யோசனைப் படி, அவ்வீட்டின் புறக்கடையில் கட்டிப் போட்டிருந்த மூன்று மாடுகளும் மறுநாளே அங்கிருந்து இடம் மாறிப் போய் விட்டன.

எங்கே?


சுந்தரமூர்த்தி தாம் குடியிருக்கும் அதே தெருவில் ஒன்றரை கிரௌண்டிலே ஒரு காலி மனையை வாங்கிப் போட்டு வைத்திருந்தார். அது அவருடைய பதவிக் காலத்தின் இறுதியிலே வாங்கியது. அந்த மனையில் ஒரு பெரிய வீடு கட்டி வாடகைக்கு விட வேண்டுமென்ற அவரது 'பிளான்' செயல் வடிவம் பெறுவதற்குள் மறு தேர்தல் வந்து விட்டது அவருடைய துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்: வீடு கட்டும் முயற்சியைக் கை விட்டு, மீண்டும் தேர்தலில் குதித்தார். அமாவாசைப் பணியாரம் அன்றாடம் கிடைக்குமா? அந்தத் தேர்தலில் பாவம் அவர் காட்டிய ஜாமீன் பணத்தைக்கூடத் திரும்பப் பெற முடியாமல் அவருடைய வோட்டுப் பெட்டியைக் காலியாக்கிப் போட்டு விட்டது மக்கள் சக்தி. ''என்னுடைய சேவையைப் பெறும் பாக்கியம் இந்த ஆட்டு மந்தைக் கூட்டத்துக்குக் கிடைக்கவில்லை; அவ்வளவு தான்'' என்று சலிப்புடன் சொல்லிக் கொண்ட அவர், அடுத்து வரும் பொதுத் தேர்தலைப் பொறுமையுடன் எதிர்பார்க்கலானார். அதுவரை அந்தக் காலி மனையில் வீடு கட்டும் திட்டத்தையும் தள்ளிப் போட்டு விட்டார். இப்படி, அடுத்த பொதுத் தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டு காலியாய்க் கிடந்த அந்த மனைக்கட்டுக்குத்தான் ஸ்ரீமதி சுந்தரமூர்த்தி தனது கறவை மாடுகளையெல்லாம் அனுப்பி வைத்தாள்.

அங்கே அந்த மனையின் ஒரு மூலையில் கீற்றுக் கொட்டகை ஒன்று போடப்பட்டது. அதை நீள வாட்டத்தில் இரண்டாகத் தடுத்து, முன் பகுதி மாட்டுத் தொழுவமாகவும், பின் பகுதி வேலாண்டியின் குடியிருப்பாகவும் பயன்படுத்திக் கொள்ள உத்தரவாயிற்று. தன்வீட்டுப் புறக்கடையில் மாடுகள் இருப்பதால்தான் தனக்கு ஜுரம் வருகிறது என்று தெரிந்து கொண்ட ஸ்ரீமதி சுந்தரமூர்த்தி, அந்தக் காலி மனையில் கட்டிய மாட்டுக் கொட்டிலின் ஒரு பகுதியில் வேலாண்டியைக் குடியிருக்கச் சொன்னதிலிருந்து அவள் குண விசேஷங்களை ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

ஆனால், வேலாண்டிக்கு இந்த ஏற்பாட்டில் பரம திருப்தி. வாடகை இல்லாமல் 'வீடு' கிடைப்பது ஒரு பெரிய அதிர்ஷ்டம்தானே? எங்கோ ஒரு 'சேரிப் புறத்தில்,' பன்றிக் குடிசை போன்ற ஒன்றில், இரண்டு ரூபாய் வாடகை கொடுத்துக் குடியிருந்ததைவிட, இந்த மாட்டுத் தொழுவத்தில் மாடுகளோடு ஒரு மாடாக ஒண்டிக் கிடப்பதில் எவ்வளவோ நிம்மதி உண்டு. அவன் தன் குடும்பத்தோடு இந்தக் கொட்டகைக்குக் குடிவந்து சேர்ந்தான்.

விடியற் காலையில் மாடுகள் மூன்றையும் ஓட்டிக் கொண்டுபோய் எஜமானியின் முன்னிலையில் பாலைக் கறந்து கொடுத்துவிட்டு, திரும்ப ஓட்டிக்கொண்டு வர வேண்டும். அப்புறம் பத்து மணிவரை தொழுவத்தைச் சுத்தப்படுத்துவது, மாடுகளைக் குளிப்பாட்டுவது, தீனி வைப்பது முதலான வேலைகள். அதன்பின், எஜமானர் வீட்டுத் தோட்ட வேலையைக் கவனித்தல், மாலை நான்கு மணிக்கு மீண்டும் மாடுகளை ஓட்டிக்கொண்டு போய்ப் பால் கறத்தல், பிறகு தோட்ட வேலை, அப்புறம் பழையபடி மாடுகளைக் கவனித்தல். இதற்குமேல் வேலை செய்யப் பொழுது இருப்பதில்லை. இவற்றைச் செய்து முடிப்பதற்கே இரவு பத்து மணிக்கு மேல் ஆகிவிடும். அதுவும் அவன் மனைவி பொன்னம்மாள் கூடமாட உதவி செய்தால் தான் இந்த நேரத்துக்குள் வேலைகளை முடிக்க முடியும்.

நாட்கள் சென்றன. அவற்றில் வேலாண்டியின் குடும்பத்துக்கென ஒரு நல்ல நாளும் வந்தது. வயசுக்கு வந்து ஐந்தாறு வருஷங்கள் வரை கட்டை பாய்ந்து கிடந்த அவனுடைய ஒரே மகள் செல்லாயிக்குத் திடீரென்று ஒரு மாப்பிள்ளை கிடைத்தான். எஜமானியிடம்


பின்டெக்ஸ்
கைத்தறித் துணிகள்
அழகானவை; நீடித்து
உழைப்பவை;
சாயம் போகாதவை
பின்னியால் விற்பனை செய்யப்படுபவை
லுங்கிகள்
தலையணை உறைகள்
புடவைகள்
படுக்கை விரிப்புகள்
வேஷ்டிகள்
அலங்காரத் துணிகள்
டவல்கள்
பின்டெக்ஸ் கைத்தறித் துணிகளை தயங்காமல் வாங்குங்கள். நெசவாளர்களுக்கு, அறுகாத கடினமான நூல் கொடுக்கவும், சிறந்த ஆலோசனை கூறவும், நல்ல டிசைன்களை தேர்ந்தெடுத்துக் கொடுப்பதிலும் பின்னி உதவுகிறது. பின்டெக்ஸ் துணிகள் நீண்ட நாள் உழைக்க வல்லதென்றும், சாயம் போகாததென்றும் பின்னி உறுதியளிக்கிறது.
ஷர்ட்டிங்குகள்
இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற பின்னி மில் கடைகளில் பின்டெக்ஸ் கைத்தறித் துணிகள் கிடைக்கின்றன
QUALITY FABRICS
BINNY & CO. (MADRAS) LTD
பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
மதராஸ்
JWT/BY/BX-1396

இருபத்தைந்து ரூபாய் கடன்பட்டு, தன் மகளைக் கட்டிக் கொடுத்து அனுப்பி மனம் குளிர்ந்தான் வேலாண்டி. மீண்டும் நாட்கள் ஓடிக்கொண்டே யிருந்தன!...

இதெல்லாம் சரிதான்; ஆனால் இன்னமும் வேலாண்டியின் அந்த 'ஒரு ரூபாய் சோற்றுச் சம்பளத்துக்குரிய' காரணப் பதில் வெளி வரவில்லையே! ஆமாம்: அதை இனிமேல் சொல்லிவிட வேண்டியதுதான்:

வேலாண்டியின் பொறுப்பில் விடப்பட்ட மாடுகள் சரித்துத் தள்ளும் சாணங்களை வாரி ஒரு மூலையில் குவித்து வைப்பது வழக்கம். எஜமானனின் வீட்டுத் தோட்டத்துக்கு எருவாகப் பயன்பட்டது போக மீதத்தை, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை எரு'வண்டிக் காரனிடம் விற்று விடுவான் வேலாண்டி. அதிலே கிடைக்கும் ஐம்பது ரூபாய் அவன் குடும்பச் செலவுக்குப் பெரிதும் உதவியா யிருந்தது. இந்த விஷயம் எஜமானருக்கும் எஜமானிக்கும் தெரிந்தே யிருந்தாலும் அது பற்றி அவர்கள் ஒன்றும் கேட்டுக் கொள்வ தில்லை. இது அவர்களுடைய அகராதியில் ஒரு பெரிய அதிசயம் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், இந்தப் 'பெரும் போக்கு நிலை' அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

சுந்தரமூர்த்தியின் தாயார்க்காரி ஒருநாள் திடீரென்று மண்டையைப் போட்டு விட்டாள். அவளுடைய சமச்சடங்கை நடத்திய போது சுந்தரமூர்த்திக்கு ஒரு பெரிய விஷயம் புலனாயிற்று. அது மரணத்தைப் பற்றிய தத்துவ தரிசனமல்ல; மாட்டுச் சாணத்தின் விலைமதிப்பைப் பற்றிய விஷயம்தான் அது! ஆமாம்; தமது தாயாரின் சடலத்தைத் தகனம் செய்வதற்காக ஒரு வண்டி விராட்டி வாங்கப் பணம் கொடுத்தபோது அவருக்கு விழி பிதுங்கி விட்டது. 'அடேயப்பா! இந்தக் கேடு கெட்ட விராட்டிதான் என்ன விலை விற்கிறது! வெள்ளித் தட்டுகூட இந்த விலைக்கு விற்காது போல் இருக்கிறதே! அணாவுக்கு மூன்று விராட்டியாம்—அநியாயம்! அநியாயம்!'

சுந்தரமூர்த்தியின் மூளையில் பளிச்சென்று ஓர் எண்ணம் தோன்றியது: 'ஆகா, இத்தனை நாட்களாக நமது மாட்டுச் சாணத்தை யெல்லாம் அந்த மடையன் வேலாண்டி எருவாக்கி விற்றுப் போட அனுமதித்து விட்டோமே! எவ்வளவு பணம் நஷ்டம்! இதுவரையில் அந்தச் சாணங்களையெல்லாம் விராட்டியாகத் தட்டி விற்றிருந்தால் அந்தப் பணத்துக்கு நமது காலி மனையில் ஒரு மாடி வீடே கட்டி முடித்திருக்கலாமே!'

சுந்தரமூர்த்தி விழித்துக் கொண்டார். உடனே வேலாண்டி வரவழைக்கப்பட்டான். "அடே, இனிமேல் நம்ம மாட்டுச் சாணத்திலே ஒரு 'பிட்'டைக்கூட நீ யாருக்கும் விற்கப்படாது. அவ்வளவையும் விராட்டியாகத் தட்டி அடுக்கி வைக்க வேண்டியது. இந்த வேலையை, நீயும் உன் பெண்டாட்டியுமாகச் சேர்ந்து செய்ய வேண்டியது. இதற்கென்று உன் சம்பளத்திலே ஒரு ரூபாய் போட்டுத் தருவேன். தெரிந்ததா?" என்று கட்டளை பிறப்பித்தார் எஜமான்.

மறுநாள் முதல் ஊரிலே செத்துப் போகிறவர்களின் தகனக்கிரியைக்குத் தேவையான விராட்டிகளைக் குறைந்த விலைக்கு 'சப்ளை' செய்யலானார் ஸ்ரீமான் சுந்தரமூர்த்தி. இதிலே அவருக்கும் அவரது தர்ம பத்தினிக்கும் பரம சந்தோஷம். முதல் இல்லாமல் இலாபம் பெறுவது என்ற ஓர் உண்மை உள்ளுக்குள் இருந்தாலும், வெளியே இதை ஒரு 'புண்ணிய கைங்கரியம்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம் அல்லவா?

வேலாண்டியின் வேலைப்பளு மிகுதியாயிற்று. அத்துடன், அவனுக்குக் கிடைத்து வந்த அந்த அனுமத்து வரும்படியும் தரை தட்டிப் போனதால், மாதத்தில் ஐந்தாறு நாட்களுக்கு அடுப்பில் பூனை தூங்கும்படி ஆயிற்று.

இந்த நிலைமையில், கல்யாணம் கட்டிக் கொடுத்து அனுப்பிய தன் மகளைப் போய்ப் பார்த்துவர வேண்டுமென்று தொலையாய்த் தொலைக்கிறாள் அவனுடைய மனைவி பொன்னம்மாள். இது எப்படிச் சாத்தியமாகும்? பெண்ணைப் பார்க்கப் போவதென்றால் பஸ் சார்ஜுக்கும் கைச் செலவுக்குமாக ஒரு பத்து ரூபாயாவது வேண்டும். இதற்கு அவன் எங்கே போவது?

பிள்ளைப் பாசமும் கைவறட்சியுமாகச் சேர்ந்து மனத்தைப் புழுவாக அரிக்க நடைப் பிணம்போல் இருந்து வந்த வேலாண்டி, தான் குடியிருக்கும் மாட்டுக் கொட்டகையின் மேல் படர்ந்திருக்கும் பூசணிக்கொடி பூ எடுத்திருப்பதைப் பார்த்த நாள்முதல் ஏதோ புதையல் கண்டவன்மாதிரி பெரியதொரு நம்பிக்கை கொள்ளலானான். கடந்த ஆடி மாசத்து அமாவாசை தினத்தன்று யதேச்சையாக ஒரு பூசணி விதையைக் கொட்டகையின் சுவரோரம் ஊன்றிப் போட்டது இத்தனை செழிப்புடன் வளர்ந்து கூரை முழுதுமாகக் கொடி படரும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. கார்த்திகை மாசம் முடிவதற்கு முன்னமேயே அது பூவும் பிஞ்சுமாகக் குலுங்க ஆரம்பித்து விட்டது.

சரி; இதைப் பார்த்து வேலாண்டி ஏன் இவ்வளவு மகிழ்ச்சி அடைய வேண்டும்? 'அந்தப் பூசணிக்கொடியில் வெம்பிக் கருகும் பிஞ்சு போக, ஓர் இருபத்தைந்து காயாவது தேறிப் பழுக்கும்; அவற்றை அறுத்து விற்றால் பதினைந்து ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கலாம். அதைச் செலவுக்கு வைத்துக்கொண்டு தன் அருமை மகள் செல்லாயியைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடலாம்' — இதுதான் அவன்மகிழ்ச்சிக்கும் நம்பிக்கைக்கும் காரணம்!

ஆனால், ஒரு சந்தேகம்: 'இந்தப் பூசணிக் கொடியில் பழுக்கும் பழங்களை எஜமானனின் உத்தரவின்றிப் பறிக்கலாமா?'—இக் கேள்வியைத் தொடர்ந்து வேலாண்டியின் மனத்தில் ஒரு பெரும் போராட்டமே நிகழலாயிற்று. 'மண்ணும் குடிசையும் எஜமானருக்குச் சொந்தம்; ஆனால் இந்தப் பூசணிக்கொடியின் வித்துக்குச் சொந்தக்காரன் நான் ஆயிற்றே! மண் மூலமா? வித்து மூலமா?' சிக்கலான இவ்வுரிமைப் பிரச்னைக்கு விடை காண வேலாண்டியால் இயலவில்லை. இறுதியில் அவன் ஒரு சமரச முடிவைக் கண்டான். "அட... சரிதான்! இந்தப் பொல்லாத பூசணிக் காய்க்குத்தானு நம்ப எசமான் பங்குக்கு

வந்துவிடப் போறிஹர்? அவர் கேட்கிறதற்கு முந்தியே ரெண்டு நல்ல காயாகப் பறிச்சு எடுத்துக்கிட்டுப் போய் எசமானியம்மா கிட்டே கொடுத்துட்டாப் போச்சு! அதுக்கு மேல் அவங்களுக்கு எதுக்கு? சரி அப்படியே கேட்டா, மொத்தத்தையும் பறிச்சுக் கொடுத்துட்டு, கடனா ஒரு பத்து ரூபாய் வாங்கிடறது! அப்போ இல்லேன்னு சொல்ல மாட்டாங்க. இல்லையா?''

இந்த முடிவுக்கு வந்த பின், பூசணிக்கொடியிலிருந்து தலை சாய்க்கும் ஒவ்வொரு பிஞ்சையும் கைக்கோலைப் போட்டு மறைத்து, அதனை கவனமாகப் பாதுகாத்து வரலானான் வேலாண்டி.

''இன்னு, தே! உன்கூடவிட்டுப் புள்ளைங்கல்லாம் வருதுகளே! எழுந்திரு; மணி நாலாயிடுச்சு!'' என்று தன் கணவனை உலுப்பி எழுப்பினாள் பொன்னம்மாள்.

இதுவரை வெறுமனே கண்ணை மூடிக் கொண்டு மனத்தை எங்கோ மேய விட்டவாறு படுத்துக் கிடந்த மாட்டுக்கார வேலாண்டி சடக்கென்று எழுந்து உட்கார்ந்தான். ''மாடுங்களுக்குப் பொட்டுப் புண்ணாக்கெல்லாம் வைச்சுட்டியாம்மே?'' என்று கேட்டுக்கொண்டே சுற்று முற்றும் பார்த்தான்.

''எல்லாம் வைச்சாச்சு! நீ சீக்கிரமா அவுத்து ஓட்டிக்கினு போ!'' என்றாள் பொன்னம்மாள்.

''இந்தப் பூசணிக் கொடிக்கு ஒரு குடம் தண்ணி கொண்டாந்து ஊத்து. எனக்கு மறந்தே போச்சு!'' என்று சொல்லியவாறு துண்டை உதறி முண்டாசு கட்டிக் கொண்டு, இடக்கை கட்கத்தில் பால் டப்பாவையும் வலக்கையில் கயிறுமாகத் தொழுவத்துக்குச் சென்றான் வேலாண்டி. மாடுகள் கடலைப் பொட்டையும் பிண்ணாக்கையும் தின்றுவிட்டு மடியில் பால் நரம்புகள் புடைக்க நின்று கொண்டிருந்தன. அவற்றை அவிழ்த்து ஓட்டிக்கொண்டு வெளிப்படலைத் திறந்து கொண்டு வெளியே வந்தவன், அங்கு தன் எஜமானனின் கார் வந்து நிற்பதைக் கண்டு சற்றே தயங்கி நின்றான்.

காரிலிருந்து கம்பீரமாக இறங்கினார் சுந்தரமூர்த்தி. அவர் பின்னால் அவருடைய கட்சிப் பிரமுகர்கள் இருவர் இறங்கினர். அவர்களுக்குப் பின், கட்டையும் குட்டையுமாயிருந்த மூன்று முரட்டு ஆட்கள் இறங்கிக் காரின் மறுபக்கம் போய் ஒதுங்கி நின்றனர்.

முதலில் இறங்கிய இரண்டு பேரை வேலாண்டிக்குத் தெரியாது. அவர்களுக்குப் பின்னால் இறங்கிய மூன்று ஆட்களைப் பற்றி அவன் நன்கு அறிவான். அவர்கள் மூவரும் சுந்தரமூர்த்தியின் 'அடியாட்கள்!'

சுந்தரமூர்த்தி திடீரென்று தேசபக்தராகித் தேர்தலில் குதித்த நாள் முதல் இவர்கள் அவருடைய நிழலைப் போல் இருந்து வருகிறார்கள். இவர்களைத் துணைக்கு வைத்துக் கொள்ளாமல் அவர் எங்கேயும் தனியே போக மாட்டார். தினமும் ஒரு பிளேட் பிரியாணி, 'கலக்கல்' செலவுக்குக் கையில் ஒரு ரூபாய்—இவை அவர்களுக்கு அளக்கப்படும் அன்றாடப்படி. இதற்குத்தான் இவர்கள்

> எதிர்க் கட்சிகள் விழித்துக் கொள்ளும், ஒன்றோடொன்று சண்டையிட்டு நிற்பதன் மடமையைச் சீக்கிரம் கட்சித் தலைவர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். தேர்தலில் முக்கோணப் போட்டி ஏற்பட்டு விட்டு, நடுவில் காங்கிரஸ் 'சந்தில் சமாராதனை' யாக வெற்றியடைய விடலாகாது என்பதை உணர்வார்களாக. -**ராஜாஜி.**

அவர் பின்னால் இப்படி நாய்க் குட்டிகள்போல் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தமது காலி மனையைச் சுற்றிப் பார்த்தபடி காரின்மேல் சாய்ந்து நின்றிருந்த சுந்தரமூர்த்தி, அருகிலிருந்த கட்சிப்பிரமுகர்களிடம், ''என்னங்க! இந்த இடத்திலேயே நாளை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு பண்ணிடலாமுங்களா?'' என்று கேட்டார்.

''ஓ....இது நல்ல இடமாகத்தான் இருக்கு. இங்கேயே நடத்திடலாமே!'' என்றார் கட்சிப் பிரமுகரில் ஒருவர்.

''அப்ப சரி'' என்று நிமிர்ந்த சுந்தரமூர்த்தி, சற்றுத் தொலைவில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த வேலாண்டியைப் பார்த்து, ''ஏண்டா இங்கே நிக்கிறே? சீக்கிரமாப் போய்ப் பாலைக் கறந்துட்டு வா. உனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு'' என்றார். மீண்டும் அவர் தொடர்ந்து, ''இதைக் கேட்டுக்கிட்டுப் போடா! நாளைக் காலம்பற இங்கே ஒரு விருந்துக்கூட்டம் நடக்கப் போகுது. சாயந்திரம் பந்தல்காரன் வருவான். அதுக்குள்ளர இந்த மனையிலே கிடக்கிற புல்லுப் பூண்டையெல்லாம் செதுக்கிப் பெருக்கிச் சுத்தமாக்கியாகணும். தெரிஞ்சுதா?'' என்று கட்டளையிடும் பாணியில் கூறினார்.

''சரிங்க எசமான்!'' என்றபடி மாடுகளை ஓட்டிக் கொண்டு அங்கிருந்து நழுவினான் வேலாண்டி. அவன் மனத்தில், 'நாளைக்கு இங்கே என்ன விசேஷம் நடக்கப் போகுது?' என்ற கேள்வி எழுந்து நின்றது.

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதும், அந்தத் தேர்தலில் ஸ்ரீமான் சுந்தரமூர்த்தி ஒரு சட்டசபைத் தொகுதியில் நின்று எப்பாடுபட்டாவது வெற்றி பெற்று விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார் என்பதும், தேர்தலுக்குத் தம் கட்சி சார்பில் அபேட்சகர்களைப் பொறுக்கும் விஷயமாக ராஜ்ய கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் பொருட்டு மேலிடத் தலைவர் ஒருவர் நாளை இங்கு வருகிறார் என்பதும் அவரை முன்கூட்டியே அழைத்து வந்து தடபுடலான விருந்து வைத்துத் தமது வீரப் பிரதாபங்களைக் காட்டி, கட்சி முத்திரையில் தேர்தல் டிக்கட் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதும் இந்த மாட்டுக்கார வேலாண்டிக்கு அத்தனை எளிதில் தெரிந்து விடுமா, என்ன?

பாலைக் கறந்து கொடுத்து விட்டுச் சடுதியில் திரும்பிய வேலாண்டி தன் எஜமானரின் கட்டளைப்படி அந்தக் காலி மனையில் மண்டிக்

கிடந்த புல் பூண்டுகளை யெல்லாம் செதுக்கித் துப்புரவுபடுத்தி முடித்தான். பந்தல்காரன் வந்தான். முதல் வேலையாக அவன் மாட்டுக் கொட்டகையின் முன் பகுதியை மூங்கில் தட்டியால் அடைப்புக் கட்டி மறைத்து விட்டு அப்புறம்தான் அலங்காரப் பந்தல் வேலையைத் தொடங்கினான். துரிதகதியில் வேலை நடைபெற்று, இருட்டுவதற்குள் பாங்குற அமைந்து நின்றது பந்தல். மாட்டுத் தொழுவத்தை மறைத்துக் கொண்டு நின்ற தட்டித் தடுப்பில் தேசத் தலைவர்களின் படங்கள் வரிசையாக மாட்டப் பெற்றிருப்பதைக் காண வெகு அழகாயிருந்தன. அந்தத் தட்டித் தடுப்புக்கு மேலே மாட்டுக் கொட்டகையின் கூரையில் பச்சைப் பசேலெனப் படர்ந்து கிடந்த பூசணிக் கொடிகளையும், அவற்றின் இலைக் கணுக்களிடையே வெள்ளிக் கம்பி 'ஸ்பிரிங்' போன்ற நரம்புச் சுருள்களைப் பின்னணியாகக் கொண்டு தங்கக் குவளைகள் போல் பூத்துக் கிடக்கும் பூசணிப் பூக்களையும், கூரையின் சரிவில் ஆங்காங்கே பச்சைப் பந்துகள் போன்று பூசணிப் பிஞ்சுகள் படுத்திருப்பதையும் தொலைவிலிருந்து பார்க்கும் போது அந்த அலங்காரப் பந்தலின் அழகு மேலும் பன்மடங்காகி விரிந்தது. இன்னும் ஒரே ஒரு வேலைதான் அங்கு பாக்கி. ஸ்ரீமான் சுந்தரமூர்த்தி சார்ந்திருக்கும் கட்சியின் கொடியைப் பறக்க விடுவதற்கு ஒரு கம்பம் நட்டாக வேண்டும். அதற்குத் தோதான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்க அவருடைய யோசனையையே கேட்டுக் கொள்வது என்று முடிவிலிருந்தான் பந்தல்காரன்.

வேலாண்டியும் பொன்னம்மாளும் எஜமானனின் உத்தரவுப்படி, அன்றிரவையும் மறுநாளையும் கழிக்க, தங்கள் சட்டிப் பானை மூட்டை முடிச்சுக்களுடன் தாற்காலிகமாக எஜமானர் வீட்டின் கார் ஷெட்டுக்குப் புறப்பட்டுப் போய் விட்டனர். பெரிய மனிதர்கள் விஜயம் செய்யப் போகும் இடத்தில் இந்தப் பஞ்சைகளை விட்டு வைக்கலாமா?

மறு நாள் காலை ஒன்பது மணியிருக்கும். வேலாண்டி தன் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு கார் ஷெட்டுக்குத் திரும்பி வந்தான். பொன்னம்மாள் ஊற்றிக்கொடுத்த கஞ்சியைக் குடித்து விட்டுச் சற்று ஓய்ந்து உட்கார்ந்தான். சுந்தரமூர்த்தியின் குடும்பத்தினர் அனைவரும் அந்த விருந்துக் கூட்டத்துக்குப் போய் விட்டிருந்ததால் பங்களா வெறிச்சோடிக் கிடந்தது.

களைத்து உட்கார்ந்திருந்த வேலாண்டியின் மனத்தில் சட்டென்று ஓர் எண்ணம் தோன்றியது. அவனுக்குத் தன் எஜமான் மேடையில் ஏறிப் பேசுவதைக் கேட்க வேண்டுமென்று ரொம்ப நாட்களாக ஆசை. 'விருந்துக் கூட்டம் நடைபெறும் இடத்துக்குப் போய் எங்காவது ஒதுங்கி நின்று அவர் பேசுவதைக் கொஞ்ச நேரம் கேட்டு விட்டு வருவோமே' என்று எண்ணிக் கூட்டம் நடைபெறும் இடத்தை நோக்கி நடந்தான்.

அந்தக் காலி மனையுள்ள தெருவோரம் ஏழெட்டுக் கார்கள் நின்று கொண்டிருந்தன. பந்தலின் உள்ளே கட்சிப் பிரமுகர்களும் தொண்டர்களுமாக ஓர் ஐம்பது அறுபது பேர் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு ஜாலியாக உட்கார்ந்திருந்தனர். மாலையும் கழுத்துமாக மேடைத் தலைவர் ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தார். அவர் அருகில் 'மைக்'கின் முன்னே நின்று தலைவரை வெகுவாகப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார் சுந்தரமூர்த்தி. அவருக்குப் பின்னால், அவரது 'மெய்க்காப்பாளர்' மூவரும் பவ்யமாக நின்று கொண்டிருந்தனர். தெருவில் ஆங்காங்கே சிறு சிறு கூட்டமாக ஜனங்கள் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். கூட்டம் மிக மிகக் குறைவுதான்.

'' வாழ்ந்தால் நாற்பது கோடி மக்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்; இல்லையேல் நாற்பது கோடி மக்களும் சாவோம்! இந்த இரண்டில் ஒன்றைச் செய்வதற்காகத்தான் எங்கள் கட்சி இப்போது பாடுபடுகிறது! சாவா, வாழ்வா? இதை நிர்ணயிக்க விரைவில் பொதுத் தேர்தல் வருகிறது! நான் உட்படப் பல மாபெரும் தேச பக்தர்கள் அத்தேர்தலில் பங்குகொள்ள விரும்புகிறோம்...''

ஸ்ரீமான் சுந்தரமூர்த்தி வெகு சுவையாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டு தெருவில் நின்றிருந்த ஒரு குறும்புக்காரன், '' ஆண்டிப் பயல் திமிரைப் பாருங்க; நீங்க கொண்டுவந்த அரிசி யெல்லாம் இதிலே போடுங்க!'' என்று மெல்ல இராகம் போட்டுப் பாடினான். பக்கத்திலிருந்த சிலர் இதைக் கேட்டுச் சிரித்தனர்.

ஒரு தூங்குமூஞ்சி மரத்தடியில் ஒண்டி நின்ற வேலாண்டி தன் எஜமானனின் பேச்சில் அப்படியே சொக்கிப் போய்விட்டான்.

'' தோழர்களே! இதோ பட்டொளி வீசிப் பறக்கிறதே எங்கள் கட்சிக் கொடி, இந்தப் புனிதக் கொடியை ஒரு கணம் உற்று நோக்குங்கள்! அதன் ஒவ்வொரு நூலிழையிலும் செப்பரிய தியாகத் தழும்பு ஏறித் தடித்திருப்பதைக் காணுங்கள்!...''

இதுவரை தன் எஜமானனின் பேச்சில் மெய் மறந்து நின்று கொண்டிருந்த வேலாண்டி சட்டென்று நிமிர்ந்தான். அண்ணாந்த நோக்கில் அவனுடைய கண்கள் அந்தப் பந்தலுக்கு மேலே சென்றன. அடுத்த கணம், அவன் நெஞ்சில் யாரோ ஓங்கி அறைந்தாற் போல் துடித்துப் பதறிப் பின் தளர்ந்தான்.

அந்த அலங்காரப் பந்தலுக்குப் பின்னாலிருந்த மாட்டுக் கொட்டகையின் உச்சிக் கூரையில் செருகிக் கட்டப் பெற்றிருந்த மூங்கில் கம்பம் ஒன்றில் கம்பீரமாகக் காற்றில் அசைந்தாடிப் பறந்து கொண்டிருந்தது ஒரு கொடி! அதன் கீழே ஓலைக் கூரையின் சரிவில், நேற்று மாலை வரை பச்சைப் பசுமையுடன் பூவும் பிஞ்சுமாகப் படர்ந்து கிடந்த பூசணிக் கொடிகள் தாறுமாறாக இழுத்து அறுக்கப்பட்டு மூலைக்கொன்றாய் வாடி வதங்கித் தொங்கிக் கொண்டிருந்தன!

அப்படித் தொங்கித் துவளும் பச்சைக் கொடிகளையும், அவற்றின் மேலே பறந்து கொண்டிருக்கும் கட்சிக் கொடியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு நின்ற வேலாண்டியின் கண்கள் விநாடிக்கு விநாடி பஞ்சடைந்து இருண்டு போய்க் கொண்டே யிருந்தன!

நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHIP-S.M



அஞ்சறைப் பெட்டி



உப்பு சத்தியாக்கிரகத்தின்போது பீஹாரில் சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட உப்பை விற்றார் ராஜன் பாபு. போலீஸார் அவரைக் கைது செய்ய வில்லை! பொதுக் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருக் கையில் ராஜன் பாபுவின் மோட்டார் பழுதாகி விட்டது. அவரைத் தங்கள் காரிலேயே ஏற்றிச் சென்றார்கள், போலீஸார். அவரிடம் கொண்ட கருணையினால் அல்ல. சாத்வீகத்தில் அசைக்க முடியாத பற்றுதல் கொண்டுள்ள ராஜன் பாபுவை மக்களிடையே நடமாட விட்டால் பலாத்கார எண்ணங்களுக்கு அணை போட்டாற் போலிருக்கும் என்று நம்பினார்கள். உண்மையில் ராஜன் பாபுதான் போலீஸாரிடம் கருணை காட்டினார்! போலீஸ் படையிலுள்ள ஏராளமான ஹிந்து வர்களை உத்தேசித்துப் புனித வெள்ளிக் கிழமையன்று அவர்களுக்கு

நம்முடைய மேல் மாடியில் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறதா என்று பார்க்க, டாக்டர்கள் மண்டையைத் தட்டித் திறந்து எட்டிப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. 'எலெக்ட்ரோ என்ஸெபலோகிராப்' என்ற கருவியை உபயோகித்தால் போதும். நம்முடைய மூளைகள் சின்னஞ்சிறு மின்சார அலைகளை எழுப்பிக் கொண்டேயிருக்கின்றன. இந்த மின் அலைகளை அளக்கும் கருவி அது. சாதாரணமாக இந்த மின் அலைகளை ஒரே அளவில் சீராக உற்பத்தி செய்கிறது மூளை. சில சமயங்களில் உற்பத்தி வேகம் அதிகரித்து, மூளை இம்மின் அலைகளைத் தாறுமாறாக அனுப்பத் தொடங்கி விட்டால் உடலின் நரம்புக் கோளங்களெல்லாம் மின்சாரத்தால் தாக்கப்படுகின்றன. அவயவங்கள் தாறுமாறாகக் கோணிக் கொள்கின்றன, விறைப்பாகி விடுகின்றன.

"......பாரத மாதா மயங்கித் தரையில் விழுந்து கிடக்கிறாள்! அவள் பெற்றெடுத்த பிள்ளைகளே கொடுக்கும் அடிகள் அவளைக் கொன்று விடக் கூடும். இந்நிலையில் வேறு யாருக்கும் அவளைத் தொடுவதற்குக் கூட உரிமையில்லை!" — பெஸண்ட் அம்மையாரின் சொற்பொழிவு முடிந்து விட்டது! தமது பேச்சைக் கேட்கக் குழுமியவர்களை உணர்ச்சி வசப்படுத்தி விட்டுப் 'பட்'டென்று உட்கார்ந்து விடுவார் அவர். "இத்துடன் எனது சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்" என்ற பாணியில் பெஸண்ட் அம்மையார் தமது பிரசங்கங்களை முடிப்பதே கிடையாது. பேசுவதற்கு ஒப்புக் கொள்ளுமுன்னர், தமக்குப் பிறகு வேறு யாரும் பேசக் கூடாது என்று நிபந்தனை விதிப்பார் அன்னி பெஸண்ட். ஸமஸ்கிருத மகா பண்டிதர், மகாமகோபாத்தியாய பண்டிட் கங்கா நா

"அம்மா! பருப்பு வாங்கி வரவேண்டும்" என்றாள், மூத்த நாட்டுப் பெண். சமையல் 'டிபார்ட்மெண்ட்' அவளுடையது. "அம்மா! காப்பிக் கொட்டை தீர்ந்து போச்சு!" என்றாள் இளைய நாட்டுப் பெண். காப்பி டிபன் தயாரிப்பது அவள் வேலை.

ஆனால் பண சம்பந்தப்பட்ட எதுவானாலும் மாமியார் தானே கவனித்துக் கொள்வாள். பையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

மாமியார் தலை மறைந்ததும் "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்ட நாட்டுப் பெண்கள் பல்லாங்குழி ஆட உட்கார்ந்தார்கள்.

ஆட்ட மும்முரத்தில் மாமியார் திரும்பி வந்ததையோ, ஜன்னல் வழியே பார்த்து விட்டுத் தனக்குள் கறுவிக் கொண்டு சென்றதையோ அவர்கள் கவனிக்க வில்லை.

குரு கோவிந்தனுடைய வாழ்க்கை விபரீதமாகப் போயிற்று என்று சிலர் கருதலாம். ஆனால் அறிந்தவர் அவ்வாறு கருத மாட்டார்கள். அவன் தன் *சிஷ்யர்களை வைத்துக் கொண்டு பெரியதோர் யுத்த களத்தில் ஏகாதிபத்திய சைனியத்தை ஒரு முறைகூட முறியடிக்க வில்லை என்பது வாஸ்தவம். சிஷ்யரை ஒரு தனி ராஷ்டிரமாக, ஒரு தனிக் கணமாக அவன் அமைத்து வைக்கவில்லை என்பதும் உண்மை.

ஆனால் இன்றைக்கும் சிஷ்யர் ராஷ்டிரீய, தார்மிக உணர்ச்சி நிரம்பிய ஏக ரூபமான கட்டுப்பாடுள்ள ஒரு கூட்டமாக நிற்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அகாலியரின் சக்தி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்று பத்திரிகை வாசிக்கிற அனைவரும் அறிவர். அவர்களை இனி என்றைக்கும் யாராலும் நசுக்க முடியாது.

வேலைகொடுக்காமல் விடுமுறை அளித்தார். அதாவது அன்றைய தினம் சத்தியாக்கிரஹமே நடைபெறுமென அறிவித்தார்!

இப்படிப்பட்ட ஒருவரை "நூற்றுக்கு நூறு மகாத்மாவின் சீடர்" என மோதிலால் நேரு குறிப்பிட்டதில் அதிசயமென்ன?

பீகார் பூகம்பத்தின் போது பிரிட்டிஷ் அரசாங்கம் "கஷ்ட நிவாரண வேலையில் எங்களுடன் ஒத்துழையுங்கள். தனிப்பட இயங்கினால் உங்களால் தேவையான அளவுக்கு நன்கொடைகள் பெற முடியாது" என்று பயமுறுத்தியது. ராஜன் பாபு இணங்கவில்லை. காங்கிரஸின் செல்வாக்கு உயர்ந்து விடும் என்று சர்க்கார் கவலைப்படுவதை உணர்ந்தார். அவர்கள் கூற்றைப் பொய்யாக்கினார்.



வாய் நுரை தள்ளுகிறது. இந்நிலைக்குட்படும் நபருக்கு எந்த விதமான தீங்கும் நேருவதில்லை. வலிகூட உண்டாவதில்லை. என்றாலும் எந்தக் கணத்தில் யார் யார் முன்னிலையில் மீண்டும் 'எபிலிப்ஸி' தாக்குதலுக்கு உள்ளாக நேருமோ என்ற அச்சம் இல்லாமல் போகுமா?

இது பரம்பரைச் சொத்து எனத் தவறாகக் கருதி இந்த நோய் உள்ளவர்கள் திருமணம் புரிந்து கொள்ளக் கூடாதென்று பல தேசங்களில் சட்டம் வகுத்தார்கள். இந்நோயுள்ளவர்கள் அறிவாளிகளாக இருக்க முடியாது என்று நினைப்பதும் தவறு. ஜூலியஸ் ஸீஸர், நெப்போலியன், ஸோக்ரதர் போன்ற மேதைகள் இந்நோயினால் அவதிப்பட்டிருக்கிறார்கள்.



சாஸ்திரி, முதன் முதலாகப் பெஸண்ட் அம்மையாரைப் பார்க்க நேர்ந்தபோது தம்மை மறந்து, "சர்வ கலா சரஸ்வதி" எனக் கூறிக் கரம் கூப்பினார்.

ரயில் பிரயாணத்தின்போது அவர் ஐந்தாறு புத்தகங் களைத் தம்முடன் எடுத்துச் சென்று, சகபிரயாணிகளிடம் விநியோகம் செய்வார். இதன் மூலம் தாம் தொந்தரவின்றி நிம்மதியாகப் படிப்பதைச் சாத்தியமாக்கிக் கொள்வார்!

உச்சரிப்பின் போதும் சரி, எழுதும் போதும் சரி, சொற்களின் திரிபுக்கு அவர் இணங்குவதில்லை. 'கங்கா' என்றே ஆங்கிலத்தில் எழுதவும் உச்சரிக்கவும் முடியும் போது எதற்காகக் 'காஞ்ஜஸ்' என்கிறீர்கள் என்று சண்டைக்கு வருவார்!



மளிகைக் கடைச் செட்டியாரிடம், "ஒரு வீசை காப்பிக் கொட்டையும் இரண்டு வீசை துவரம் பருப்பும் கொடுங்க" என்றாள் ஸ்ரீமதி மாமியார். சிற்றாள் அவற்றை எடைபோட்டுக் காகிதத்தில் சுற்றத் தொடங்கிய சமயத்தில், "நில்லு! இரண்டையும் ஒன்றாகக் கொட்டிக் கலந்து விட்டு ஒரே பொட்டலமாகக் கட்டு" என்றாள் ஸ்ரீமதி மாமியார். "என்னம்மா இது?" என்று வியப்புத் தாங்காமல் கேட்டார் செட்டியார்.

"வீட்டிலே ரெண்டு நாட்டுப்பெண்கள் வேலை வெட்டி இல்லாம பல்லாங்குழி ஆடிக் கொண்டிருக்கு. காப்பிக் கொட்டையையும் பருப்பையும் பிரிக்கிற விளையாட்டைக் கொஞ்ச நேரம் ஆடட்டுமே!" என்றாள் ஸ்ரீமதி மாமியார்.



சாமானிய ஜனங்களைச் சேர்த்து, "ராஜாளிகளை அடிக்கும் வன்மையைக் குருவிகளுக்குத் தருகிறேன்" என்று தாம் செய்த சபதத்தின் பிரகாரம் அவர்களை அசகாய சூரர்களாக்கி, தாம் இறந்து இருநூறு வருஷங்களுக்கு மேலாகியும் தன் முத்திரை அன்று வைத்தபடியே நிலைத்து நிற்கும்படி செய்த சக்தி குரு கோவிந்தனுடையதே. இவ்வாறு தனது ஆத்ம சக்தி அனைத்தையும் தமது ஸிஷ்யரிடத்தில் வியாபிக்கும்படி செய்த வன்மை சரித்திரத்தில் முகம்மது நபி—ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்—ஒருவனுக்குத்தான் நமக்குத் தெரிந்த மட்டில் உண்டு. ஸத் ஸ்ரீ அகால்! வ. வே. சு. அய்யர்

* ஸிஷ்யர்: ஸிக்கியர் என்று சொல்லப்படுபவர்.




அதிக உஷ்ணமண்டல
சீதோஷ்ண ஸ்திதிக்கான
பாதுகாப்பு அளிப்பது
எவரெடி
— இதுவரை
தயாரிக்கப்பட்டவைகளுள்
மிகச் சிறந்த
ரேடியோ பாட்டரி
இந்த அனுகூலங்களை எல்லாம்
அளிக்க வல்ல ரேடியோ
பாட்டரி இது ஒன்றே:
★ தொந்தரவு அற்ற உழைப்பிற்கும், உன்னத சேவைக்கும் அதிக உஷ்ணப் பிரதேச சீதோஷ்ணத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.
★ முற்றிலும் புதிய "மினி-மாக்ஸ்" தட்டைசெல்லின் அமைப்பு, அதன் ஒவ்வொரு கன அங்குல இடத்திலும் அதிகமான இயங்கும் சக்தி நிரம்பப் பெற்றிருப்பதால், நீண்ட காலம் உழைப்பதோடு நீங்கள் ரேடியோ நிகழ்ச்சிகளை மிகத்தெளிவாகவும் கேட்கமுடியும்.
★ அவை நீண்டகாலம் உழைப்பதினால் உங்கள் பணத்திற்கு அதிகமாகவே பலன் அடைகிறீர்கள்.
EVEREADY
"NINE LIVES"
TRADE MARK
ரேடியோ பாட்டரிகள்
உபயோகம் செய்யப்படாத காலங்களில் இழந்த சக்தியை
திரும்ப அடைகின்றன.
யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட்
NCR 3595

வெள்ளிப் பனி மலை வீதியிலே



2. கயிலையை வலம் வந்தோம்

என்.வி.அனந்தராமன்

சென்னையிலிருந்து புறப்பட்டு இரண்டு நாட்கள் இரயில் பயணம் செய்தபின் ஓர் அழகிய வைகறைப் போது. கதிரவனின் உதய காலத்துச் செங்கதிர்கள் யமுனையின் அலைகளிலே பட்டு மின்னுகின்றன. நீராடும் கட்டங்களிலே யாத்திரிகர்கள் கூட்டம் கூட்டமாகக் குழுமியிருக்கின்றனர். எல்லார் மனங்களிலும் கண்ணபெருமானைப் பற்றிய இனிய எண்ணங்கள். இதே யமுனைக் கரையில் கண்ணனின் காவியங்கள் புகழும் லீலைகளும் கோபியர்களின் கனவுகளும் நிகழ்ந்து நிறைந்த காலத்தை நினைத்துக் கொள்கிறேன். சரீரத்தைச் சிலிர்க்கச் செய்த யமுனை நீரைப்போலவே அந்தச் சூழ்நிலையில் எழுந்த புனித நினைவுகள் மனத்தைச் சிலிர்க்கச் செய்கின்றன.

28-6-59 ஞாயிற்றுக்கிழமை காலை மதுரா—ஜங்ஷனில் இறங்கி யிருக்கிறேன். கயிலாய யாத்திரையின் முதற் படியாக யமுனை நீராட்டமும் மதுராவிலுள்ள பிர்லா மந்திரில் கண்ணபிரான் தரிசனமும், பிருந்தாவனக் காட்சியும் காணக் கிடைக்கப் பெற்று மகிழ்ந்தேன். ஏழுவகைப்பட்ட முக்தித் தலங்களில் ஒன்றாகிய மதுரா மிகப் பெரிய ஊராகவே விளங்குகிறது. மதுராவில் உள்ள பிர்லா மந்திரத்தின் கிருஷ்ண விக்கிரகத்தைக் காணக் கண் கோடி வேண்டும். அவ்வளவு அழகு. இக்கோவிலில் பார்க்குமிடம் எங்கும் பளிங்குக் கற்கள். அக் கற்களிலே கீதை சுலோகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கல்லும் கதை பாடி வழிபடுகிறதோ எனக் கற்பனைசெய்து மகிழத் தக்க காட்சி இது.

'மதுரா' நகரத்தில் அதன் பேர்மட்டுமின்றி எல்லாமே இனிமைதான். கண்ணுக்கினிய கிருஷ்ண விக்கிரகம், கண்ணுக்கினிய காட்சிகள், மனத்துக்கினிய நினைவுகள். மதுரா நகரத்தின் இனிய அநுபவங்களுக்குப் பின் அன்றிரவே காத்கோடம் எக்ஸ்பிரஸ் ஏறி மறுநாள் பகல் ஒரு மணி சுமாருக்குக் காத்கோடம் வந்து சேர்ந்தேன்.

திருக்கயிலாய யாத்திரை செய்பவர்களின் இரயில் பயணம் காத்கோடத்தில் முடிவு பெறுகிறதென்றே சொல்லலாம். இதை மிகப் பெரிய ஊர் என்று சொல்வதற்கில்லை. இரயில் நிலையமும் சார்ந்தாற்போல் சில கடைகளும் இருக்கின்றன.

ஆனால் காத்கோடத்துக்குப் பெருமை வேறொரு வகையில் உண்டு. மலைமேலுள்ள ஊர்களாகிய நைநிடால், ராணிகேட், அல்மோரா ஆகியவற்றுக்குச் செல்லும் நுழைவாயிலாக இருப்பது காத்கோடம். இந்த ஊர் இரயில் நிலைய வாயிலிலேயே நைநிடால் போவதற்கான பஸ்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. பஸ்ஸில் ஏறிக் குளிர் பூங்காற்றையும் விழிகள் வியக்கும் காட்சிகளையும் சுகமாக அநுபவித்துக் கொண்டே நான் நைநிடால் போய்ச் சேர்ந்தபோது பகல் இரண்டு மணி. நைநிடாலில் நுழையுமுன் தலைவரி செலுத்துதல் வேண்டும். 'தலை வரி' — என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கேள்விப்படாவிட்டால் வரி வரியாகப் படித்தாவது இருப்பீர்கள். ஜனங்களுக்கு புதுப் புது வரி போடுகிற காரணத்தினால்தான் ஜனவரி மாதத்துக்கு அப்படிப் பேர் வந்தது என்று பேச்சாளர் ஒருவர் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன்.

ஆனால் நைநிடாலில் எந்த மாதமானாலும் அந்த ஊருக்கு பஸ் வழியாக வருகிறவர்கள் தலைக்கு ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும். தனிப்பட்ட கார்களில் வருகிறவர்களின் தலைக்கு இன்னும் மதிப்பு அதிகம். அதாவது அவர்கள் தலைக்கு இரண்டு ரூபாய் வீதம் செலுத்த வேண்டும். நைநிடாலில் இருந்து அங்கு நுழைந்த அன்றே இரவுக்குள் திரும்பி விடும் பட்சத்தில் அணா ஆறு செலுத்தி அனுமதிச் சீட்டுப் பெற்றுக் கொண்டால் போதும்.

நைநிடால் நயினா தேவியின் பெயரால் ஏற்பட்ட மலைநாட்டு நகரம். எழில் வாய்ந்த கோடை வாசஸ்தலம். நைநிடாலின் தோற்ற



ஜாகேசுவரம்

ழும் பொலிவும், கண்களுக்கு விருந்தாக அமையக் கூடியவை. மரஞ்செடி கொடிகளின் அடர்ந்த பசுமைக்கு அப்பால் பனிமூடிய நெடுவரைகள் வெண்மை புனைந்து தோன்றிக் கொண்டிருப்பதை வியப்பதா? நகரின்கண் நிலவுபொழிவும் இரவிலே பாற்கடல் போல் பாங்குறத் தோன்றும் ஏரியின் அழகை வியப்பதா? அதில் பாய் கட்டிக்கொண்டு மிதக்கும் படகுகளை வியப்பதா? நைநிடாலின் பற்பல அழகுகளில் எதை வியப்பது, எதை விடுவது என்றே தெரியவில்லை.

ஏரிக்கரையில் சுற்றிலும் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கான விடுதிகள் நிறையக் கட்டிவிடப் பட்டிருக்கின்றன. ஏரியைச் சுற்றிலுமுள்ள சாலைகளில் குதிரைச் சவாரியும் செய்கிறார்கள். முன்னிரவு தொடங்க வேண்டிய அந்தி மாலை வேளையில் முழுமதியின் ஆட்சிக்குக் கீழே இவ்வூர் தெய்வலோக மெனத் திகழ்கிறது. நைநிடாலின் எல்லையிலாக் காட்சி வனப்பைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தாலும் என் மனம் தனது இலட்சியமாகிய கயிலையையே எண்ணிக் கொண்டிருந்தது. எனவே நானும், மற்றவர்களும் எங்களுடைய யாத்திரைக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டோம். நைநிடாலில் சுவாமி ஸ்ரீ வித்தியானந்த சரஸ்வதி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கீதா சத் சங்கமொன்று இருக்கிறது. சுவாமி அவர்கள் சுமார் 22 முறைகளுக்கும் அதிகமாகத் திருக்கயிலாய யாத்திரை செய்திருக்கிறார்கள். திபெத் முதலிய பிற மொழிகளிலே ஸ்வாமிகளுக்கு வியக்கத்தக்க பயிற்சி உண்டு. மேலும் பத்ரிநாத் ஆலய நிர்வாகக் குழுவிலும் சுவாமிகள் ஓர் உறுப்பினர். பன்முறை கயிலை யாத்திரை சென்று அநுபவம் பெற்றுள்ள இம்மகானின் துணையைக் கொண்டே என்னுடைய யாத்திரையைத் தொடங்கலாம் என்று நான் உறுதி கொண்டேன்.

'அந்தக் காலம் மலையேறி விட்டது' என்று தமிழ் நாட்டில் ஒரு வழக்குத் தொடர் உண்டல்லவா? என்னைப் பொறுத்த வரையில் எந்தக் காலமும் நான் மலையேறினதில்லை. நைநிடாலுக்குப் போன பின்புதான் மலையேற வேண்டிய காலமே வந்தது. நைநிடாலில் இருந்தபோது எங்களுக்கு மலைகளில் ஏறவும், இறங்கவும் வேண்டிய பயிற்சிகளை அளித்தார்கள். காலையிலும், மாலையிலும், நான்கு மைல்கள் மலைகளில் நடந்தோம்.

அடுத்த நாள் காலையில் இரண்டு மைல் உயரத்தில் உள்ள பிர்லா குன்று என்ற மலையுச்சியை அடைந்தோம். இங்கிருந்து சில பிரசித்திபெற்ற மலைச்சிகரங்கள் தென்படுகின்றன. எங்கள் குழு இந்த மலையுச்சியை அடைந்திருந்தபொழுது சிறிது நேரம் சத்கதா காலட்சேபம் நடைபெற்றது. சிலர் கயிலைப் பதிகம் பாடினார்கள். தருமபுரம் மகா சந்நிதானம் அவர்கள் பதிகங்களுக்கு விளக்கம் தந்தார்கள். அன்று மாலை கயிலாய யாத்திரைக்கு வேண்டிய கம்பளிச் சட்டைகள், தலைக்குக் குரங்குக் குல்லாய்கள், கூர்மையான இரும்புப் பூண் பிடித்த ஊன்றுகோல்கள் ஆகியவற்றை வாங்கிக் கொண்டோம்.

மனத்தில் சத் பாவனைகளும், நல் வினையும் இருந்தாலே சிவ பரம்பொருளின் காட்சி எய்தும் என்று கூறுகிற சித்தாந்தத்தையும் கடந்து பரம்பொருளின் பனிமலையைக் காண்பதற்காகச் சட்டையும் ஊன்றுகோலும் தேடி வாங்கினோம் நாங்கள். ஊன்றுகோலைத் தேடிப் போவதற்கே ஊன்றுகோல் தேவைப் பட்டது. பனிவிடையிலே ஆழ்த்தும் பனிக் காளாகாது பனியைச் சட்டை செய்யாத தழல் வடிவுடைய பெருமானைக் காணக் கம்பளிச் சட்டைகள் தேவைப்பட்டன எங்களுக்கு. இமயத்துக்கும் எங்களுக்கு மிருந்த தொலைவினைக் கடப்பதற்கான சாதனங்களை நாடினோம்.


நைநிடாலில் மறுநாள் 1—7—59 அன்று கீதா சத் சங்கத்தின் சார்பில் தருமையாதீனம், மகா சந்நிதானம் அவர்களுக்கு வரவேற்புரை வழங்கப்பட்டது. பொதுமக்களும், பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள். காலை நைநிடால் ராஜ பவனத்தைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. அப்போது உத்தரப் பிரதேச கவர்னராயிருந்த திரு வி. வி. கிரி அவர்கள் மகாசந்நிதானத்துக்கும் எங்களுக்கும் விருந்தளித்து மகிழ்ந்தார்கள்.

மேலே எங்களுடைய யாத்திரையைத் தொடங்குவதற்கு முன் எந்த வழியாகக் கயிலாய யாத்திரை போவதென்ற சிந்தனை எழுந்தது. எந்த வழியாகப் போனாலும் அடையப் போகிற இடம் ஒன்றுதான் என்பது தெரிந்திருந்தாலும் பலவழிகளிலும் சௌகரியமான வழி எது என்று ஆராய்கிற சுபாவம் நமக்கு இருக்கிறதே! அதை எப்படி மீற முடியும்?

இந்தியாவிலிருந்து திருக்கயிலாயம் செல்லும் பாதைகள் பல. காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகரிலிருந்து செல்லும் பாதை மற்ற வழிகளைக் காட்டிலும் நீண்ட வழியாகும். சிம்லாவிலிருந்து 'ஷிப்கி' கணவாய் வழியாக மற்றொரு வழி செல்கிறது. 'கங்கோத்ரி' என்னுமிடத்திலிருந்து 'ஜேலுக்கா' கணவாய் வழியாகப் பிறிதொரு பாதை உண்டு. பதரிகாசிரமத்திலிருந்து 'மானா'க் கணவாய் வழியாகச் செல்லும் பாதையில் புகழ் வாய்ந்த பௌத்த மடமாகிய 'தோலிங் மடம்' இருக்கிறது. 'ஜோதி மடத்'திலிருந்து 'நீதிக்' கணவாய் வழியாகச் செல்லப்



கால்கேட்
பேபி பவுடர்
COLGATE
BABY POWDER
குழந்தைகளின்
சருமத்திற்கு
அதிக
சுகமூட்டுகிறது!



மெய்மறந்து உறங்குவதே உறக்கத்தின் உல்லாசம்
cali—net
காலிகோ மில்ஸ் அஹமதாபாத் இவர்களின்
"காலி-நெட்" மேன்மையான கொசு வலைகள்

பாதை ஒன்றும் உண்டு. அல்மோராவிலிருந்து மூன்று பாதைகள் கயிலாயத்துக்குச் செல்கின்றன. 'லிப்புத் தடாக'க் கணவாய் வழி' தர்மாக்' கணவாய் வழி. 'உண்டா' 'ஜயந்தி' 'குங்கிரிபிங்கிரி' கணவாய்களின் வழி யாத்ரீகர்களில் பெரும்பாலோர் 'கர்பியாங்' சென்று லிப்புத் தடாகக் கணவாய் வழியே கயிலைக்குச் செல்லுகிறார்கள். இந்த வழியாக அல்மோராவிலிருந்து கயிலை செல்ல ஏறத்தாழ 238 மைல்கள் ஆகும். இப்பாதை கடல் மட்டத்துக்கு மிகவும் உயர்ந்திருப்பதால் பனிக் கட்டியால் மூடிக் கிடக்கும். இது மிக மிகக் கடினமான பாதை. இப்பாதையின் நடுவே பெரும்பாலான இடங்களில் மிகவும் செங்குத்தான மலை இறக்கங்கள் உண்டு. நேராக நிறுத்தப்பட்ட ஏணியில் ஏறுவது போன்ற ஏற்றங்களும் உண்டு. இப் பாதையி லுள்ள மலை யிறக்கங்களில் நடக்கத் தனிப் பயிற்சிதான் பெற வேண்டும். கால் வழுக்கி விட்டாலோ, வழியினின்று நழுவினாலோ, அதன் பின்னர் ஆளைக் காண முடியாது. உருண்டு விழுந்த மனிதனைக் கீழே பாய்ந்தோடும் கங்கை நதிதான் விழுங்கி எக்காளம் போடும். இப் பாதையில் சென்றால் கர்பியாங் வரை, அதாவது இந்திய எல்லைத் தபாலாபீஸ் வரை, உணவுக்கும், தங்குவதற்கும் வேண்டிய அளவில் வசதிகள் கிடைக்கும்.

அல்மோராவிலிருந்து மிலம் வழியாகச் செல்லும் பாதை ஏறத்தாழ 227 மைல்கள் ஆகும். இதுவே எளிதாகவும், சிறந்ததாகவும் காணப்படுகிறது. வழியில் தங்குவதற்குரிய இடங்கள் இப்பாதையில் இல்லை என்றே சொல்லி விடலாம். ஆங்காங்கே மலைக் குகைகளில்தான் தங்கிச் செல்ல முடியும். கொள்ளை கொள்ளையாக இயற்கைக் காட்சிகளை இந்த வழியிலே காணலாம். இந்த வழியாகச் செல்லும்போது உத்தா கணவாய், ஜயந்தி கணவாய், குங்கிரி பிங்கிரி கணவாய் ஆகியவற்றைக் கடக்கலாம்.

நாங்கள் கயிலை யாத்திரை மேற்கொண்ட சமயத்தில் இந்தியா—சைனா, எல்லைத் தகராறு ஏற்பட்டிருந்தது. 'கர்பியாங்' வழியாகச் செல்லும் யாத்திரிகர்களைச் சைனாக்காரர்கள் திபெத்துக்குள் நுழைய அனுமதி தருவதில்லை என்று தெரிய வந்தது. மிலம் பாதையில் சைனாக்காரர்களின் ஆக்கிரமிப்போ, கெடு பிடியோ அவ்வளவு இல்லை என்று தெரிய வந்ததனும் நாங்கள் மிலம் வழியாகவே போவதற்குத் தீர்மானித்தோம். கண்ணுக்கும், உடலுக்கும் இங்கிதமான இயற்கைக் காட்சிகளும், குளிர்ச்சியும் நிலவிய வழி இது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் திருக் கயிலாயத்தையே வலம் வருவதற்கு ஏற்றது போலச் சுற்றிச் சுற்றி அமைந்திருந்தது இந்த வழி. இதற்கு 'ஜோர்ஹாட் வேலி வழி' என்றும் பெயர் உண்டு. புறப்படுவதற்கு முதல் நாள் இரவே மூட்டைகளைக் கட்டி எடை போட்டு, பொழுது விடிந்ததும் மோட்டார் வண்டியில் ஏற்ற வேண்டிய ஏற்பாடு களையெல்லாம் செய்து விட்டோம். காலையில் நைநிடாலிலிருந்து புறப்பட்ட நாங்கள் 3-7-59 அன்று ராணி கேட் வழியாக அல்மோராவுக்கு முன்னதாய் 'ஜாகேஷ்வர்' போய்ச் சேர்ந்தோம். ஜாகேஷ்வரம் சிறந்த தொரு சிவஸ்தலம். புராணங்கள் 'தாருக வனம்' என்று கூறுமிடம் இதுதான். இங்குள்ள லிங்கமூர்த்தத்தை 'ஜோதிர்லிங்கம்' என்று அழைக்கிறார்கள். அருகிலிருக்கும் மற்றொரு லிங்கமூர்த்தத்தை மிருத்யுஞ்சய லிங்கம் என்று அழைக்கிறார்கள். இந்தக் கோவிலை ராமபிரான் நிர்மாணித்ததாக ஐதிகம் உண்டு. தலத்தைச் சுற்றி 360 புனித கங்கைகள் இருப்பது இங்கு மட்டுமே உள்ள சிறப்பு. மகாசிவராத்திரி அன்றும், வைசாக பௌர்ணமி அன்றும் ஏராளமான கூட்டம் இங்கு வருவது உண்டாம்.


இவ்வளவு பெருமைகளும் புதைந்துள்ள இந்தக் கோவில் இன்னும் ஒரு பெருமை யாகப் புதைபொருள் இலாகாவினராலேயே நிர்வாகம் செய்யப் பெறுவதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கோவிலைச் சுற்றிலும் பிரும்மாண்டமான தேவதாரு மரங்கள் காடாக அடர்ந்திருக்கின்றன. இந்தப் பகுதி களில் அட்டைக்கடி மிகவும் அதிகம் என்று கூறினார்கள். கால்களைப் பார்த்துக்கொண்டே ஜாக்கிரதையாக நடந்தோம். கயிலாயம் செல்லும் வழியிலே உள்ள முதல் தலம் இதுவேயாதலால் இதனைப் பால கயிலாயம் என்று அழைக்கிறார்கள். நாங்கள் புறப்பட இருந்த முதல் நாளிரவு பெரிய மழை. மறுதினம் காலை — கங்கையில் நீராடிவிட்டுச் சுமார் பத்து மணிக்கு ஜாகேஷ்வரிலிருந்து புறப்பட்டபோது எங்களுக்குப் பெரும் சோதனையொன்று ஏற்பட்டது. (தொடரும்

'அமிர்தவசனி' தெய்வீக மாதப் பத்திரிகை வருட சந்தா ரூ. 3

கவுரவத்தை கொடுக்கக் கூடிய துணிகள்



டெட்டிஞல் சலவை செய்யப்பட்டதே



- **டெட்டிஞல் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாக தோற்றமளிக்கும்**

  டெட்டின் சிறந்த சுத்திகரிப்புச் சலவை உங்களுடைய ஆடைகளை புத்தம் புதியது போல் பிரகாசிக்கச் செய்கிறது.

- **டெட்டிஞல் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாக தோற்றமளிக்கும்.**

  டெட் ஆடைகளை சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் சிறந்த பரிசுத்தகாரி. டெட்டிஞல் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தைபோ அல்லது வெண்மையாக்கும் பொருளைபோ சேர்க்க வேண்டிய தேவையில்லை. காரணம் கண் கவரும் வெண்மையை தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.

- **டெட்டிஞல் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவதுஎன்பது பொருள்.**

  வெந்நீரிலும், தண்ணீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், சில்க், ரேயான், கம்பளி, செயற்கை அல்லது கலர் துணிகள்-எல்லா விதமான ஆடைகளுக்கும் டெட்டை தாராளமாக உபயோகிக்கலாம்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்-1.

நாவல் பிறக்கிறது

என் நாவல் பிறந்த கதையைச் சொல்லுமுன் நான் பிறந்த கதையையே சிறிது சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. நல்ல புலமை பெற்ற பெரியோர்கள் வழிவழியாக வந்த குடும்பம். என் பாட்டனார் மழவை சிதம்பர பாரதி தமிழில் அனேக கவனங்களைச் செய்திருக்கும் ஒரு சிறந்த சாகித்யகர்த்தா. பெரிய தகப்பனார் ஒருவர் அஷ்டாவதானி. மற்றும் இரு பெரிய தகப்பனார்கள் சங்கீதத்திலும் சாகித்தியத்திலும் நல்ல புலமை கொண்டவர்கள். மழவை சிதம்பர பாரதியின் பெண் வயிற்றுப் பேரன்தான், இசையுலகில் தமக்கென அரியதோர் இடத்தைச் சம்பாதித்துக் கொண்ட மழவராய னேந்தல் சுப்பராம பாகவதர். என் பெரிய தகப்பனார்களில் மூத்தவருக்குப் பெரியய்யா, சின்னய்யா என்று இரு பிள்ளைகள். பிரசித்தி பெற்ற வித்வான்களாக விளங்கினார்கள். ஆகவே எங்கள் வீட்டில் எப்பொழுதும் சங்கீத விழாதான். என்றும் இலக்கிய மகாநாடுதான்.

இப்படிப்பட்ட வித்வத் தன்மை நிறைந்த குடும்பத்தில் பிறந்ததுபற்றி எனக்குப் பெருமைதான். எங்கள் குடும்பத்தவர் ஒவ்வொருவருக்கும் பெருமைதான். இருந்தாலும் எல்லோருக்கும் ஒரு குறை உண்டு. எனது ஒன்றுவிட்ட சகோதரர் சின்னய்யா என்பவர் சிறு வயதிலேயே, சங்கீதத்தில் அபரிமிதமான யோக்கியதையைக் காட்டி வந்தார். அவருடைய குரலோ, மிகவும் இன்பகரமாயிருந்தது. ஒரு தரம் அவர் ஒரு ராஜசபையில் பாடிவிட்டு வந்த பிறகு அவர் குரல் கம்மிவிட்டது. எல்லோரும் ராஜ திருஷ்டி என்றார்கள். அதிலிருந்து அவரால் பாடவே முடியவில்லை. வேறு வழியின்றி மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்தார். அதிலும் வெற்றி கண்டார். இருந்தாலும் அவர் குரலை இழந்து நிற்பதை ஒருவராலும் மறக்க முடியவில்லை. அந்தச் சம்பவம் எங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது.

நான் பிறப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்பே சின்னய்யா அவர்கள் காலமாகிவிட்டார். இருந்தபோதிலும் அவர் குரலை இழந்த கதையைப் பல பேர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். உறவினர்கள், நண்பர்கள், சங்கீத வித்துவான்கள் எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். சொல்லும்பொழுது மிகுந்த அநுதாபத்துடன் சொல்லியிருக்கிறார்கள். சங்கீதத்துக்கே ஒரு மகத்தான விபத்து ஏற்பட்டது போலச் சொல்லியிருக்கிறார்கள். சிறு பையனான என் இளம் உள்ளத்திலே, இந்தச் சம்பவத்தின் சோகத் தன்மை ஆழமாகப் பசுமரத்தாணிபோல் தைத்திருந்தது. காட்டிலே திரியும் ஒரு கிரவுஞ்ச பட்சியின் மரணத்தைக் குறித்து உலகத்திலேயே பற்றில்லாதவரும், சுகத்தையும் துக்கத்தையும் சமமாக நினைப்பவருமான வால்மீகி மகரிஷிக்கே, கருணையும், இரக்கமும் பெருகி வந்தபொழுது விவரந் தெரியாத பருவத்திலிருந்தவனும், உணர்ச்சி வயப்பட்ட காலத்திலிருந்தவனுமான என் இதயத்தில் இந்த நிகழ்ச்சி, அளவிறந்த வேதனையைப் பெருக்கியதில் ஆச்சரியமில்லையல்லவா? "அடடா, சின்னய்யாவின் குரல் போகாமல் இருந்திருந்தால், எவ்வளவு பிரசித்தி பெற்றிருப்பார்? புகழ் ஏணியில் இருந்திருப்பார்? நம் குடும்பத்தின் பெருமை மேலும் ஓங்கியிருக்கும். இது என்ன விதியின் விளையாட்டு" என்று மனம் புழுங்கும். இந்த நிகழ்ச்சியும், அதன் சோக விளைவும், என் நெஞ்சை விட்டு அகலாமல் உள்ளத்திலேயே ஊறிக்கொண்டிருந்தன.

நான் 1935ல் கதை எழுத ஆரம்பித்தேன். வாழ்க்கையில் ஏற்படும் பலதரப்பட்ட சுகங்களையும் துக்கங்களையும், கதையின் உருவத்தில் அமைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் என் நெஞ்சிலே ஆழமாகப் பதிந்து பிடித்துக் கொண்டிருக்கும் இந்தச் சோகக் கதையை எழுதலாமே என்ற எண்ணம் உண்டாயிற்று. 'கலைஞன் கவலை' என்ற சிறுகதை ஒன்றை எழுதினேன். அது மணிக்கொடிப் பத்திரிகையில் பிரசுரமாகியது.

அதன் சாராம்சம் இதுதான். ஒரு பிரபல வித்வான், தம் புகழேணியில் இருந்து கொண்டு தம் குரலினிமையாலும், வித்துவத்தினாலும் ஜனங்களைப் பரவசப் படுத்திக் கொண்டிருக்கிறார். திடீரென்று ஏதோ உடல் நோய் காரணமாக அவர் தொண்டை பேச முடியாமல் போய் விடுகிறது. பாவம்! மனிதன்

நொந்து நைந்து போய்விடுகிறார். வாழ்க்கையே வெறுத்துப் போய் விடுகிறது. நாம் கற்ற வித்தை உபயோகமற்று வீணாகப் போய்விடுகிறதே என்று வருந்துகிறார். அப்பொழுது ஆற்றங்கரைக்குப் போகும் பொழுது யாரோ ஒரு சிறு பையன் பாடிக் கொண்டிருந்தான். அந்தக் குரலின் இனிமையும், காம்பீர்யமும் அவரை மெய் மறக்கச் செய்கின்றன. தமது துயரத்தையெல்லாம் மறந்தார். அந்தப் பையனை அணுகி, யார் என்று விசாரித்து, தம் சிஷ்யனாகச் சேர்த்துக் கொண்டு, தமக்குத் தெரிந்த வித்தையெல்லாம் சொல்லிக் கொடுத்து, அந்தப் பையன் வளர்ச்சியில், வாழ்வில் தமது பூரணத்வத்தைக் காண்கிறார். இப்படித்தான் கதையை எழுதி யிருந்தேன். ஆனாலும், இக்கதை எனக்குச் சிறிதேனும் திருப்தி தரவில்லை. வேறு எப்படி மாற்றுவது, எந்த முடிவுக்குக் கொண்டு வருவது என்பதெல்லாம் புலப்படவில்லை. சந்தர்ப்பம் வரும்பொழுது அதற்கு வேறு உருவம் கொடுத்து விடலாம் என்று நினைத்துப் பேசாமல் இருந்து விட்டேன்.

ஒருநாள், கீட்ஸ் என்ற மகா மேதையின் அழகான கவிதையொன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அதற்கு முன்பே அதைப் படித்திருந்த போதிலும் அன்று இருந்த மன நிலையில், இந்த வரிகள் எனக்கு ஒரு புது உலகத்தையே காண்பிப்பதுபோல் இருந்தன. அந்த அற்புதக் கவிதையில் உள்ள வரிகளின் பொருளை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.


"கேட்கும் ஆசை உயர்ந்ததுதான். ஆனால் கேளாத ஆசையோ அதற்கும் மேம்பட்டது. இன்குழலே, மென்மையான ஒலி. ஒலியை வாங்கும் செவிக்கு அல்ல. ஒலியைக் கடந்த ஆன்மக் குரலில் இசை பாடு."

இதைப் படித்தவுடன், என்னைத் தூக்கி வாரிப் போட்டது. 'ஆகா! இதைத் தானே சொல்ல முடியாமல் ஊமையனைப் போலத் திணறிக் கொண்டிருக்கிறேன்? நான் சொல்ல ஆசைப்பட்டதை நூறு வருஷங்களுக்கு முன்பே இவர் பாடி விட்டுப் போய் விட்டாரே' என்று படித்துப் படித்து ஆச்சரியப்பட்டேன். 'இருக்கட்டும், நானும் இதை என் வழியிலே சொல்லிப் பார்க்கிறேன்' என்று சிந்திக்கத் தொடங்கினேன். என் 'இதய நாதம்' அன்றே ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

சிதம்பர சுப்பிரமணியன்

சிந்திக்கத் தொடங்கினேன். நமக்குத் தெரிந்ததிலிருந்து தெரியாத பல விஷயங்களை அறியப் பார்க்கிறோம். தோன்றியதிலிருந்து தோன்றாததைக் கண்டறிய நினைக்கிறோம். சகுணமான கடவுளிடமிருந்து நிர்க்குணமான பரம்பொருளை அடையப் பார்க்கிறோம். பல வர்ண வேறுபாட்டின் மூலம் சுத்த வெண்மை என்பதைத் தெரிந்து கொள்கிறோம். அதுபோலவே நாதத்தின் எல்லை மௌனம்தானே.

சங்கீதத்தில் ஈடுபாடு இருந்தமையாலும், பெரிய சங்கீத விற்பன்னர்கள் எப்படி வாழ்ந்தார்கள், எந்தெந்த இலட்சியங்களைக் கைப்பிடித்தார்கள் என்பதை நேரிடையே பார்க்கும் சந்தர்ப்பம் இருந்தமையாலும் நாதத்தை ஒரு மகத்தான யோகமாகவும் ஆத்ம சாக்ஷாத்காரத்துக்கு அதை ஒரு சாதனையாகவும் கொண்டுள்ள நாதோபாசகர்கள், எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பதைக் கற்பனை செய்வது கடினமாயில்லை. நான் கண்டறிந்த பெரியோர்கள், கேட்டறிந்த பெரியோர்கள் பொருளைப் போற்றவில்லை. உலகத்தின் போக்கின்படி போய்க் கொண்டிருக்கவில்லை. சங்கீதமே உடல் பொருள், ஆவியெனப் போற்றி வந்தார்கள். சகல கலாவாணியிடம் தங்களையே அர்ப்பணம் செய்து கொண்டவர்கள். இப்படிப்பட்ட குறிக்கோளைத்தான் கவி தாகூர் ஓர் அருமையான கவிதையில் பாடியிருக்கிறார் :



உன் அருள் என் குரலில் விளையாடட்டும்
இதய மௌனத்தில் உறங்கி நிற்கட்டும்
உள்ளத்தில் நுழைந்து உடல் நிறைந்து நிற்கட்டும்
உன் அருள் இரவில் தாரகையாக மின்னட்டும்
அருணோதயமாக வந்து எனக்கு விழிப் பூட்டட்டும்
என் ஆசைக் கனவில் ஒளி வீசி நிற்கட்டும்
என் அன்பில் அமுத தாரையாகப் பரவி நிற்கட்டும்
வீணை எப்படி நாதத்தைத் தாங்குமோ, அப்படியே
நான் உன் அருளைச் சுமந்து, என் உயிருடன்
அதை உனக்கே சமர்ப்பணம் செய்கிறேன்.

என் நாவலான இதயநாதத்தில் வரும் கதாநாயகனை கிருஷ்ண பாகவதரும், இம்மாதிரியான அச்சிலே வார்க்கப்பட்டவர் தான். கிருஷ்ண பாகவதர் சங்கீத பரம்பரையில் பிறந்தவர். இயல்பாகவே அவருக்குச் சங்கீதம் வருகிறது. பொன்னாசையில்லை; பெண்ணாசையில்லை. நாதத்தையே உபாசித்தார். அதற்காகவே வாழ்ந்தார். இவற்றைக் கதையின் போக்கிலே கொண்டு வருவதற்காக, அதற்கேற்ற வகையில் குண சித்திரங்களாகச் சிருஷ்டித்தேன். கிருஷ்ணபாகவதர் லட்சியவாதி. ஆனால் அவர் மனைவியோ, வாழ்வை விரும்பி வாழ்க்கையில் போராடுபவள். குடும்ப வாழ்க்கையை அவள் நடத்தவேண்டி வந்தது. அவர்கள் இருவருடைய போராட்டத்தினால், கிருஷ்ணபாகவதரின் லட்சிய வாழ்க்கை பிரகாசப் படுத்தப்பட்டது. அது போலவே, அவருக்குப் பெண்ணாசை யில்லை என்பதும் மற்றொரு பாத்திரத்தின் மூலம் வெளிக் கொணரப்பட்டது. இவை அவர் கடைசியில் அடைய வேண்டிய பக்குவ நிலைக்கு உதவும்படியாக இருந்த சாதனங்கள். மனிதன் வளர்ச்சி படிப்படியாகத்தானே உயர்ந்து கொண்டு போகும். கடைசியில் அவர் குரலை இழந்தபொழுது அவர் பிரமை பிடித்தவர் போலாகி விடுகிறார். வாழ்க்கை சூன்யமாகி விடுகிறது. உன்மத்தம் கொண்டவர் போல் ஒன்றும் தோன்றாமல் பரிதவிக்கிறார். அப்பொழுதுதான் அவருக்கு நண்பராகவும், தந்தையாகவும், ஞானசாரியனாகவும் இருந்து வந்த கந்தசாமி பாகவதர் என்பவர் அவரிடம் சொல்கிறார்:

"அங்கிங்கெனாதபடியுள்ள பரம்பொருளுக்கு இந்த லிங்கம் எப்படிச் சின்னமாக நிற்கிறதோ, அதே போல் வானிலும் வெளியிலும் அணுவிலும் இயங்கும் நாத வெள்ளத்தின் ஒரு திவலையைத் தானே உன் காதுகள் ஏற்று வாங்கிக் கொள்கின்றன? உன் செவிக்கு எட்டாது இயங்கும் நாத வெள்ளம் எவ்வளவு இருக்கிறது. உன் காதுகள் கேட்ட நாத வெள்ளத்தில் அதுவரையில் ஈடுபட்டிருந்தாய். இனி செவிக்கு எட்டாத இனிய நாதத்தில் ஈடுபடப் போகிறாய். உன் செவிகள் வெளியே கேட்கும் நாதத்தில் ஈடுபட்டன. இப்பொழுது அவைகளை உள் நோக்கித் திருப்பு. எங்கும் நிலவி வரும் பரம ஒலியின் எதிரொலியை உன்னுடைய உள்ளத்தில் கேட்பாய்" என்று கூறினார்.

குரலை இழந்து பரிதவிக்கும் என் கதாநாயகனை கிருஷ்ண பாகவதர், கடவுளை நோக்கிப் பார்த்தார். ஆனால் அவருடைய கண்களால் பார்க்கவில்லை. இதயத்தால் பார்த்தார். அவர் சஞ்சலம் நீங்கியது. சாந்தி பிறந்தது. தம் இதயநாதத்திலே ஈடுபட ஆரம்பித்தார். இப்படித்தான் என் நாவலான 'இதயநாதம்' உருவாகியது.



நாவல் பிறக்கிறது

அடுத்த இதழில்

தி.ஜானகிராமன்

தமது அநுபவங்களை எழுதுகிறார்!

இந்தச் சந்தர்ப்பத்தில், எழுத்தாளர்களுக்கிடையே ஏற்பட்டு வரும் ஒரு கொள்கைப் போராட்டத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. சில நண்பர்கள் அடிக்கடி சொல்ல நாம் கேட்கிறோம்: "ஐயா! போதும், போதும். கடவுளையும், தாமரையையும், தாரகையையும், வெண்ணிலவையும், தென்றலையும் பற்றி எழுதுவது போதும். திரும்பத் திரும்ப எவ்வளவு தரம் எவ்வளவு பேர்கள், இவைகளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். உலகத்தில் வேறு விஷயமில்லையா, குடிசையில்லையா, குஷ்டரோகியில்லையா, இன்னும் எவ்வளவோ துன்பங்களும், கொடுமைகளும் இல்லையா? இவைகளையெல்லாம்பார்க்காமல் கண்ணை மூடிக் கொண்டு, மேற்சொன்ன விஷயங்களைப் பற்றிக் கவிதைகளையும், கதைகளையும் எழுதுவது ஒரு கோழைத் தனம் (Escapism)" என்று அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

வாஸ்தவம்தான்; தாமரையை விட்டு விட்டு எருக்கம் பூவைப் பற்றிக் கவி பாடலாம். குயிலுக்குப் பதிலாகக் காக்கையின் குரலிலும் அழகிலும் நாம் நம்மை



சிவாஜி வாரப் பத்திரிகையின் வெள்ளி விழா ஜூலை 29ந் தேதி திருச்சி டவுன் ஹாலில் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. முதலமைச்சர் திரு காமராஜ் சிவாஜி வெள்ளிவிழா மலரை வெளியிட்டுப் பேசினார்.

மறந்து இன்புறலாம். புலியைவிடக் கோவேறு கழுதை பராக்கிரமம் கொண்டதாக நாம் கவிகூட எழுதிவிடலாம். ஆனால் அதனதன் தன்மைகளை மாற்றிவிட முடியாது. நம் கவிதையினால் அவை இழந்த பொருளாகவும் ஆகிவிடமாட்டா!

இவ்வுலகில் எதிரிடையான எவ்வளவோ பொருள்களும் குணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. நன்மை இருக்கிறது. கூடவே தீமையும் இருக்கிறது. அழகு இருக்கிறது. அதனுடனேயே அருவருப்பான விஷயமும் இருக்கின்றது. கருணையிருக்கிறது, கொடுமையுமிருக்கிறது. இருளும் ஒளியும் அருகருகே இருக்கின்றன. ஞானமும் அறிவின்மையும் இருக்கின்றன. இவற்றில் ஓர் எழுத்தாளன் எப்படி, எந்தெந்த அளவுக்கு எந்தெந்த விஷயங்களைப் பொறுக்கி எடுத்துத் தன் சிருஷ்டித் தொழிலைச் செய்ய வேண்டியது? என்ன அளவு கோல்? எப்படி எடைபோட்டு விஷயங்களை எடுத்து வைத்துக் கொள்வது? எந்தச் சல்லடை மூலம் தனக்கு வேண்டிய சாமான்களைச் சலித்து எடுப்பது? இதற்கு நேரிடையாகப் பதிலைக் கண்டு பிடிப்பது சிரமமான காரியம். ஆனால் உதாரணத்தின் மூலமாக இதற்கு விடையை ஊகித்துக் கொள்ளலாம். நம்மைப் போலவே, முதன் முதலாகப் படைப்புத் தொழிலில் அவஸ்தைப்பட்ட முதல் சிருஷ்டிகர்த்தாவின் அனுபவத்தின் மூலம் நம் அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

பிரும்மதேவன், புதிதாகப் படைப்புத் தொழிலை ஆரம்பித்துக் கொண்டிருந்தார். நம்மைப் போலவே அவருக்கும் எதை வைத்து எப்படி சிருஷ்டி பண்ண வேண்டும் என்று புரியவில்லை. படைப்புத் தொழிலில் அவருக்கு அனுபவம் ஏற்படவில்லை. தம் சிருஷ்டிக்கு தமோ குணத்தை எடுத்துக் கொண்டார். அதிலிருந்து உற்பத்தியானவர்கள் ராக்ஷஸர்களும், யக்ஷர்களும். பிறந்த உடனேயே தங்கள் குணத்தைக் காட்ட ஆரம்பித்தனர். "எங்களுக்குப் பசிக்கிறது. உங்களைச் சாப்பிடப் போகிறோம்" என்று பிரம்மதேவனை நோக்கி ஓடிவந்தனர். பிரும்மதேவன், "குழந்தைகளே! நான் உங்கள் தகப்பன் அல்லவா?" என்று சொல்லிப் பார்த்தார். அவர்கள் கேட்கவில்லை. ஓடினார் பிரும்மதேவர்.

தாம் செய்த தவற்றை உணர்ந்தார் முதல் படைப்பாளி. தம் சிருஷ்டிக்கு எடுத்துக் கொண்ட மூலப்பொருள் சரியில்லை என்பதைத் தெரிந்து கொண்டார். பிறகு தம் தொடையிலிருந்தே சிருஷ்டி செய்ய ஆரம்பித்தார். அசுரர்கள் தோன்றினார்கள். காமாதுரர்களாய், தங்கள் காமவெறிக்கு இரையாக எல்லாவற்றையும் ஆட்கொள்ள ஆரம்பித்தனர். பிரும்மா தாம் செய்தது மறுபடியும் சரியில்லை என்பதை உணர்ந்தார். தவத்தை அதிகப்படுத்தினார். மனத்தை ஒரு நிலைப் படுத்தினார். யோக பலமும் தபோ பலமும் அதிகம் ஆக ஆக அவருடைய சிருஷ்டிகளின் தன்மையும் உயர்ந்து கொண்டே போனது. கடைசியில் யோகிகளையும் மகரிஷிகளையும் சிருஷ்டித்தார். படைப்புத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நவீன பிரும்மாக்கள் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்ததோர் உண்மையைத் தாங்கி நிற்கிறது இந்தப் பாகவதக் கதை.

படைப்பின் தன்மை சிறந்து நிற்க வேண்டுமேயானால், படைப்பாளியின் தவ வலிமை சிறந்து நிற்க வேண்டும். தவ வலிமை யென்றால், பஞ்சாக்னி மத்தியில் நிற்பதென்றோ, ஊசி முனையில் நிற்கவேண்டு மென்றோ இல்லை. எழுத்தாளனின் மனம் நல்லதோர் எண்ணத்தில், மனத்தைத் தூய்மைப் படுத்தும் சிந்தனையில், உள்ளத்தை உயர்த்தக் கூடிய அனுபவத்தில் நிலைத்து நிற்குமேயானால், அப்பொழுது எழுத்தின் தன்மையும் தானே சிறந்தோங்கி விளங்குகிறது. அப்பொழுதுதான், அது நிரந்தரமான இலக்கியத்துக்கு ஆதாரமாக நிற்கும் சத்தியம், சிவம், அந்தரம் என்ற மூலப்பொருள்களின் ஒளிபட்டு, பிரகாசத்தை அடைகிறது. எழுத்து எழுத்தாளனின் இதயநாதம். பாரதி சொன்னதுபோல், நெஞ்சிலே உண்மை ஒளி உண்டானால் அது தானே, எழுத்திலே ஒளி வீச ஆரம்பிக்கிறது.





பட்டமளிப்பு விழா

சென்னை சர்வகலாசாலையிடம் இந்நாட்டில் மட்டுமல்ல, வெளி நாடுகளிலும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அதன் உப அத்யக்ஷகரான ஸ்ரீ ஏ.எல். முதலியாரின் திறமைதான்.

சென்னை சர்வகலாசாலையின் நூற்றாண்டு விழாக் கட்டிடத்தைத் திறந்து வைத்தபோது இக் கருத்தை வெளியிட்ட ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், "இந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க ஏறக்குறைய மூன்றரை வருஷங்களுக்கு மேல் ஆகி யிருக்கின்றன என அறிகிறேன்" என்று தமது பேச்சை ஆரம்பித்தார். குறை கூறுகிறாரோ என்று யோசிக்கத் தொடங்கிய நேரத்தில், "அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்" என்றார் அவர்!

புற்றிலிருந்து கிளம்பும் ஈசல்களைப் போலப் பெருகி வரும் சர்க்கார் காரியாலயங்களைக் குடி வைக்கவும் வெறும் பகட்டுக்காகவும் குறுகிய காலத்தில் குற்றங் குறைகள் பலவற்றுடன் எழும்பியுள்ள ஏராளமான அரசாங்கக் கட்டிடங்களைக் கண்டுவிட்டுத்தான் சொல்லியிருக்கிறார் அப்படி.

நிதானமாக நிர்மாணிக்கப்பட்ட போதிலும் நீடித்து நிலைக்குமாறு உறுதியாக அமைக்கப்பட்டது, சென்னை சர்வகலாசாலைக் கட்டிடம் என்ற அவரது எண்ணம் மெய்யாகும்.

அத்துடன், நவீன மோஸ்தரில் 'பிளான்' தயாரிக்காமல் பக்கத்திலுள்ள செனட் மண்டபம், சர்வகலாசாலைக் கட்டிடம் இவற்றுடன் அழகாக ஒன்றுமாறு புதிய கட்டிடம் தோற்றமளிப்பது பாராட்டுக்குரிய விஷயம். என்றாலும் சென்னை நகரக் கடற்கரையில் கட்டப்பட்ட கடைசிக் கட்டிடமாக இது இருக்க வேண்டும். உயரமான கட்டிடங்களை மேலும் மேலும் எழுப்பிக்கொண்டே போய்க் கடற் காற்று சென்னை நகர மக்களுக்குக் கிட்டாமல் செய்துவிடக் கூடாது.

இது சம்பந்தமாக ராஜாஜி விடுத்திருக்கும் எச்சரிக்கையைச் சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டும் அரசாங்கமும் கவனிக்க வேண்டும். கடற்கரையருகே குடிசை அமைத்து வாழும் மீனவர்களை அப்புறப்படுத்தி விட்டுப் பல அடுக்கு மாடிகளுடன் பங்களாக்கள் அமைக்கும் அநீதிக்கு இடந்தரலாகாது.

ஸ்ரீ ஏ. எல். முதலியார் படித்துப் பெற்றுள்ள பட்டங்களையும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவப் பட்டங்களையும் விவரித்துக் கொண்டு போனால் இந்தப் பக்கமே நிறைந்து விடும்! ஆனால் அவரது தனிச் சிறப்புக்கு இவை மட்டும் காரணமல்ல. பேச்சு சுதந்திரமும் மனித சுதந்திரமும் வளரத் தேசம் சர்வகலாசாலைகளைத்தான் நம்பி யிருக்கிறது என்றார் ஸ்ரீ ஏ. எல். முதலியார், கட்டிடத் திறப்பு விழாவின்போது. இத் தன்மைகளை வளர்க்கும் சர்வகலாசாலையின் தலைவராக விளங்கும் அவர், இப்பண்புகளைக் குறைவறப் பெற்றிருப்பதே அவர் பெரிதாக மதிக்கப்படுவதற்கு முக்கிய காரணம். தமக்குச் சரியென்று தோன்றுவதைச் சற்றும் தயங்காமல் வெளியிடும் குணமே அவரைக் குடத்துள் விளக்காக்காமல் குன்றில் ஏற்றி வைத்த தீபமாக்கியிருக்கிறது.

பதின்மூன்று வருஷங்களாகச் சென்னை பிரதம நீதிபதியாக விளங்கிய ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் சட்டத் துறையில் அடைந்த வெற்றிகள் ஒருபுறமிருக்க, கலைகளின் வளர்ச்சியில் காட்டிய ஆர்வமும் அவரது பாஷா ஞானமும் நம்மைப் பிரமிக்க வைக்கும். ஆங்கிலம், பிரஞ்சு, சம்ஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் அவருக்குப் பாண்டித்தியமுண்டு.

அவருக்கும் ஸ்ரீ ஏ. எல். முதலியார் அவர்களுக்கும் டாக்டர் பட்டங்கள் வழங்கியதன் மூலம் சென்னை சர்வகலாசாலையின் பெருமை உயர்ந்திருக்கிறது.







திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

19

திருமத்தையும் தருமம் செய்யும் முறைகளையும் எடுத்தோதிய திருமூலர், அன்பின் சிறப்பை விளக்குகிறார்.

அன்பும் சிவமும்
இரண்டென் பர்அறிவிலார்]

அன்பு என்றும் சிவம் என்றும் வெவ்வேறாகப் பிரித்துச் சொல்வதைத் தவறு என்கிறார். இரண்டும் ஒன்றே என்கிறார்.

அன்பே சிவமாவது
ஆரும் அறிகிலார்

அன்புதான் கனிந்து கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறிவதில்லையே என்று வருந்துகிறார். அறிகிலார் — அறிய மாட்டாமல் அலைகிறார்களே என்பது முனிவரது துயரம்.

அன்பே சிவமாவது
ஆரும் அறிந்தபின்

அன்பும் சிவமும் வெவ்வேறு என்று எண்ணாமல், அன்பு என்ற பண்பு தான் சிவமாக முதிர்கிறது என்பதை அறிந்து விட்டால், பிறகு—

அன்பே சிவமாய்
அமர்ந்திருந் தாரே

அன்பிலே சிவத்தைக் கண்டு அந்தப் பேரின்பத்திலே பதிந்து நிற்பார்கள். அன்புதான் சிவமாகிறது என்பதை அறிந்து விட்டால் அந்த அன்பு வெள்ளத்திலேயே இதயம் இளைந்து. சிவானந்தப் பேறு பெறுவார்கள்.

'அமர்ந்திருப்பார்' என்று சொல்லாமல் 'அமர்ந்திருந்தாரே' என்று முனிவர் சொல்வதன் பொருளைக் கவனிக்க வேண்டும். அந்த இன்பத்திலே அமர்ந்து விடுவார்கள், சந்தேகமில்லை என்பதை உறுதியோடு உணர்த்துவதற்காக எதிர்காலத்தை இறந்த காலமாகப் பாடுகிறார்.

அன்பும் சிவமும்
இரண்டென் பரறிவிலார்
அன்பே சிவமாவ
தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ
தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந் தாரே!

'அன்பு' என்றும் 'சிவம்' என்றும் நினைத்த மாத்திரத்திலேயே நிஷ்டை கூடிவிட்டது முனிவருக்கு! மோனத் தவத்தில் ஆழ்ந்து விட்டார். சிவ தரிசனம் பெற்றுப் பாடுகிறார்!

பொன்னைக் கடந்திலங்
கும் புலித் தோலினன்

[பொன்னை — தங்கத்தை. கடந்து இலங்கும்—மிஞ்சும்படியான பிரகாசத்தோடு ஒளி வீசுகிற. புலித்தோலினன் — புலித்தோலை ஆடையாக உடைய பெருமான். தோலினன்— தோலை உடுத்தியவன்.]

பொன்னைக் கடந்திலங்
கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து
மிளிரும் இளம்பிறை

[மிளிரும் — பளபளக்கிற. இளம் பிறை—பிறைச்சந்திரன்.]

மின்னல் தோன்றியதும் மறையக் கூடியது. ஆனால் சிவபெருமானுடைய

சடையிலே மின்னற் கீற்று ஒன்று. என்றும் மறையாமல் நிற்கிறது. மிளிர்ந்து கொண்டே நிற்கிறது.

மின்னிக் கிடந்து
மிளிரும் இளம்பிறை

[மின்னிக் கிடந்து மிளிரும்—மின்னிக் கொண்டே மறையாமல் நின்று ஒளி வீசுகிற.]

மின்னிக் கிடந்து
மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த
சுடுபொடி யாடிக்கு

[துன்னிக் கிடந்த — மேனியிலே பூசிக் கிடக்கிற. சுடுபொடி—திருநீறு. ஆடி—ஆடல் புரிகிற நடராஜன். சுடுபொடி ஆடிக்கு—திருநீறு தரித்த நடராஜனிடம். துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்கு — மேனி முழுதும் திருநீறு பூசி ஆடல் புரிகிற நடராஜனிடம்.]


துன்னிக் கிடந்த
சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என்
பேரன்பு தானே !

அந்த நடராஜனோடு என்னுடைய அன்பு பிரியாமல் பிணைந்து நிற்கின்றதே—இது முனிவருடைய ஆனந்தம்!


பொன்னைக் கடந்திலங்
கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து
மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த
சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென்
பேரன்பு தானே !

பெருமானின் தரிசனத்தைக் கண்ட முனிவர், நமக்குப் புலித்தோலையும், சடையில் மின்னும் பிறையையும், மேனித் திருநீற்றையும் சொல்லி நிறுத்துகிறார். கைதேர்ந்த ஓவியன் இரண்டு மூன்று கோடுகளில் ஒரு வடிவத்தைச் சித்திரித்து நம்முன் நிறுத்துவது போல், சொல்லுக்கு அடங்காத பொருளை முனிவர் தோலும் பிறையும் சுடுபொடியும் சொல்லி நம் கண்முன் நிறுத்துகிறார் : பாட்டைப் பக்தியுடன் ஓதினால் அதுவே நாம் செய்யும் தவமாகும்!


வாழ்க மணமக்கள்



புது தில்லி ரயில்வே போர்டு உதவி
டைரக்டர் ஸ்ரீராமன் அவர்களின்
புதல்வர் திரு எம். வரதாச்சாரிக்
கும் சௌ செண்பக லக்ஷ்மிக்கும்
திருமணம் நடந்தது.



டிபிங்டன்ராண்ட் கம்பெனியின் விற்
பனைப் பிரதிநிதி திரு கே.டீ.ஆர்.
ராமசாமிக்கும் சௌ ஜெயஸ்ரீக்
கும் திருநெல்வேலியில் விவாகம்
சிறப்பாக நடந்தது.



தென்னிந்திய ரயில்வே சீனியர்
டிராப்ட்ஸ்மென் திரு கிருஷ்ணமாச்
சாரிக்கும் சௌ கல்யாணிக்கும்
வெகு சிறப்பாகத் திருமணம்]
நடைபெற்றது.



ஸ்ரீ பெரும்பூதூர் கூட்டுறவு சப்-
ரிஜிஸ்தரார் திரு சக்ரபாணி அவர்
களின் குமாரி சௌ பிரேம
குமாரியைக் கவிரத்ன புலவர்
காஞ்சி அமிழ்தன் மணந்தார்.



அட்வகேட் திரு சீனிவாச அய்யங்கார்
அவர்களின் புதல்வர் திரு சாரங்க
னுக்கும் திரு வி. பி. சாரதியின்
புதல்வி சௌ. வசந்திக்கும்
விவாகம் நடைபெற்றது.



பிரபல வயலின் வித்துவான் திரு
கோவிந்தசாமி நாயக்கரின் புதல்வி
சௌ பிரேம குமாரிக்கும் திரு
விநாயகத்துக்கும் சென்னையில்
திருமணம் நடந்தது.

வாழ்க மணமக்கள்



அனந்தப்பூர் போலீஸ் பயிற்சிக் கல்லூரி பிரின்ஸிபல் திரு சீனிவாசன் அவர்களின் புதல்வி சௌ கமலா வுக்கும் திரு. பலராமனுக்கும் திருமணம் நடந்தேறியது.



பம்பாய் திரு எஸ். வி. கைலாசபதி அவர்களின் புதல்வி சௌ. மாலதிக் கும் திரு சீதாராமன் அவர்களின் புதல்வர் திரு நாகராஜனுக்கும் விவாகம் நடைபெற்றது.



அன்னதான சிவன் சங்கம் காரியதரிசி திரு ராமநாதனின் புதல்வி சௌ சுந்தரிக்கும் திரு சந்தானத்துக்கும் சுவாமி மலையில் சிறப்பாகத் திரு மணம் நடந்தேறியது.



சைத்ரிகர் திரு உ. கிருஷ்ணனுக்கும் ஆல்வாய் திரு நாதன் அவர்களின் குமாரி சௌ இந்திராவுக்கும் பழனியில் கல்யாணம் விமரிசை யாக நடைபெற்றது.



தெம்மாரா கிருஷ்ணய்யர் அவர் களின் புதல்வர் திரு ராமநாதனுக் கும் சௌபாக்கியவதி கிருஷ்ண பாய்க்கும் திருச்சூரில் திருமணம் சிறப்பாக நடந்தது.



விருத்தாசலம் கல்கி ஏஜண்டின் குமாரரும், பெண்ணுடம் கல்கி ஏஜண்டுமான திரு சுந்தரம் சௌபாக்கியவதி பத்மாவை மணம் புரிந்து கொண்டார்.


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
குடும்பம் முழுவதிற்கும்
மிக்க உகந்தது !
PALMOLIVE
HAIR OIL
பெரிய எகானமி அளவு புட்டியினால்
பணம் மிச்சமாகிறது! மூன்று விரு
விருப்பான வாசனைகளில் கிடைக்கும்:
லவண்டர், மல்லிகை, ரோஜா.
PCH/Q/3 TAM


ஸ்லோன்ஸ்
பாமை
உபயோகித்து
வலியை
உடனே
நிறுத்துங்கள்
SLOAN'S BALM
TRADE MARK
KILLS PAIN
TRADE MARK OWNED BY STANDARD LABORATORIES INC U.S.A.
தலை வலிகள், சுளுக்கு,
கழுத்துப்பிடிப்பு, முது
குவலி, கீல்வாதவலி,
நரம்புவலி மற்றும்
இடுப்புப்பிடிப்பு
முதலானவைகளுக்கு
ஸ்லோன்ஸ் பாமை
வலிக்கும் பாகத்தின்
மேல் தடவவும். உடனே
இதமளிக்கும் இதன்
ஆவி உள்ளே சென்று
வலியுள்ள பாகங்களில்
பரிசுத்தமான ரத்த
ஓட்டம் இருப்பதற்கு
உதவுகிறது. உடனடி
நிவாரணம் பெற வீட்டில்
எப்பொழுதும் ஒரு ஜாடி
ஸ்லோன்ஸ் பாமை
கைவசம் வைத்திருங்கள்.
கீல் வாதம் * சுளுக்கு
தசைவலிகள் இவற்றிற்கு ஏற்றது
வார்னர் - லாம்பர்ட் பார்மசூட்டிகல் கம்பெனி
(யு. எஸ். ஏ.யில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

கல்கியின் இருபதாண்டு நிறைவைப் பாராட்டிப் பல வாசகர்களிடமிருந்தும் கடிதங்கள் வந்துள்ளன. அவர்களுக்கு நன்றி. அவற்றில் சில. —ஆசிரியர்

வாழ்த்துகிறோம்

நாடுஞ்சர நாசிவத்தின் நல்லருளைக்
கொண்டுபுகழ்
கூடுஞ்சர நாசிவத்தின் பண்பதனை-நீடுபுகழ்
பெற்றதமிழ்க் கல்கியெனும்
பெட்டகமே நாலைந்தாண்
டுற்றசெயல் பற்றிமகிழ் வோம்.
கல்கியெனும் பொன்னேடு காசினியில்
மக்களிடைச்
செல்வமுற வாழ்ந்திதனைச்
செப்புகிறோம்—நல்மனைமார்
சீதமலர் மாலையணி தேவியுமை யாளுபய
பாதமதைப் போற்றியுமன் பாம்.

ஜோதிஷர் கே. பி. சுப்ரமண்யம்

❋

‘கல்கி’ இதழுக்கு இருபதாண்டு நிறைந்துள்ள இன்று நான் என் வாழ்த்துக்களைக் கூறுகின்றேன். பல ஆண்டுகளாகத் தங்கள் பத்திரிகையுடன் ஏற்பட்டுள்ள தொடர்பை எண்ணி மகிழ்கிறேன். உங்கள் இலக்கிய, அரசியல், கலைப்பணி கல்கி மூலம் மேலும் சிறக்க இறைவன் அருள்புரிவானாக.

மதராஸ்—7
5—8—61 ம க ர ம்

❋

என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்ட "கல்கி" இன்னும் பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழ — தாயுமானவர் திருவடி பணிகின்றேன்.

திருச்சி
3—8—61 எஸ். மகாராஜன்

❋

‘கல்கி’யின் இருபத்தோராவது பிறந்த நாள் மலர் பார்த்துப் பரவசமடைந்தேன். ஸ்ரீ காமகோடி ஜகத்குருவின் திவ்யமான இளையாத்தங்குடி படமும், அவர்களின் ‘விடுதலை’ என்ற தலைப்பில் வந்திருக்கும் அருள்வாக்கும், ஸ்ரீ ராஜாஜி அவர்களின் தாசில் பிரமராயரும் மலருக்குச் சிறப்பை வழங்குகின்றன. ஸ்ரீ ராஜாஜி அவர்களின் ஆசிச் செய்தியில் சொல்வதுபோல், ‘நன்றாகவும், யோக்கியமாகவும், தெய்வ சிந்தனையுடன்’ சுதந்திர இயக்கத்துக்குத் தொடர்ந்து பணியாற்ற, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை—6
3—8—61 குடந்தை கி. நாகராஜன்

❋

இருபது ஆண்டுகள் நிறையப் பெற்று இருபத்தொன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் ‘கல்கி’க்கு எனது ஆசிகள். சிறுகதை, தொடர்கதை, கட்டுரை, விகடத் துணுக்கு இவற்றுடன் மட்டும் நில்லாது பாகவதம், திருக்குறள், திருவாய்மொழி முதலிய அரும் பெரும் தெய்வ நூல்களின் மணம் வீச, நேயர்களைக் குமரி முதல் வேங்கடம் வரை இட்டுச் சென்று ரசிக்கச் செய்யும் ‘கல்கி’யின் ஆற்றல் இலக்கிய உலகிலே ஒரு பெரும் சாதனையாகும். அஞ்சறைப் பெட்டி போன்ற, சில புதிய பகுதிகளின் மூலமாக இலக்கிய உலகில் மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டுகிறேன்.

மதுரை—3
3—8—61 ஜி. வி. எஸ். மணியம்

❋

இருபதாண்டு நிறைந்த "கல்கி"க்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். முதற் கடவுளும் தமிழ்க் கடவுளுமாகச் சேர்ந்து ஆசிகள் கூறித் தொடங்கிவைத்த இலக்கியப் பணி இன்றுவரை நடந்ததுபோல் என்றும் நடக்க வேண்டுகிறேன்.

சென்னை—4
3—8—61 எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

❋

நாலைந்தாம் ஆண்டை நலமுறவே தாண்டியே
சீலம்சேர் நற்கருத்தைச் செந்தமிழில்—
கோலமுற
எங்கும் பரப்பி இனிதுற வாழிநீ
பொங்குந் தமிழன்னை போல்.

பூதப்பாண்டி
29—7—61 கவிஞர் ம. ஆறுமுகம்

❋

பொழுதினைப் போக்கிடும் புத்தகமா யின்றிப்
பழுதிலாப் பெற்றியொடு
பாங்கா—மெழுத்தைப்
பொழுதுக்கும் காப்பாற்றும்
பொற்புடைய கல்கி
முழுமதியாய் வாழ்க முதிர்ந்து!

தேவகோட்டை
28—7—61 சத்தியவான் எம். ஏ.

❋

கல்கிக்கு இருபதாண்டு பூர்த்தியானது பற்றி மிக்க மகிழ்ச்சி. கதைகளுக்கும் அரசியலுக்கும், தமாஷ் பகுதிகளுக்கும் மற்றும் எல்லாவற்றுக்கும் தமிழ் நாட்டில் முதல் ஸ்தானம் வகிக்கும் வாரப் பத்திரிகைகளில் கல்கியும் ஒன்று. கல்கி இதுபோல் என்றும் நல்ல முறையில் நடக்க வேணுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். வளர்க கல்கி!

காரமடை
27—7—61 எம். ஆர். ராமசாமி

புது வெள்ளம்

ஐந்தாம் அத்தியாயம்

நல்ல மனிதர்

முருகையனும் அவனுடைய மாணவ நண்பர்களும் வாயிற்காவலனின் கண்களில் படாமல் சுற்றுச் சுவரேறிக் குதித்துக்கல்லூரி விடுதிக்குள் நுழைந்தார்கள். குறுக்கே கிடந்த விளையாட்டுப் பொட்டலை அடுத்து நின்ற விடுதிக் கட்டிடம் உறங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தது. ஆனால் உறங்கவில்லை.

ரகசியக் கூட்டத்தின் முடிவை எதிர்பார்த்து, அங்கங்கே சிற்சில மாணவர்கள் தனித்தனியே அறைகளில் விளக்கை அணைத்து விட்டுக் காத்திருந்தார்கள்.

நுழைந்த மாணவர்களின் கண்கள் மேல் மாடியின் ஓரத்து அறையில் விளக்கு எரிகிறதா என்று பார்த்தன. எரியவில்லை. ஆகவே, அவர்கள் தனித் தனியாகப் பிரிந்து சென்று காத்திருந்தவர்களிடம் செய்தியைப் பரப்புவதில் முனைந்தார்கள்.




மாடியில் காப்பாளரின் அறையில் இருளே தவிர, அவர் கண்களில் இருளில்லை. தமிழரான அந்த விடுதிக் காப்பாளரும், ஐரோப்பியரான கல்லூரித் தலைவரும் மாடியில் நின்றவாறே எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள். காப்பாளரின் கண்களில் கடுங்கோபம்; தலைவரின் விழிகளில் வேதனை.

காப்பாளர் கட்டைக் குட்டையாகவும் வழுக்கைத் தலையோடும் கறுப்பு நிறத்தோடும் துடிதுடித்துக்கொண்டு நின்றார். அவர் மேலைநாடுகளுக்குச் சென்று வந்து அவர்களது சில நல்ல பழக்கங்களை மட்டும் கற்றுக் கொண்டவர். ஒழுங்கிலும் கட்டுப்பாட்டிலும் ஓரளவு ராணுவத் தன்மை கொண்ட பிரும்மச்சாரி.

"இப்போதே போய் அவர்களை நான் இங்கே அழைத்து வருகிறேன். இந்த ஒழுங்கீனத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும். இவர்களைத் தண்டிக்கா விட்டால் நம்முடைய ஸ்தாபனத்துக்கே கெட்ட பெயர் வந்து விடும்!" வேகமாகக் கீழே இறங்கிப் போக முயன்றார் காப்பாளர்.

தலைவரின் கரம் அவரைத் தடுத்து நிறுத்தியது. பூனைக் கண்களும் நெடிய உருவமும் சிவந்த மேனியுமாக விளங்கிய அவர் வயதில் முதியவரானாலும் தோற்றத்தில் இளைஞராகக் காட்சியளித்தார்.

"பொறுங்கள்! செய்ய வேண்டியதை நிதானமாகச் செய்வோம். இப்போது நாம் அவசரப்படாமல் இருப்பதுதான் நல்லது" என்றார்.



தலைவரின் வேண்டுகோளைக் காப்பாளரால் மீற முடியவில்லை. "காலம் கெட்டுப் போய் விட்டது. என்னுடைய நெடுநாள் அனுபவத்தில் நான் மாணவர்களிடம் இவ்வளவு மனக்கொதிப்பைக் கண்டதில்லை. கட்டுக்கு மீறிய செயலை இந்த அளவில் நான் பார்த்ததே கிடையாது."

"வாருங்கள், உள்ளே போய்ப் பேசுவோம்" என்று தலைவர் காப்பாளரை அவருடைய அறைக்குள் அழைத்துச்



சென்றார். கண் சிமிட்டும் மங்கலான படுக்கை அறைவிளக்கைமட்டும் போட்டுக் கொண்டு, இருவரும் நாற்காலிகளில் சாய்ந்தார்கள்.

தலைவர் கூறினார் :—

"காரணம் நம்முடைய மாணவர்களிடம் மட்டுமில்லை. இந்த நாட்டிலுள்ள எல்லாக் கல்விக்கூடங்களுமே இப்போது எரிமலைகளாகக் குமுறிக்கொண்டிருக்கின்றன. நாம் வரலாற்றுப் பாடம் சொல்லித் தருகிறோமல்லவா? எதிர்காலத்தின் வரலாற்றுப் பாடத்தை மாற்றப் போகிற நிகழ்ச்சியொன்று இப்போது நடக்கத் தொடங்கியிருக்கிறது. நீங்களும் நானும் அதை எளிதாகத் தடுத்து நிறுத்திவிட முடியாது." இப்படிச் சொல்லி விட்டுக் கல்லூரித் தலைவர் நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

"எல்லாம் இந்தக் காந்தியால் வந்த வினை!" என்று வெறுப்போடு கூறினார் காப்பாளர். தமிழராக இருந்தாலும் அவர் கலப்பற்ற ராஜ விசுவாசி. ஆங்கிலேயர்கள் இந்த உலகையே ஆளப் பிறந்தவர்கள் என்று அவர் மனப் பூர்வமாக நம்பினார்.

"ஆமாம், மிஸ்டர் காந்தி மிக மிகப் பொல்லாதவர்தான்!" என்று கூறிச் சிரித்தார் தலைவர். "தமிழ் நாட்டு இளைஞர்களுக்குக்கூட இவ்வளவு தன்னம்பிக்கையும் சுறுசுறுப்பும் ஊட்டி விட்டாரல்லவா?"

தலைவரின் பேச்சு காப்பாளருக்குச் சுருக்கென்று தைத்தது. காந்தியடிகளிடம் தலைவர் அநுதாபம் கொண்டிருந்ததும், தமிழர்களைப் பற்றி அவர் தவறாக நினைத்ததும் காப்பாளருக்குப் பிடிக்கவில்லை.

அன்னியரிடம் தம்மவர்களை விட்டுக் கொடுக்க விரும்பாத காப்பாளர், "தமிழர்களைப் பற்றி நீங்கள் குறைவாக மதிப்பிட்டிருக்கிறீர்கள்" என்றார். "எங்களுடைய மொழி பழம் பெரும் இலக்கியங்களைக் கொண்ட மொழி; எங்களுடைய நாகரிகம் தலை சிறந்த பண்பாடு கொண்டது. நாங்கள் போரிட்டுச் சாம்ராஜ்யங்களை உருவாக்கினோம்; கடல் கடந்த நாடுகளில் வாணிபம் செய்தோம்; கலைகளையும் இலக்கியங்களையும் வளர்த்தோம்."

கல்லூரித் தலைவர் ஏற்கனவே ஓரளவு தமிழர்களின் பழைய வரலாற்றைத் தெரிந்து வைத்திருந்தவர். ஆகவே அவர் சட்டென்று குறுக்கிட்டு, "நேற்று நீங்கள் எவ்வளவு உயரமாக வளர்ந்திருந்தீர்கள் என்று நான் கேட்கவில்லை; அந்தப் பண்பாடு உங்களுடைய இன்றையச் செயல்களில் எந்த அளவுக்கு வெளிப்படுகிறது என்றுதான் கேட்கிறேன்" என்றார்.

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"நான் இந்த நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தவன். எனக்கு யாரிடமும் தனிப்பட்ட விருப்பும் — வெறுப்பும் கிடையாது. — சில உண்மைகளை நீங்கள் தெரிந்து கொள்வது நல்லது. எத்தனையோ படையெடுப்புக்கள் வடக்கில் நடந்தபோதெல்லாம் நீங்கள் தெற்கில் அவைகளால் பாதிக்கப் படாமல் ஒதுங்கி வாழ்ந்திருக்கிறீர்கள். வானம் காலமழை பொழிகிறது; ஆறுகள் அடங்கி ஓடுகின்றன; நெல் வயல் தானாக விளைகிறது. இயற்கையின் கொடுமைகளோடு போராட்டமோ, செயற்கைக் கொடுமைகளோடு போராட்டமோ நீங்கள் தீவிரமாக நடத்தியதில்லை. ஆடல், பாடல், அமைதி, சோம்பல், வெறும் பேச்சு இவைகளோடு திருப்தி கொண்டு விடுகிறீர்கள். எதிலும் பட்டுக் கொள்ளாமல் துன்பமின்றித் தப்பித்துக் கொள்ளுகிற ஒரு பழக்கம் வந்து விட்டது. — போராடிய இனம், கடல் வாணிபம் செய்த இனம் என்கிறீர்களே, பஞ்சம் வந்த காலங்களில் உங்கள் மக்களை ஏன் பட்டினி போட்டு, கப்பல் கப்பல்களாகத் தென்னாப்பிரிக்காவுக்கும், மலேயா பர்மாவுக்கும், இலங்கைக்கும் கூலிகளாக அனுப்பினீர்கள்? இந்த நாட்டின் பிற பகுதிகளில் வாழ்பவர்களையெல்லாம் கூலிகளாக மாற்ற முடியவில்லையே, ஏன்?"

விடுதிக்காப்பாளருக்கு வியப்பாகவும் வேதனையாகவும் இருந்தது. தமிழர்களுடைய பல நல்ல குணங்களைப் பல முறை பாராட்டியுள்ள தலைவர் இப்போது பலவீனங்களைச் சுட்டிக் காட்டத் தொடங்கி விட்டாரே !

தலைவரின் குரல் மறுபடியும் ஒலித்தது: "அதனால்தான் சொல்கிறேன். ராணுவ பலம், உலக ஆதிக்கம், பணம் இவ்வளவும் கொண்ட எங்களை எதிர்ப்பதற்குத் தமிழ் நாட்டு இளைஞர்களும் முன் வருகிறார்கள் என்றால், அது வரலாற்று நிகழ்ச்சிதான். எங்கே தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும், உழைப்புத் திறனும் வெளிப்படுகிறதோ அங்கே நான் தனிப்பட்ட முறையில் தலை வணங்குவேன்."

"அப்படியானால் நாம் இந்தக் குழப்பங்களை அனுமதிக்கப் போகிறோமா?" என்று அச்சத்தோடு கேட்டார் காப்பாளர்.

"தனிப்பட்ட முறையில் என் கருத்தைச் சொன்னேனே தவிர, கல்லூரித் தலைவன் என்ற முறையில் அல்ல. இங்கே நான் என் கல்லூரிச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவன். கட்டுப்பாட்டை விரும்பாதவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்துத்தான் தீரவேண்டும் !"

தனி மனிதன்-கடமை மனிதன் ஆகிய இருவரும் ஒருவரான மேலை நாட்டு மனிதரைக் கூர்ந்து நோக்கினார் காப்பாளர். நேர்மை-கண்டிப்பு ஆகிய இரண்டையும் குழைத்துச் சமைத்த உருவமாக அது அந்த மங்கலான ஒளியில் தோற்றமளித்தது.

இந்தச் சமயத்தில் இரவின் அமைதியை ஊடுருவிக் கிழிப்பதுபோல் பயங்கரமான ஓர் இயந்திரத்தின் உறுமல் வெளியில் கேட்டது. காப்பாளர் அவசரமாக எழுந்து சென்று மாடியிலிருந்து கவனித்தார். விடுதியின் இரும்பு வாயிலுக்கு வெளியிலிருந்தவாறு இரண்டு கொள்ளிக் கண்கள் உள்ளே நெருப்பை உமிழ்ந்தன. வாயிற் காவலன் கதவைத் திறந்து விட்டவுடன், வேகமாக ஒரு மோட்டார் விடுதிக் கட்டிடத்தின்மேல் மோதிக் கொள்வது போல் வந்து நின்றது.

அங்கங்கே அறைகளில் சிதறிக் கிடந்த மாணவர்கள், மோட்டார் வெளியில் நின்றபோதே தங்கள் அறைகளுக்குத் திரும்பி விட்டார்கள். சன்னல் கதவுகள் வழியே பல தலைகள் ஒரே சமயத்தில் எட்டிப் பார்த்து விட்டு, உடனே படுக்கைகளில் பதுங்கிக் கொண்டன. சிலரது நெஞ்சுகளில் பயம்; சிலருக்கு வேர்த்துக் கொட்டியது; சிலரே அமைதியுடன் படுக்கைகளில் கிடந்தார்கள்.

முருகையன் தன் அறைக் கதவைத் திறந்து மோட்டாரை நோக்கிச் செல்ல முயன்றான். அவன் அறை நண்பன் அவனை விடவில்லை. "பேசாமல் வந்து உட்கார்!" என்று மெதுவாகச் சொல்லி, அவனைக் கட்டிலில் பிடித்துத் தள்ளினான்.

மாடியிலிருந்து பார்த்த விடுதிக் காப்பாளருக்கு மூன்று உருவங்கள் காரிலிருந்து கீழே இறங்குவது தெரிந்தது. தொடர்ந்து கனமான மிதியடிகளின் பரபரப்பான ஒலி மாடிப் படிகளில் கேட்டது. வேர்க்க விறு விறுக்கத் தம் அறைக்குள் நுழைந்து கல்லூரித் தலைவரிடம், "போலீஸ்காரர்கள் வந்து விட்டார்கள்!" என்று பதறினார் காப்பாளர்.

"முதலில் விளக்கைப் போடுங்கள் !" என்றார் தலைவர். "நீங்கள் சிறிது நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்" என்று தொடர்ந்து சொல்லி விட்டு, அவருடைய காதில் ஏதோ அவசரம் அவசரமாக ரகசியம் பேசினார். பிறகு, "அவர்களை என்னிடம் அனுப்பி விட்டு, நீங்கள் போய் நான் சொல்லிய காரியத்தை உடனே கவனியுங்கள் !" என்று காப்பாளரை வெளியில் அனுப்பினார்.

போலீஸ் இன்ஸ்பெக்டரும் இரண்டு சேவகர்களும் அங்கே வந்தார்கள். சேவகர்கள் வெளியில் நிற்க, இன்ஸ்பெக்டர் மட்டும் அறைக்குள் நுழைந்தார்.

ஆறும் அத்தியாயம்

மனித வேட்டை

போலீஸ் இன்ஸ்பெக்டர் மிகவும் மரியாதையோடும் அடக்கத்தோடும் தாம் வந்த காரணத்தைத் தலைவரிடம் வெளியிட்டார். கல்லூரித் தலைவர் என்பதைத் தவிர, அவர் வெள்ளைக்காரர் என்கிற உணர்ச்சி இன்ஸ்பெக்டரை மிகவும் பணிவோடு பேச வைத்தது.

அந்தக் கல்லூரி மாணவன் முருகையன் என்பவன்



மிகவும் பயங்கரமான புரட்சிக்காரன் என்றும், பல சதிச் செயல்களுக்கு அவன் மாணவர்களைத் தூண்டி விடுவதாகவும், அவனால் நாட்டின் சட்டத்துக்கும் ஒழுங்குக்கும் பங்கம் விளைந்து விடக் கூடுமென்றும் அவர் தெரிவித்தார். அதோடு அவர் நிறுத்தவில்லை. "இன்னும் தண்டவாளம், தந்திக் கம்பி, வெடிகுண்டு இப்படிப் பல விஷயங்களில் அவன் முனைந்திருக்கிறானென்று தெரிகிறது. அவன் மிகவும் ஆபத்தானவன் என்பதற்குச் சாட்சிகள் இருக்கின்றன."

கல்லூரித் தலைவர் இன்ஸ்பெக்டரின் கூற்றைச் சிறிதுகூட நம்பாதவர் போல் இலேசாகச் சிரித்தார்.

"எனக்கு முருகையனை நன்றாகத் தெரியும். ஒன்றுமே புரியாத அப்பாவியான கிராமவாசி அவன். படிப்பிலே அவன் கெட்டிக்காரன். மாணவர்களுக்குக் கஷ்டம் வரும்போதெல்லாம் அவன்தான் உதவிக்கு முன்னால் ஓடி வருவான். யாருக்காவது நோய் நொடியென்றால் அவன்தான் அவர்களைக் கவனித்துக் கொள்வான். முருகையன் மிகவும் நல்ல பையனாயிற்றே?"

"நல்லவர்களால்தான் இப்போது எங்களுக்கெல்லாம் தொல்லைகள் வருகின்றன" என்று சலிப்போடு கூறினார் இன்ஸ்பெக்டர். பிறகு, "தயவுசெய்து அவனை நான் அழைத்துக் கொண்டு போவதற்கு அநுமதி தாருங்கள்; கொண்டு போய் அவனை விசாரணை செய்ய வேண்டும்" என்றார்.

போலீஸ் மொழியில் அந்தக் காலத்தில், 'விசாரணை' என்றால் அதற்குப் பல விதமான பொருள் உண்டு. அவசரகாலச் சட்டங்கள் அவர்களிடம் அளவுக்கு மீறிய அதிகாரத்தைக் குவித்து வைத்திருந்தன. முருகையனை எந்த விசாரணைக்கு அவர் அழைத்தார் என்று தலைவருக்குப் புரியவில்லை.

"இதோ பாருங்கள்! என்னுடைய மாணவர்களால் சட்டத்துக்கும் அமைதிக்கும் பங்கம் வராமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள்."

'முடியாது' என்பதுபோல் தலையசைத்தார் இன்ஸ்பெக்டர். "இனியும் அவனை வெளியில் விட்டு வைக்க முடியாது. விஷயம் என் மேலதிகாரிக்குப் போய் விட்டது. தயவுசெய்து என் கடமையைச் செய்ய எனக்கு உதவி செய்யுங்கள்."

"இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதைக் கொண்டு நீங்கள் முடிவுக்கு வர வேண்டாம். இந்த நடவடிக்கைகளால் நிலைமை மோசமாகிவிடக்கூடும்."

கல்லூரித் தலைவரும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கண்ணியமான சொற்களில் கடமைப் போர் புரிந்து கொண்டார்கள். இருவருமே விட்டுக் கொடுக்கவில்லை. கடைசியில் வெள்ளைக்காரர் கறுப்பரின் கடமைப் பிடிவாதத்திலிருந்து அவரைத் தளர்த்த முடியாதென்று நன்றாகக் கண்டு கொண்டார்.

"முருகையனை அழைத்துக் கொண்டு தான் போகவேண்டுமென்று நீங்கள் கட்டாயப் படுத்தினால், நாளைக்குக் காலையில் வாருங்கள். நேற்று மாலையில் என்னிடம் அநுமதி கேட்டுக் கொண்டு அவன் திருவானைக்காவலுக்குப் போயிருக்கிறான். காலையில் அவன் திரும்பி விடுவான்."



யோசனை செய்தார் இன்ஸ்பெக்டர். வெள்ளைக்காரர் பேசுகிற பேச்சை எப்படி அவர் முகத்துக்கு எதிரில் நம்பவில்லை என்று சொல்வது?

"காவல்காரனை முருகையனுடைய அறையின் நம்பரைக்கேட்டேன். பதினாறு என்று சொன்னான். ஒரு வேளை இரவிலேயே அவன் திரும்பியிருந்தாலும் திரும்பி விருப்பானல்லவா?"

"அறைக்குப் போய்ப் பார்க்கவேண்டுமென்கிறீர்கள்?"

"ஆமாம்."

இருவரும் பதினாறும் எண்ணுள்ள அறைக்குச் சென்று பார்த்தார்கள். அங்கே முருகையனைக் காணவில்லை. அவனுடன் வசித்தவன், மாலையிலிருந்து முருகையன் அறைக்குத் திரும்பவில்லை என்று கூறிவிட்டான். இன்ஸ்பெக்டர் மிகுந்த ஏமாற்றத்தோடு, தலைவரின் சிரமங்களுக்கு நன்றி கூறிவிட்டு, மறுநாள் திரும்பி வருவதாகக் கூறினார். போலீஸ் மோட்டார் விடுதியின் வாயிலைக் கடந்துசென்று இருளில் மறைந்தது.

கைகளைக் கட்டிக் கொண்டு ஒருகணம் யோசனை செய்த' கல்லூரித் தலைவர், தம்முடைய அலுவல் அறையை நோக்கித் துரிதமாக நடந்தார். கதவைத் திறந்து கொண்டு விளக்கைப் போட்டார். அங்கே நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த விடுதிக் காப்பாளரின் அருகில் முருகையன் சிலை போல் நின்றுகொண்டிருந்தான்.

கல்லூரித் தலைவரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தவுடன் ஏனோ முருகையனால் துக்கத்தின் குமுறலைத் தாங்க முடியவில்லை. அவனுடைய உதடுகள்



துடித்தன; கண்கள் கலங்கின. தலைவருக்கு வணக்கம் செலுத்தி விட்டு, "தயவுசெய்து என்னைக் கோழையாக்கி விடாதீர்கள்; எனக்குப் பயத்தை ஊட்டி விடாதீர்கள்" என்று கெஞ்சினான். "நான் போலீஸ்காரர்களுக்கோ, வேறு யாருக்குமோ பயப்படவில்லை. அவர்கள் என்னைக் கைது செய்து கொள்ளட்டும்; அடிக்கட்டும்; உதைக்கட்டும். சுட்டுக் கொல்லட்டும்!"

முருகையன் தேம்பித் தேம்பி விம்மி விம்மி அழத் தொடங்கினான். விடுதிக் காப்பாளருக்கு அந்த அப்பாவிப் பையனிடம் இப்படி ஓர் இரும்பு நெஞ்சு இருக்க முடியும் என்றே நம்ப முடியவில்லை. திகைப்போடு அவனையும் தலைவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

"முருகையா! நான் சொல்வதைக் கேள்" என்றார் தலைவர். "உன்னைத் தப்புவிக்கும் முயற்சியில் நீ என்னோடு ஒத்துழைக்க வேண்டும்; என்னிடமே



உன் ஒத்துழையாமையைத் தொடங்கி விடக் கூடாது."

"தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்; நான் சிறைக்குப் போகிறேன்" என்றான் முருகையன்.

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. மிஸ்டர் காந்தி உன் போன்ற இளைஞர்களின் நரம்புகளிலெல்லாம் மின்சாரத்தை ஓடச் செய்து விட்டார். உங்கள் நெஞ்சிலே நெருப்பு மூட்டிவிட்டார்" என்று அன்புடன் அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு, "ஆனால் அவர் நம்பிக்கை வைத்திருக்கிற அளவுக்கு இந்த நாட்டு மக்கள் இன்னும் வளரவில்லை; போலீஸ் வந்த செய்தி தெரிந்த பிறகு உன்னுடைய மாணவ நண்பர்கள் பலரே உன்னைக் கைவிட்டு விடுவார்கள்; வீணாக ஒரு சில இளைஞர்கள் மட்டிலும் பலியாகப் போகிறார்கள். வேண்டாம், முருகையா!" என்றார் தலைவர்.

"பலி பீடத்துக்கு நான் தயாராகிவிட்டேன். என்னோடு சேருகிறவர்கள் சேரட்டும்; சேராதவர்கள் போகட்டும்!"

பரிவோடும் அன்போடும் முருகையனிடம் கல்லூரித் தலைவர் பேசிய பேச்சுக்கள் வியர்த்தமாகி விட்டன. அவன் பணிவோடும் உறுதியோடும் மறுத்து வந்தான். பிறகு, தலைவர் கோபமும் கண்டிப்பும் நிறைந்த குரலில் அவனை அதட்டினார்.

"முருகையா! உன்னைப் பெற்று வளர்த்தவர்கள் கல்லூரியில் நீ படித்து வாழக் கற்றுக் கொள்ளுவாய் என்று நம்பித்தான் அனுப்பியிருக்கிறார்கள். சாகக் கற்றுக் கொள்ளுவதற்கு அனுப்பவில்லை. எங்களை நம்பி அனுப்பியவர்களின் குழந்தைகளை நாங்கள் போலீஸ்காரர்களின் கைகளில் ஒப்புவித்து விட்டு வேடிக்கை பார்க்க முடியாது. மிஸ்டர் காந்தியிடம் எனக்கு மதிப்பு உண்டு; ஆனால் மாணவர்களை மட்டும் அவர் போராட்டத்திலிருந்து ஒதுக்கியிருக்க வேண்டும்."

"தயவுசெய்து காந்தியடிகளைப் பற்றி மட்டிலும் குறை கூறாதீர்கள். உங்களுக்கு ஏசுநாதர் எப்படியோ அப்படி அவர் எங்களுக்கு. மண்ணில் புழுவாய் நெளிந்த எங்களை மனிதர்களாய் மாற்றி வைத்த மகாத்மா!"

கல்லூரித் தலைவருக்குப் புல்லரித்தது. ஏசுநாதரையும், காந்தியடிகளையும் அவர் பல முறை ஒன்றாகச் சேர்த்துச் சிந்தனை செய்ததுண்டு. தம் மாணவனின் வாயால் அதே சொல்லை அவர் கேட்டு விட்டார்.

ஆனால், மேலும் தம்மைக் கடினமாக்கிக் கொண்டு, "கல்லூரிச் சட்டங்களில் நான் எவ்வளவு கண்டிப்பானவன் என்பது தெரியுமல்லவா?" என்றார். "இங்கே கட்டுப்பாடு குலைவதை நான் அனுமதிக்க முடியாது. உன்னைக் கல்லூரியிலிருந்து நீக்கி விட்டதாக வைத்துக் கொள். மற்ற மாணவர்களும் உன்னைப் போலிருந்தால், நான் கல்லூரியை மூடச் சொல்லி, எல்லோரையும் ஊருக்கு அனுப்பி வைக்கப் போகிறேன். முதலில் அடுத்த ரயிலில் நீ ஊருக்குக் கிளம்பு. என்னோடு ரயிலடிக்குப் புறப்படு. நானே உன்னை அனுப்பிவிட்டு வருகிறேன்."

கல்லூரித் தலைவர் தம்முடைய காரில் முருகையனை ஏற்றிக் கொண்டு வந்து, திருச்சி கோட்டை ஸ்டேஷனில் அவனை வழியனுப்பி வைத்தார். தழுதழுத்த குரலில் ஆசி கூறினார். ரயிலடியிலிருந்து திரும்பி வந்து தம்முடைய காரில் உட்கார்ந்தபோது அவர் கண்கள் கலங்கியிருந்தன. அவர் யாரோ, அவன் யாரோ, ஆனால் இருவருமே மனிதர்கள்!



ஸ்ரீ அஹோபில மடம் 44-வது பட்டம் அழகிய சிங்கர் ஸ்வாமிகள் ஸ்ரீரங்கத்தில் ரங்கவல்லித்தாயாரைச் சேவித்து விட்டு ஸ்ரீ தேசிகர் ஸன்னிதிக்கு மடத்துச் சிஷ்யர்களுடன் வலம் வரும் காட்சியைக் காணலாம்.

இருவருடைய கண்ணீரி லும் உவர்ப்பு இருந்தது தான் ஒரே ஒற்றுமை.

* * *

முருகையன் சென்னையிலிருந்து ஏறி வந்து கொண்டிருந்த திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் விழுப்புரத்தை நெருங்கிய போது, அவனுக்கு அவனுடைய கல்லூரித் தலைவரின் நினைவு வந்தது. சிறைக்குச் செல்வதிலிருந்து அவனைத் தடுக்க விரும்பிய அவர் எண்ணம் நிறைவேறவில்லை. ஆனால் முருகையனை அடிக்கடி அவரை நினைத்துக் கொண்டான். அன்றைக்குக் கோட்டையில் ரயிலேறிய பிறகு, சிறகொடிந்த பறவை போல் அவன் தேம்பித் தேம்பி அழுத காட்சியைக்கூட அவனால் மறக்க முடியவில்லை. அதன் பிறகு அவனோடு படித்த மாணவர்கள் என்ன செய்தார்களோ, என்ன ஆனார்களோ! கல்லூரி வாழ்க்கையே இப்படித்தானா?

விழுப்புரம் சந்திப்பில் ரயில் நின்ற போது, எதிரில் குருசாமி இலேசாகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். கீழே இறங்கிச் சற்றுக் காற்றாட நடந்து விட்டு வரவேண்டும் போல் தோன்றியது முருகையனுக்கு. இறங்கியவன் ஒரு பெட்டிக் கடை வரையில் சென்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றான். எதிர்ப்புறம் சென்னைக்குச் செல்லும் ரயில் காத்திருந்தது. முருகையன் தன் முதுகுக்குப் பின்புறம் அந்த ரயிலிலிருந்து கமகமவென்று பொங்கிக் கொண்டிருந்த மல்லிகைப் பூவின் வாசனையில் ஒரு கணம் கிறங்கி நின்றான்.

"இந்தாப்பா, உன்னைத்தானே?" என்று பின்புறமிருந்து தலையிலடிப்பது போல் ஒரு குரல் கேட்டது. "இங்கே ஒரு சோடா கொண்டு வரச்சொல்!"

முருகையன் திரும்பிப் பார்க்கவில்லை. தனக்கு அப்படி உத்தரவிட்டது ஒரு பெண்ணின் குரல் என்பதை மட்டும் தெரிந்து கொண்டான்.

கடைக்காரனுடைய அவசர வியாபாரத்தில் சோடாவை அவனிடம் கொண்டு போய்க் கொடுக்க நேரமில்லை. முருகையனுக்குத் தன்னை அவள் அலட்சியமாய் அதட்டி யழைத்தது பிடிக்கவில்லையென்றாலும், கேட்டவள் பெண் என்பதால், தானே சோடாவை வாங்கிக் கொண்டு திரும்பினான். திரும்பும்போது எதேச்சையாக அவனுடைய உருவம் கடையின் நிலைக்கண்ணாடியில் தெரிந்தது. சிறையிலிருந்து திரும்பிய உருவம் வேறு எப்படியிருக்கும்? உடையையும் உருவத்தையும் கொண்டு கணக்குப் போடும் உலகத்தில் மனிதனை வேறு எப்படி மதிப்பார்கள்? தன்னைத் தானே சமாதானப் படுத்திக்கொண்டு முருகையன் சோடாப் புட்டியுடன் ரயில் பெட்டிக்கு வந்தான். அவள் இருந்தது முதல் வகுப்பு.

நீட்டிய கரத்தின் குலுங்கும் வளைகளை அவன் கவனித்தானே தவிர, அவள் முகத்தை அவன் ஏறிட்டுப்பார்க்கவில்லை.

"அத்தான், நீங்களா?"

தலையைத் தூக்கினான் முருகையன். அவளோ தன் தலை நிறைய வழியும் மல்லிகைச் சரம் தோளில் துவண்டுவிழ, பட்டும் ஜரிகையும் பளபளக்கும் மேனியோடு, அகன்ற விழிகளால் அவனை வியப்புடன் உற்றுப் பார்த்தாள்.

முருகையனின் முகம் மலர்ச்சியுற்றது. கண்கள் புத்தொளி பெற்றன. இருதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

"சித்திரா!" என்றான் ஆர்வத்தோடு.

சித்திரத்தில் எழுதிப் பார்க்கவேண்டிய சித்திரப் பூம்பாவை தனது முத்துப் பல் வரிசை தெரியச் சிரித்துக்கொண்டு ரயில் பெட்டியிலிருந்து கீழே குதித்தது. ரோஜா மலர்மாலை பட்டு மெத்தையிலிருந்து நழுவி விழுவதுபோன்ற அற்புதமான காட்சிதான்.

"சிறைக்குப் போய்விட்டு இப்போது தான் திரும்பி வருகிறீர்களா? உங்களை எனக்கு அடையாளமே தெரியவில்லை, அத்தான்!"

(தொடரும்)


நரிவேட்டை
கதை: ஜெயந்தி
சித்திரம்: விநு
லாஷாவிடம் சிறைவைக்கப்பட்டிருக்கும் ஷியாமாவும் ரஹீமும் தப்பி ஓட முற்படுகையில் மோட்டார் ஒன்றின் பிரகாசமான முன் விளக்கொளி அவர்களைக் கணப்பொழுதுக்குச் சிலையாக்குகிறது.
காரிலிருந்து இறங்குகிறான் லாஷா......
19
ஷியாமா! மீண்டும் இவனிடமா அகப்பட்டுக் கொள்வது? ஓடு! ஓடு!
ரஹீம்! இனி ஓடுவதில் பலனில்லை. அதோ பாருங்கள்!
சத்தம் கேட்டு விரைந்து வரும் இரட்டையர்கள் தப்ப முயலுபவர்கள் மீது நாய்களை ஏவி விட முற்பட்டிருப்பதை ரஹீமுக்குச் சுட்டிக் காட்டுகிறாள் ஷியாமா.
மறுபடியும் இவர்களுக்கு அடிமையாக நான் விரும்பவில்லை. வருகிறேன்.
ரஹீம்! வேண்டாம், நில்லுங்கள்!
நிற்க மாட்டான் ஷியாமா! இன்று சாக வேண்டுமென்பது அவன் தலை விதி!
அந்தக் கோரக் காட்சியைக் காணச் சகியாமல் கண்களைப் பொத்திக் கொள்கிறாள் ஷியாமா
இவ்வளவு சீக்கிரம் நான் திரும்பிவிடுவேன் என்று எதிர் பார்த்திருக்க மாட்டீர்க


காவல் நிலையத்தில் அந்தரங்க ஆலோசனை நடைபெறுகிறது.
லாஷா குற்றவாளி என்பதை இந்த ஒலிப்பதிவு நிரூபிக்கிறதே, குமார்! ஏன் தயக்கம்?
திடுதிப்பென்று போலீஸ் படையுடன் சென்று அவனை வளைத்துப் பிடித்து விடலாம்... ஆனால்...
ஷியாமாவின் நிலையைக் கருதி யோசிக்கிறீர்களோ? ஆமாம், யார் அது?
என் மனைவி!
ஆ! அப்படியா? உங்கள் சங்கடம் எனக்குப் புரிகிறது.
அவளுக்கு ஆபத்து நேரலாம் என்பதற்காகக் கடமையிலிருந்து வழுவுவதை நான் விரும்பவில்லை, இன்ஸ்பெக்டர்!
நாளை இரவு லாஷாவின் பங்களாவை நாம் சுற்றி வளைக்கப் போவதை விக்ரம் மூலமாக ஷியாமாவுக்கு ரகசியமாகத் தெரியப்படுத்தினால்?
பேருபகாரமாய்த்தான் இருக்கும். அவள் எச்சரிக்கையாக இருக்க உதவும். ஒருவேளை தப்பி விடுவது கூடச் சாத்தியமாகலாம்!
ஆனால்... இன்ஸ்பெக்டர்! விக்ரம் என்னை நேசிக்கிறான். ஷியாமாவை என் தங்கை என்றே இதுவரை எண்ணியிருக்கிறான். காரியார்த்தமாக நானும் சேர்ந்து நடத்திய நாடகம் இது. அவர்கள் சந்திப்பின்போ உண்மை வெளியாகி விட்டால்,


இதென்ன குழப்பம்?... உங்கள் மனைவியின் நலனை உத்தேசித்து அந்த ஆபத்துக்கு உடன்பட்டுத்தானாக வேண்டும் குமார்! வேறு வழியில்லை!
இன்ஸ்பெக்டரின் யோசனைக் கிணங்கி மறுநாள் மீண்டும் லின்பியின் உதவியை நாடுகிறான் குமார்.
இதோ பார்! லைஷா உன்னிடம் நம்பிக்கை வைத்திருக்கிறான். துளிக்கூட அவனுக்குச் சந்தேகம் உண்டாகாது.
குமார்! இவ்வளவு தூரம் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமா? உங்கள் தங்கையின் உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கையில் நான் மறுக்கவா போகிறேன்?
சபாஷ்!
ஆனால் நீ எனக்கொரு வாக்குறுதி தரவேண்டும் லின்பி! அவனிடம் நீ தேவைக்கதிகமாகப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. இந்தக் கடிதத்தைச் சேர்ப்பித்து விட்டு உடனே திரும்பி விடு.
உங்கள் அன்பு கிட்டுவது உறுதியான பிறகு, எதையும் செய்யக் காத்திருக்கிறேன் குமார்! வரட்டுமா?
தொடரும்.



ஜனவரி 1961லிருந்து ஜூன் 1961வரை அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியாவிலுள்ள பாடா கம்பெனியாரிடமிருந்து 590000 ஜோடி காலணிகள் வாங்கி இருக்கின்றன.

Bata

போகாத சந்தனக் கட்டையின் மணம் போல் குடிவழி வந்த வீரக் களை கரும் இய முகத்தில் இன்னும் ஒடுங்காமல் விரிந்து தெரிந்தது. சண்டைக்குக் கொடி கட்டிக் கொண்டு வந்து நிற்கும் அவ ரிடம் இளங்குமரன் அமைதியான முறை யில் பேசினான்.

''ஐயா! பட்டி மண்டபத்தில் சமய வாதம் புரிவதற்காக நான் புறப்பட் டுக் கொண்டிருக்கிறேன். இந்த நகரத் தில் பல நாட்டு அறிவாளிகள் சந்தித் துப் போரிடுவதற்கு இந்திர விழாநாட் கள்தாம் வாய்ப்பு ஏற்படுத்துகின்றன. நம்முடைய சொந்த விவாதத்தை என் றைக்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாமே? நானும் குருகுல வாசம் முடித்து காவிரிப் பூம்பட்டினத்துக்கே திரும்பி விட்டேன். இனிமேல் நாம் சந்தித்துக் கொள்வதும் அரிய காரியம் இல்லையே.....?''

''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, தம்பீ! அந்தக் திருநாங்கூர் கிழவனும் இந்த ஆலமுற்றத்து மனிதனும் சேர்ந்து உன்னைச் சரியான பித்தனாக மாற்றி யிருக்கிறார்கள். உன்னிடம் மிக முக்கிய மான செய்தி யொன்று பேச வேண் டும். இந்திர விழா முடிந்ததும் ஒரு நாள் தனியாக வந்து சேர்'' என்று வேண்டா வெறுப்புடன் கூறிவிட்டு முல்லையோடு திரும்பிச் சென்றார் வளநாடுடையார். ஆலமுற்றத்துக் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்த போது, நான் வந்திருப்பது தெரிந்து தந்தையும் மகளும் படைக்கலச் சாலைக் குள்ளும் வந்து சென்றிருக்க வேண்டும் என்று அவர்கள் வரவைப் பற்றி அனு மானம் செய்தான் இளங்குமரன்.

யானையைச் செலுத்திக் கொண்டு இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து நாளங்காடியை நோக்கித் திரும்பிய போது அவனுடைய பழைய நண்பர்கள் சிலர் கைகோத்தபடி எதிரே வந்து கொண்டிருப்பது தெரிந்தது. இப்போது அவர்கள் யாவரும் வளர்ந்து உடற் கட்டும் பெற்றிருந்தனர்.

அவர்கள் தன்னை அடையாளம் தெரிந்து கொள்வார்கள் என்ற நினைப் போடு யானையின் நடையை மெதுவாக்கி நிற்கச் செய்தான் இளங்குமரன். ஆனால் அவர்கள் அவனை யாரோ பெரிய ஞானி என்ற வழக்கமான மதிப்புக்காக உற்றுப் பாராமல் மேல் நோக்கிக் கைகூப்பி விட்டு முன்னே நடந்து சென்றார்கள். அவனுக்கு அவர்கள் எல்லாரையும் எல்லாவற்றையும் நினைவிருந்தது. அவனை அவர்கள் எல்லாருக்கும் நினை வில்லை. அவன் மாறியிருந்தான். எதிரே வருகிறவர்கள் செலுத்திய வணக்கங் களையும் மதிப்புக்களையும் தன் குருவின் பிரதிநிதியா யிருந்து அவர் சார்பில் வாங்கி அவருக்கே அனுப்பிவைப்பதாகப் பாவித்துக்கொண்டு சென்றான் அவன்.

தெருத் திருப்பங்களிலும், நான்கு வீதிகள் சந்திக்கும் சதுக்கங்களிலும் இளை ஞர்கள் பலப் பரீட்சை செய்து கொள்வ தற்காகக் கிடந்த இளவட்டக் கற்களைக் கண்ட போது மனத்துக்குள் சிரித்துக் கொண்டான் இளங்குமரன்.

யானை நாளங்காடியை அடைந்த போது வானில் நிலா எழுந்தது. ஒரு

ஏடுகள்-இவை அந்தக் கொடியில் இலங்கும் உருவங்களாய் வரையப் பெற்றிருக்கின்றன. எது வெற்றி? எது தோல்வி? ஓர் எல்லையில் நின்று பார்க்கும் போது வெற்றியாகத் தெரிவது மற்றோர் எல்லையில் நின்று பார்த்தால் தோல்வியாகத் தெரிகிறதே! மனிதர்களின் நியதிப்படி பார்த்தால் தங்கள் மனம் நினைத்தது நினைத்தவாறே, விரும்பியது விரும்பியவண்ணமே விளைந்தால் அது வெற்றி. அல்லாதது தோல்வி. ஒரு விளைவை வெற்றியாகவும் தோல்வியாகவும் எடுத்துக் கொள்வது அந்த விளைவை அநுபவிக்கும் மனப் பக்குவத்தைப் பொறுத்ததுதான்.

காவிரிப்பூம் பட்டினத்தை நெருங்க நெருங்கச் சாலைகளில் கூட்டம் நிறைந்திருந்தது. நீலநாகமறவர் தேரை மெல்லச் செலுத்தினார். தீபாலங்காரங்களும், வாண வேடிக்கைகளுமாக எதிரே மாபெரும் கோநகரம் தெரிந்தது. கடல் அலைகளின் ஓசையோடு இந்திர விழா ஆரவாரங்களும் கேட்டன. நகரத்தின் ஒளி அலங்காரங்கள் நீர்ப் பரப்பில் பிரதிபலித்து மேலும் அழகு உண்டாக்கிக் கொண்டிருந்தன. இனிமையான இசை ஒலிகள் காற்றில் மிதந்து வந்தன. பூம்புகாரின் எல்லைக்குத் தேர் வந்ததும் இளங்குமரன் தன் மனத்தில் ஒரு சங்கல்பம் செய்யத் தொடங்கினான்:-

'இந்த ஆரவாரங்களுக்கு நடுவே என் அறிவைக் காப்பாற்று. இந்த வேகத்துக்கு நடுவே எனக்கு நிதானத்தைக் கொடு. இந்தக் கூட்டத்துக்கு நடுவே என்னுடைய தியானத்துக்குத் தனிமையைக் கொடு. தேன் பாத்திரத்துள் சுவைப்பதற்கு இறங்கும் வண்டு அதனுள்ளேயே மூழ்கி மாண்டு போவதுபோல் கண்ணுக்கினியனவும், செவிக்கினியனவும், நாவுக்கினியனவும், வாசனைக்கு இனியனவும் ஆகிய சுவை வெள்ளங்களில் மூழ்கி அழிந்து விடாமல் நீந்திக் கரையேறுகிற ஆற்றலை எனக்குக் கொடு. நினைவின் அருவங்களாகிய கனவுகளில் இருந்து என் மனம் விலகி நிற்கட்டும். மெய்யொளியை மறைக்கும் பொய்யொளிகளை என் கண்கள் காணக் கூசட்டும். வெற்றுரைகளைக் கேட்காமல் என் செவிகள் மூடிக் கொள்ளட்டும். வெற்றுரைகளைப் பேசாமல் என் நா அடங்கட்டும்.'—

தங்கள் தேர் செல்லும் வழியின் இருபுறமும் நடந்து போய்க் கொண்டிருந்தவர்கள் தேருக்குள்ளே நோக்கிக் கை கூப்பி வணங்குவதையும் முகம் மலர்வதையும் நீலநாகமறவர் பார்த்துக் கொண்டே குதிரைகளைச் செலுத்தினார். தாமே அடிக்கடி பின்புறம் திரும்பி இளங்குமரனைப் பார்த்தார் அவர். பவழச் செஞ்சுடர் மேனியும் பன்மடங்கு பெருகிய அழகோடு காந்தி இலகும் கனிந்த முக மண்டலமுமாகக் கொடியேந்தி நிற்கும் குமரக் கடவுளைப் போல நின்று கொண்டிருந்தான் இளங்குமரன். பிறரால் வணங்கப்படும் தன்மை அல்லது பிறரை வணங்குவிக்கும் தன்மை எதுவோ அது அவன் தோற்றத்திலேயே இரண்டறக் கலந்திருந்தது. புனிதமான சகல சக்திகளும் வாய்ந்த இளந்துறவியொருவனை வணங்குவதாக நினைந்து அவனை வணங்கினார்கள் வழிப்பயணம் செய்த மக்கள்.

அவன் பயணம் செய்த தேர் ஆலமுற்றத்தில் வந்து நின்றபோது, அவனுடைய வாழ்க்கைத் தேர் மூன்றாவது பருவத்தில் வந்து நின்றது. வலது பாதத்தை முன் வைத்துக் கீழே இறங்கினான் இளங்குமரன். கடற்காற்றிலே அவன் கரத்திலிருந்த கொடி அசைந்தாடியது. மேலே வாகை மரத்திலிருந்து தற்செயலாக உதிர்ந்த பூக்கள் அந்தக் கொடியின் மேல் விழுந்தன.

''இந்தப் பூக்கள் போரைத் தொடங்கு முன்பே உனது கொடிக்கு வெற்றிவாகை சூடுகின்றன'' என்றார் நீலநாகமறவர்.

''இந்த விநாடியில் இங்கே உதிர்ந்த இதே பூக்களை மானசீகமாக எடுத்துக் கொண்டு போய் என் குருவின் பாதங்களில் உதிர்க்கிறேன் நான்'' - என்று சொல்லி வணங்கினான் இளங்குமரன். அவன் கண்கள் குருவின் உருவத்தைப் பாவனை புரிய மூடின.

1. புதிய பூம்புகார்

அவ்வளவு காலம் திருநாங்கூரில் இருந்த பின் இன்று மறுபடியும் வந்து பார்க்கிறபோது காவிரிப்பூம்பட்டினம் முன்பிருந்ததைக் காட்டிலும் பெரிய நகரமாக வளர்ந்திருப்பது போல் காட்சியளித்தது இளங்குமரனுக்கு. நீலநாகமறவருடைய படைக்கலச் சாலையில் அன்று மாணவர்களாக இருந்த பலர் இன்று பயிற்சி முடிந்து வெளியேறியிருந்தார்கள். இன்று புதிய மாணவர்கள் வந்திருந்தார்கள். படைக்கலச் சாலையில் அன்று செடிகளாயிருந்த மாங்கன்றுகள் இன்று மாமரங்களாகிப் பூத்திருந்தன. ஆலமுற்றத்து மரத்தில் ஏற்கெனவே இருந்த எண்ணற்ற விழுதுகள் தவிர இன்னும் பல புதிய விழுதுகள்

மண்ணில் இறங்கி ஊன்றிக் கொண்டிருந்தன. படைக்கலச் சாலையின் தோட்டத்தில் அன்று சின்னஞ்சிறுகுட்டிகளாகத் தாவித் திரிந்து கொண்டிருந்த மான்கள் இன்று கொம்பு கிளை படரக் குட்டிகள் துணை படரத் தோன்றின.

அவனுடைய மனத்தைப் போலவே உலகமும் வளர்ந்திருந்தது, மாறியிருந்தது. ஒரு பக்கத்தில் கொல்லர்கள் பழைய வேல்களுக்குத் துரு நீக்கியும் புது வேல்களை வார்த்தும்-பணிபுரிந்துகொண்டிருந்தார்கள். அவற்றைப் பார்த்தவுடன் வேலையும் பெண்ணின் விழியையும் ஒப்பிட்டுக் கூறி நீலநாக மறவர் தனக்கு அறிவுரை சொல்லிய நாளை நினைத்துக் கொண்டான் இளங்குமரன்.

படைக்கலச் சாலையில் நீலநாகமறவருடைய இருக்கையில் தன்னுடைய ஓவியம் இருப்பதைக் கண்டு அது அங்கே எப்படி வந்தது என்று அவன் வியந்த போது நீலநாகமறவரே அது படைக்கலச்சாலைக்கு வந்து சேர்ந்த நிகழ்ச்சியை அவனுக்குக் கூறினார்.

"நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் நீ திருநாங்கூருக்குப் போய்ச் சேர்ந்திருந்தாய். இந்தப் படத்தை எடுத்துக் கொண்டு வந்தவர்கள் உன்னைக் கொலை செய்யும் நோக்கத்தோடு தேடி வந்த

னாக அந்த ஓவியன் எனக்குச் சொன்னான்" என்றார் நீலநாகமறவர். அதைக் கேட்டு அவன் அதிர்ச்சி கொள்ளவில்லை.

பழைய நாட்களாயிருந்தால், 'என்னைக் கொலை செய்யவும் மனிதர்கள் இருக்கிறார்களா?' - என்று திமிரோடு எண்ணியிருக்கும் அவன் மனம். இன்றோ, 'நான் என்றால் எனது உடல் அன்று. நான் என்பது எனது ஆன்மா. ஆன்மாவை எவராலும் கொலை செய்ய முடியாது' - என்று சிந்தித்தது அவன் மனம்.

இளங்குமரன் இந்திர விழாவின் முதல் நாளாகிய அன்று மாலை படைக்கலச் சாலையைச் சேர்ந்த பெரிய யானை ஒன்றில் ஏறிக் கொண்டு வாதிடுவதற்காக உயர்த்திய கொடியுடனே புறப்பட்டபோது அவனால் வெற்றி கொள்ள முடியாத வாதத்தையும் முல்லையையும் உடன் கொண்டு வாயிலில் வந்து மறித்தார் வீரசோழிய வளநாடுடையார்.

"நலமாக இருக்கிறீர்களா, ஐயா? உங்களோடு கதக்கண்ணன் வரவில்லையா?" - என்று புன்முறுவல் பூத்தவாறு விசாரித்த அவனை நோக்கிச் சீறினார் அவர்.

"நலத்துக்கென்ன கேடு? சாகாதது தான் பெரிய குறை தம்பி! நீ இன்னும் சிறிது காலம் என்னையும், இந்தப் பெண்ணையும் ஏமாற்றிக்கொண்டு திரிந்தால் அந்தக் குறையும் தீர்ந்து விடும்."


அந்தக் கிழவர் தன் மேல் பெருங் கோபத்தோடு வந்திருக்கிறார் என்பது இளங்குமரனுக்குப் புரிந்தது. நிர்விகாரமான நோக்குடன் அவர் பக்கத்தில் நின்ற முல்லையைப் பார்த்தான். அவள் வளர்ந்து நிறைந்திருந்தாள். அவள் பார்வையில் முல்லை தலைகுனிந்தாள். இளஞ் சூரியனின் ஒளியோடு திகழும் இளங்குமரனின் முகத்தையும், கண்களையும் காணக் கூசின அவள் கண்கள். உலகில் உள்ள அறிவின் பரிசுத்தங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து எதிரே யானைமேல் அமர்ந்திருக்கக் காண்பதுபோல் அவளுக்குப் பயமாகவும் இருந்தது. இப்போது கொடியை ஏந்திக் கொண்டிருக்கும் அவனுடைய இதே கையில் எத்தனையோ புண்களுக்குத் தன் கைகளால் மருந்து தடவி ஆற்றிய நாட்களை நினைத்துக் கொண்டாள் முல்லை. இந்தக் கைகளையும் தோளையும் தொடுவது விளையாட்டாக இருந்த காலம் போய்த் தொட நினைப்பதும் தயக்கத்துக்குரிய காரியமாகிவிட்ட நிலையில் தான் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

வளநாடுடையார் முன்பிருந்ததை விடத் தளர்ந்திருந்தார். நாணற் பூவைப் போல் நரை கண்டு வெளுத்திருந்தது. ஆயினும் எரிந்தாலும்



ஆகஸ்ட் 18ல்
சென்னை
வெலிங்டன் பிரபாத்
சரஸ்வதி மற்றும்
தமிழ்நாடெங்கும்
வெளிவருகிறது...
பிரசாத் மூவீஸ் அளிக்கும்
தாயில்லாப் பிள்ளை
சிந்தனையைத் தூண்டும் ஓர் சீர்திருத்தக் காவியம்...
பிரசாத்
டைரக்ஷன்
கருணாநிதி
திரைக்கதை, வசனம்
கண்ணதாசன்
பாடல்கள்
மகாதேவன்
இசை
ஜெமினி
ரிலீஸ்

வெளிநாட்டுப் பிரயாணம்



டி. என். கே. ஜி. தயாரிப்பு கம்பெனிகளின் குழுவைச் சேர்ந்த திரு வி. பெருமாள் செட்டியார் இரண்டு மாதகாலம் ஜெர்மனி பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய அயல்நாடுகளுக்குத் தொழில் நிமித்தம் சென்றிருக்கிறார். அவர் 21ந் தேதி வாக்கில் தமது அயல் நாட்டுப் பிரயாணத்திலிருந்து சென்னை திரும்புகிறார். ஆலைத் துணி, இரும்பு அல்லாத உலோகங்கள் ஸ்டுடியோ சாதனங்கள், நீர் தேங் காத மடிப்புத் தாள்கள், ரூபர் பெல்ட்டுகள் ஆகியவற்றிலுள்ள நவீன தொழில் நுணுக்கங்களைப் பற்றி ஆராய்ந்து வருவதே அவரது அயல்நாட்டுப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.



போகாத சந்தனக் கட்டையின் மணம் போல் குடிவழி வந்த வீரக் களை கருங் கிய முகத்தில் இன்னும் ஒடுங்காமல் விரிந்து தெரிந்தது. சண்டைக்குக் கொடி கட்டிக் கொண்டு வந்து நிற்கும் அவ ரிடம் இளங்குமரன் அமைதியான முறை யில் பேசினான்.

''ஐயா! பட்டி மண்டபத்தில் சமய வாதம் புரிவதற்காக நான் புறப்பட் டுக் கொண்டிருக்கிறேன். இந்த நகரத் தில் பல நாட்டு அறிவாளிகள் சந்தித் துப் போரிடுவதற்கு இந்திர விழா நாட் கள்தாம் வாய்ப்பு ஏற்படுத்துகின்றன. நம்முடைய சொந்த விவாதத்தை என் றைக்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாமே? நானும் குருகுல வாசம் முடிந்து காவிரிப் பூம்பட்டினத்துக்கே திரும்பி விட்டேன். இனிமேல் நாம் சந்தித்துக் கொள்வதும் அரிய காரியம் இல்லையே....?''

''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, தம்பீ! அந்தத் திருநாங்கூர் கிழவனும் இந்த ஆலமுற்றத்து மனிதனும் சேர்ந்து உன்னைச் சரியான பித்தனாக மாற்றி யிருக்கிறார்கள். உன்னிடம் மிக முக்கிய மான செய்தி யொன்று பேச வேண் டும். இந்திர விழா முடிந்ததும் ஒரு நாள் தனியாக வந்து சேர்'' என்று வேண்டா வெறுப்புடன் கூறிவிட்டு முல்லையோடு திரும்பிச் சென்றார் வளநாடுடையார். ஆலமுற்றத்துக் கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்த போது, தான் வந்திருப்பது தெரிந்து தந்தையும் மகளும் படைக்கலச் சாலைக் குள்ளும் வந்து சென்றிருக்க வேண்டும் என்று அவர்கள் வரவைப் பற்றி அநு மானம் செய்தான் இளங்குமரன்.

யானையைச் செலுத்திக் கொண்டு இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து நாளங்காடியை நோக்கித் திரும்பிய போது அவனுடைய பழைய நண்பர்கள் சிலர் கைகோத்தபடி எதிரே வந்து கொண்டிருப்பது தெரிந்தது. இப்போது அவர்கள் யாவரும் வளர்ந்து உடற் கட்டும் பெற்றிருந்தனர்.

அவர்கள் தன்னை அடையாளம் தெரிந்து கொள்வார்கள் என்ற நினைப் போடு யானையின் நடையை மெதுவாக்கி நிற்கச் செய்தான் இளங்குமரன். ஆனால் அவர்கள் அவனை யாரோ பெரிய ஞானி என்ற வழக்கமான மதிப்புக்காக உற்றுப் பாராமல் மேல் நோக்கிக் கைகூப்பி விட்டு முன்னே நடந்து சென்றார்கள். அவனுக்கு அவர்கள் எல்லாரையும் எல்லாவற்றையும் நினைவிருந்தது. அவனை அவர்கள் எல்லாருக்கும் நினை வில்லை. அவன் மாறியிருந்தான். எதிரே வருகிறவர்கள் செலுத்திய வணக்கங் களையும் மதிப்புக்களையும் தன் குருவின் பிரதிநிதியா யிருந்து அவர் சார்பில் வாங்கி அவருக்கே அனுப்பிவைப்பதாகப் பாவித்துக்கொண்டு சென்றான் அவன்.


தெருத் திருப்பங்களிலும், நான்கு வீதிகள் சந்திக்கும் சதுக்கங்களிலும் இளை ஞர்கள் பலப் பரீட்சை செய்து கொள்வ தற்காகக் கிடந்த இளவட்டக் கற்களைக் கண்ட போது மனத்துக்குள் சிரித்துக் கொண்டான் இளங்குமரன்.

யானை நாளங்காடியை அடைந்த போது வானில் நிலா எழுந்தது. ஒரு

கையில் மதுக் கலயத்தையும் இன்னொரு கையில் இளம் பருவத்தினளான ஆடல் மகள் ஒருத்தியையும் பற்றிக் கொண்டிருந்த களி மகன் ஒருவன் வந்து இளங்குமரனை வளைத்துக் கொண்டான்.

''இந்த உலகம் பொய். உயிர்கள் பொய். இதை எவரும் படைக்கவில்லை. மதுவினால் உண்டாகும் மயக்கம் போலப் பஞ்ச பூதங்களின் மயக்கம் இது. இதற்குக் காரணமும் இல்லை. காரணனும் இல்லை'' — என்று மது வெறியில் உளறிய அந்தப் பூதவாதிக்குப் பதில் சொல்லாமல் சிரித்தான் இளங்குமரன். இந்திர நீலம் போல் இருண்ட கூந்தலும், வெறியிற் சிவந்த கண்களுமாக அந்தக் களிமகனின் பிடியிலிருந்த கணிகைப் பெண், ''நீ என் அன்பனுக்குப் பதில் சொல்ல முடியாமல் தோற்றாய்!'' என்று இளங்குமரனை நோக்கிக் கைகொட்டிச் சிரித்தாள்.

'' தன் உணர்வோடு பேசாதவர்களுடைய வாதத்தைச் செவி மடுத்து



மறுப்பதுதான் தோல்வி. உங்கள் வாதத்துக்கு நான் மறுமொழி கூறும விருப்பதனாலேயே நீங்கள் எனக்குத் தோற்றீர்கள்'' என்று எள்ளலிச் சிரித்துக் கொண்டே மேலே சென்றான் இளங்குமரன். அந்தப் பெண்ணும், களி மகனும், முகத்தைக் கோணிக் கொண்டு அவனுக்கும் அவன் அமர்ந்திருந்த யானைக்கும் அழகு காண்பித்துச் சிரித்தார்கள். இப்படி விடரும், தூர்த்தருமான களிமக்கள் பலர் நாளங்காடியில் சுற்றிக் கொண்டிருப்பது வழக்கம்தான். இந்திரவிழா நாட்களில் இந்தக் கீழ் மக்களைச் சாதாரண நாட்களிலும் அதிகமாகக் காணலாம்.

நாளங்காடியில் முன்பு ஒரு காலத்தில் தன்னை நிற்கச் செய்து மணிமார்பன் என்ற பாண்டிய நாட்டு ஓவியன் சித்திரம் தீட்டிய மரத்தருகில் வந்ததும், அந்த நினைவால் கவரப்பட்டு அங்கே யானையை ஒரு கணம் நிறுத்தினான் இளங்குமரன். அன்றிருந்தது போலவே அந்த மரத்தில் முல்லைக்கொடி புதராகப் படர்ந்திருந்தது. அதன் கீழே ஓர் அழகிய இளைஞன் மனைவியோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான். யானை அருகே வந்து நின்றதும் பயந்தாற்போல் எழுந்தார்கள் அவர்கள். அப்படி எழுந்தபோது அந்த இளைஞனின் முகத்தை நன்றாகப் பார்த்த இளங்குமரன் சற்றே வியப்புடன் 'மணிமார்பா'-என்று மெல்லக் கூப்பிட்டான். திகைப்போடு அண்ணாந்து பார்த்தனர் அந்த இளைஞனும் அவன் மனைவியும். இளைஞனுக்கு யானை மேலிருந்த இளங்குமரனைப் புரிந்து கொள்ளச் சிறிது நேரமாயிற்று. புரிந்ததும் அவன் ஆவல் மேலிட்டவனாகப் பேசலானான்:—

''ஐயா! வணங்குகிறேன். இவள் என் மனைவி. ஊர் திரும்பிய சில நாட்களில் எனக்குத் திருமணமாகி விட்டது. மனைவியோடு மீண்டும் இந்திர விழாப் பார்க்க இங்கே வந்தேன். இந்த இடத்துக்கு வந்ததும் பழைய நினைவுகள் எல்லாம் எழுந்தன. அந்தப் பழைய கதையைத் தான் இப்போது இவளிடம் கூடச் சொல்லிக் கொண்டிருந்தேன். நீங்கள் எப்படியோ மாறிவிட்டீர்களே? முதலில் எனக்கு அடையாளமே தெரியவில்லை. இவ்வளவு குறிப்பாக நம் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது யார் என்று பார்த்தால் நீங்கள் யானை மேல் உட்கார்ந்திருக்கிறீர்கள்....''—

'' சித்திரக்காரனுக்குக் கூடப் பழகிய முகம் மறப்பதுண்டோ, மணிமார்பா? பார்த்த முகங்களையெல்லாம் நினைவிலும் கண்ணிலும் பதிய வைத்துக் கொள்கிற கலை அல்லவா உங்களுடையது?''

'' மறந்தது என் தவறு இல்லை ஐயா! இவள் வந்த பின்புதான் இப்படி ஆகி விட்டது. தன் முகத்தைத் தவிர வேறு எதுவும் நினைவில் தங்காமல் செய்து விட்டாள் இந்தப் பொல்லாத பெண்'' - என்று மனைவியை வம்புக்கு இழுத்தான் மணிமார்பன். அந்தப் பெண்ணின் அழகிய கன்னங்களில் நாண ரேகைகள் தனிமையாக ஓடின. இளங்குமரன் சிரித்தபடி அவனை மேலும் கேட்டான் :—

'' மறுபடியும் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பு பயப்படாமல் இந்த நகரத்துக்குள் நுழையும் தைரியம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது அப்பனே?''

'' இவளுடைய கண்களிலிருந்து''— என்று மனைவியைச் சுட்டிக் காண்பித்தான் மணிமார்பன். சித்திரக்காரனுக்கென்றே பிறந்த எழிலோவியம் போன்ற அந்தப் பாண்டி நாட்டுப் பெண் மேலும் நாணமடைந்தாள்.

'' இவரை வணங்க வேண்டும், பெண்ணே! 'உன் பெயருக்குப் பொருத்

தமாக மார்பில் மணிமாலை அணியச் செய்கிறேன்" - என்று இந்த மனிதர் அன்றைக்கு என்னை வாழ்த்திய வாழ்த்துக்கள்தாம் எனக்கு இன்று இந்த வாழ்வை அளித்திருக்கின்றன" என்று தன் மனைவியிடம் உணர்ச்சி பொங்கக் கூறினான் மணிமார்பன். அந்தப் பெண் தரை மண் தோய வீழ்ந்து இளங்குமரனை வணங்கினாள். மணிமார்பனும் சேர்ந்து வணங்கினான். கொடியைச் சற்றே இடக் கரத்துக்கு மாற்றிக் கொண்டு யானைமேலிருந்தே அவர்களை வாழ்த்தினான் இளங்குமரன். வாழ்த்தி விட்டு வாழ்த்திய கையை அப்படியே வைத்துக் கொண்டு, "என்னுடைய மனத்திலும் உடம்பிலும் சத்துவ குணமும், சத்துவ குணத்துக்குரிய தூய இரத்தமும் ஓடாத காலத்தில் இதே கையினால் உன்னை ஒருமுறை அறைந்தனுப்பி யிருக்கிறேன், மணிமார்பா! அதை நீ மறந்து என்னை மன்னித்திருப்பாய் அல்லவா?" என்று கேட்டான் இளங்குமரன்.

"பழைய புண்ணைக் கிளறுகிறீர்கள். அது முன்பே ஆறி விட்டது" என்று கை கூப்பினான் ஓவியன். அந்த இளங் காதலர்களுடைய மகிழ்ச்சி உரையாடலைத் தான் தலையிட்டு அழித்திட விரும்பாமல் மேலே புறப்பட்டான் இளங்குமரன்.

அப்போது, "ஐயா! இந்திர விழா முடிந்து ஊருக்குப் போவதற்குள் நானும் என் மனைவியும் ஆலமுற்றத்துக்கு ஒருநாள் வருகிறோம். அந்தப் பெரியவர் அன்று என்னைக் காப்பாற்றித் தக்க வழித்துணையோடு பாண்டிய நாட்டுக்கு அனுப்பியிரா விட்டால் இன்று நான் இப்படி மங்கல வாழ்வு வாழ முடிந்திராது. அவரையும் பார்த்து வணங்க வேண்டும்" என்றான் மணிமார்பன்.

"ஆகா! அவசியம் வாருங்கள்"— என்று கூறிவிட்டு யானையைச் செலுத்திக் கொண்டு சென்றான் இளங்குமரன். பூத சதுக்கத்துக்கு எதிரே வந்தபோது கூட்டத்தின் நெருக்கடியினால் ஒரு தேரும் அவனுடைய யானையும் ஒன்றிற்கொன்று விலகி வழிவிட முடியாமல் எதிரெதிரே நின்றன. நெருக்கடி தீரட்டும் என்று சிறிது நேரம் காத்திருந்தான், அவன். வழி விலகலாம் என்ற நிலை ஏற்பட்ட பின்பும் எதிரேயிருந்த தேர் விலகாமல் நிற்பதைக் கண்டு அதிலிருந்தவர்களைப் பார்த்தான் இளங்குமரன். அதிலிருந்தவர்கள் தேரை நிறுத்திக் கொண்டு தன்னைச் சுட்டிக் காட்டிப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்களை இன்னும் நன்றாகப் பார்த்தான். அவர்கள் யாரென்று விளங்கிக் கொண்டும்கூட அவன் மனம் அமைதியிழக்கவில்லை. முகம் மலர்ச்சி இழக்கவில்லை.

"வழியை விடுகிறீர்களா? போக வேண்டும்?" என்றான் இளங்குமரன்.

"நன்றாகப் போகலாமே! உங்கள் வழியை நாங்கள் ஒன்றும் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கவில்லையே?"

இந்தப் பதிலைக் கேட்டு இளங்குமரன் சிரித்தான். "இரண்டு கண்களாலும் நன்றாகப் பார்க்க முடிந்தால் நீங்கள் பிறர் வழியை மறித்துக் கொண்டிருப்பது உங்களுக்கே தெரியும். ஆனால் உங்களுக்குத்தான் ஒரு கண் இல்லையே?"

இதைக்கேட்டுக் கீழே தேரின் முன்புறம் நின்று கொண்டிருந்த நகைவேழம்பரின் ஒரு கண்ணும், பின்புறமிருந்த பெருநிதிச் செல்வரின் இரண்டு கண்களும் சினத்தால் சிவந்தன. (தொடரும்)



"இன்னியோடே எல்லாத்துக்கும் சேர்த்து ஒரேயடியாகத் தலையை முழுகிட்டு..." தலையை முழுகுவதற்குத் தான் இருப்போமா என்பதைச் சற்று நினைத்துப் பார்த்துக் கொண்டு விரக்தியோடு சிரித்தான் கண்ணுச்சாமி.

முடிவற்ற தூரத்தின் ஒரு பகுதியான பூந்தமல்லி நெடுஞ்சாலை என்ற ஆகாரத்தைத் தன் நான்கு கால்களால் மிதித்துத் துவைத்து ஜீரணித்துக் கொண்டிருந்தது 'வான்'. அதை இயக்கிக் கொண்டிருந்தான் கண்ணுச்சாமி.

என்று குறிப்பிட்டதின் உட்பொருளைக் கண்டு கண்ணுச்சாமி முகத்தைச் சுளித்துக் கொண்டான். தான் செய்ய நினைத்திருப்பதை மூத்து அறியாமலேயே அரைகுறையாகப் பிரதிபலித்தான். என்றாலும், அதை அவன் வாயால் சொன்னதைக் கண்ணுச்சாமியால் ரசிக்க முடியவில்லை.

கண்ணுச்சாமியின் இன்றையத் தீர்மானமே இதுதான். சித்திர வாழ்க்கையில் பின்னும் உட்கார்ந்திருக்கும் 'பீடை'களால் தான் படும் துன்பங்களுக்கெல்லாம் இன்று



"ஏண்டா, கண்ணு! இன்னிக்கு உனக்கு ஓய்வு நாள் இல்லே?" வானின் கடகடத்த சத்தத்திலும் பாதசாரிகளில் ஒருவனாக நின்று கையைக் காட்டி நிறுத்திக் கேட்ட சகபாடி மூத்துவின் கேள்வி கண்ணுச்சாமியின் காதில் விழுந்து விட்டது. வண்டியை ஓர் ஓரமாக நிறுத்தி 'ஸ்டியரிங்'கில் சாய்ந்தபடியே தன் தலையை வெளியே நீட்டிப் பதில் சொன்னான் கண்ணுச்சாமி:

"ஓய்வு நாள்தான். ஆனால் இன்னிக்குக் காஞ்சிபுரத்திலேயிருந்து பிரயாணிகள் இருபது பேர் திருப்பதி போவணுமாம். இரவு கடைசி டிரிப்பிலே வந்த வேலுகிட்டே முதலாளி சொல்லியனுப்பிச்சாரு. ராவைக்குப் பத்து மணிக்கு மேலே அவன் ஓடமாட்டேன்னு சொன்னான்."

"கூண்டோடே போயிருப்பியே இருக்கே!" வண்டிக்குள்ளே கண்ணுச்சாமியின் குடும்பத்தினர்கள் ஆறு பேரும் உட்கார்ந்திருப்பதின் காரணத்தைக் கேட்பது போன்ற தொனியில் கேட்டான் மூத்து. அவன் 'கூண்டோடு'

ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டுவிட வேண்டியதுதான். அதற்கென அவன் மேற்கொள்ளவிருப்பது எத்தனை கொடுமையான செயல்! இருந்தும் அதை நிறைவேற்றாமல் அவனால் இருக்க முடியாது. அந்த அளவுக்கு இந்த நாற்பது வருஷங்களுக்குள் அவன் வேண்டிய கஷ்டங்களை அனுபவித்து விட்டான். ஆனால் தன்னை மட்டும் அழித்துக் கொண்டு தன்னையே நம்பி வாழும் உறவைச் சந்தி சிரிக்க வைக்கும் சுயநலம் அவனுக்கு இல்லை. அவர்களை மட்டும் அழித்து விட்டால் பிறகு அவனால் வாழ முடியாது. ஒரேயடியாக எல்லோருக்குமாகச் சேர்த்து விடுதலைக்கு வழி தேடிக் கொண்டு விட்டான்! பிராட்வேயிலிருந்து காஞ்சிபுரம் போவதற்குள் எத்தனை மரங்கள், மதகுகள், வாரிகள், பள்ளங்கள்? ஒரே ஒருகணம் கவனக் குறைவை வலுவில் வரவழைத்துக் கொண்டு விட்டால் போதும்; அவன் எண்ணம் ஈடேறி விடும்.

"ராவைக்கு ஏகாம்பரநாதர் கோயில்லே கல்யாண உற்சவமில்லே....ரெண்டு மூணு

வருவுமாலே செல்லத்துக்குப் போவனு மின்னு....நமக்குத்தான் ஒளியலே. 'இன்னைக்கு வண்டி சும்மாத்தானுங்களே போவுது. நானும் வர்றேன்'னு சொன்னான், சின்னவர். அவ வர்றேன்னதும் எல்லாம் கிளம்பிடுச்சு. அப்பாவும் வர்றாரு. எங்க அத்தை வீடு இருக்குது. எல்லாத்தையும் அங்கே கொண்டு போய்த் தள்ளிறல் நாளைக்குக் கருக்கல்லே திரும்பும்போது அழைச்சுக்கிட்டு வந்துடலாம்.'' மனத்தில் உள்ளதை யெல்லாம் மறைத்துச் சாமர்த்தியமாகப் பேசித் தன் திறமை மனத்துக்குள் சுவைத்துக் கொண்டான் கண்ணுச்சாமி.


''சரி, நீ போ. உனக்கு நேரமாகப் போவுது.'' டிரைவர் இறங்கும் கதவில் வைத்துக் கொண்டிருந்த கையை எடுத்துக் கொண்டான் முத்து. கண்ணுச்சாமி தன் வண்டியைக் கிளப்பினான்.

உள்ளே கிழவர் வேலுப்பிள்ளை, கண்ணுச்சாமியின் அப்பா, வண்டியின் குலுக்கலில் கை தடுமாற இரும்பு உரலில் வெற்றிலை பாக்குக் கலவையை இடித்துக் கொண்டிருந்தார். கிழவருக்கு எதிர்ப் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டு குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள் செல்லம். இரத்தத்தைப் பாலாக்கிக் கொடுக்கும் தாய்மையின் இணையற்ற அன்புக்கு நன்றி தெரிவிப்பது போல் வாய்க்கு வாய் சிரித்துக் கொண்டிருந்தது குழந்தை. வாயை எடுக்கும் போதெல்லாம் குழந்தையின் கீழுதட்டை ஒற்றை விரலால் தட்டி விட்டு அதன் மகிழ்ச்சியை அதிகப்படுத்தி விளையாடிக் கொண்டிருந்தாள் கண்ணுச்சாமியின் மூத்த மகள் ராஜாங்கம். சரோஜாவும் லக்ஷ்மியும் சாய்ந்தபடியே எதிர்த் திசையில் ஓடி மறையும் காட்சிப் பொருள்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சரோஜா கண்ணுச்சாமியின் தங்கை. லக்ஷ்மி அவனுடைய மகள். இருவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான்.

''என்னுங்க, இது என்ன ஊரு?''—செல்லம்தான் கேட்டாள். செங்கல் சூளையும், பனந்தோப்பும் ஓடை நாற்றமும் அவள் ஆவலைக் கிளப்பியிருக்க வேண்டும்.

'ம்.. என்ன ஊரு, ஒலகத்திலே எல்லா ஊரும் இவளுக்குத் தெரிஞ்சு போச்சு. இது ஒண்ணுதான் பாக்கி.' கண்ணுச்சாமி மனத்தைக் கடித்துக் கொண்டான். யாருமே தன்னோடு பேசாமல் இருந்தால் தேவலாம் போல் இருந்தது அவனுக்கு.

'இந்த மூதேவியாலே மனுசனுக்கு எம்மாம் தொந்தரவு? இவ வந்த அன்னியிலே இருந்து மனசுக்கு நிம்மதி கிடையாது. இத்



தப் பதினெட்டு வருசத்திலே ஒரு நாளாச்சும் பொழுதுக்கும் பஸ்ஸிலே கிடந்து அலுங்கிக் குலுங்கிக்கிட்டு 'அக்காடா'ன்னு இருப்போம்னு வீடு திரும்பற நேரத்திலே 'உப்பில்லே. புளியில்லே,பருப்பில்லே, புள்ளைக்கு உடம்பு சரியாயில்லே'ன்னு இல்லைப் பாட்டுப் பாடி என் எரிச்சலைக் கிளப்பாமே இருந்திருக்கிறாளா? ஒரு நாள் பாத்தாப்பலே கருக்கல்லே

மூணு மணிக்கெல்லாம் எழுந்திருச்சி அண்டா குண்டா வெல்லாம் போட்டு உருட்டித் தண்ணியைத் தெளிச்சு அடிச்சுப் போட்டாப் பலே தூங்கறவனை எழுப்பி விட்டுடறது. வெளியே போன ஆம்பிளை என்னிக்காவது கொஞ்ச வீடு திரும்ப நேரம் ஆயிடுச்சின்னு, பன்னெண்டாவட்டும், ஒண்ணாவட்டும் கொட்டுக் கொட்டுன்னு சோறு தின்னாமே முழிச்சுக்கிட்டுக் குந்தியிருக்குது. உடம்பு என்னத்துக்காவும்? டாக்டருக்குக் கொட்டிக் கொடுக்க யாராலே முடியும்?

இந்த நேரத்திலே செல்லத்தின்மீது கோபப்படுவது பொருத்தமாகவே படவில்லை அவனுக்கு. இன்றைக்கெல்லாம் இருந்தால் இன்னும் பதினைந்து நிமிஷமோ அல்லது அரை மணியோ அவன் இருக்கப் போகிறான். அதற்குள் கேட்க வேண்டியதை யெல்லாம் கேட்டு ஆசையைத் தீர்த்துக் கொள்ளட்டுமே! பூந்தமல்லி ஆசுபத்திரிக்கு எதிராக உள்ள ஆலமரம் வந்துவிட்டால் அவன் தான் கேட்கப் போகிறானா? அவனால்தான் பிறகு பதில் சொல்ல முடியுமா? கப்பும் கிளையுமாக வளர்ந்திருக்கும் பெரிய ஆலமரம் அது. இந்த வானில் இருக்கும் ஏழு பேரும் சேர்ந்து அணைத்தால் கூட அணைக்க முடியாது. சேர்ந்து அணைத்து நிம்மதி கொடுக்க அதைத்தான் நம்பியிருக்கிறான் கண்ணுச்சாமி. அதற்கு அருகில் வந்ததும் ஆக்ஸிலேடரைப் பலங்கொண்ட மட்டும் அழுத்தி வண்டியை நேராகத் திருப்பி விட்டு விட்டுக் கண்ணை மூடிக் கொண்டுவிட வேண்டியது. பிறகு....பிறகு! அவன் நினைத்தபடி நடந்தால் பிறகு எதுவுமே இருக்க முடியாது. அதற்குப் பிறகு அவனால் எதையும் தொடர்ந்து நினைக்க முடியவில்லை. சக்கரங்களுக்கு அடியில் கருகும் சாலையிலிருந்து கண்களை எடுக்காமல் செல்லத்தை நினைத்துக் கொண்டான்.

பூந்தமல்லி கடைத் தெருவின் நெரிசல் 'வான்' வேகத்தைத் தணிந்து கொடுத்தது. அப்போதுதான் ஆலமரம் நினைவு மயக்கத்தில் பின் தங்கிவிட்டது அவன் நினைவுக்கு வந்தது. 'த்சொ..த்சொ' என்று கையை உதறிக் கொண்டான் அவன். கூடவே சமாதானப்படுத்திக் கொள்ள வேறு யோசனையும் அவனுக்குத் தோன்றியது.

''மல்லிப்பூ..மல்லிப்பூ..'' அவன் நினைவில் குறுக்கிட்டாள் பூக்காரி. இதற்குள் வான் அவனையறியாமலே சாலையை விட்டு விலகி பஸ் ஸ்டாண்டுக்குள் போய் நின்றிருந்தது. நான்கு முழம் பூச்சரத்தை வாங்கி, ''ஏ, செல்லம், இந்தா. இதை ஆளுக்குக் கொஞ்சமா வைச்சுக்குங்க'' என்று திரும்பிச் செல்லத்திடம் வீசி யெறிந்தான்.

''என்னத்துக்கு இம்மாம் பூ?'' பூச்சரத்தை நகத்தால் கிழே தேய்த்தபடியே கேட்டாள் செல்லம்.

''என்னத்துக்கு.... தூக்கியெறிய.... குடுத்தா சரிதான்னு வாங்கி வச்சுக்கிறியா, எதுக்கு என்னத்துக்குன்னு இல்லாத கேள்வியெல்லாம் கேட்டுக்கிட்டு..'' இதற்கு முன்பு கண்ணுச்சாமி செல்லத்துக்குப் பூ வாங்கிக் கொடுத்ததெல்லாம் கல்யாணம் ஆன புதிதில் தான். அதற்குப் பிறகு அவனுக்கு அவள் பழையவளாகி விட்டாள்.

இப்போது அடுத்த அரை மணி நேரத்துக்கு அவளிடம் இல்லாத ஆசைகளையெல்லாம் உண்டாக்கி அவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் அவளைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. சாகும் நேரத்தில் சந்தோஷமாக இருந்தால் அடுத்த ஜன்மம் முழுதும் அப்படியே இருக்கலாம் என்று எங்கேயோ அவன் கேள்விப்பட்டிருக்கிறான்.

''ஏண்டா தம்பி! இன்னும் எம்மாந் தூரம் நாம போவணும்?'' கிழவர் காஞ்சீபுரத்தை நினைத்துக் கொண்டு கேட்டதற்கு, ''முப்பத்தைஞ்சு மைல்'' என்று பதில் சொல்லிவிட்டு, 'செம்பரம்பாக்கம் ஏரி இன்னும் ஐந்து மைல் இருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் கண்ணுச்சாமி. அவர்கள் எல்லோரும் போகவேண்டிய இடம் என்று அவன் கணித்திருப்பது செம்பரம்பாக்கம் ஏரிதான்.

'விழுந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒவ்வொரு உடம்பாக மேலே வந்து மிதக்கும். மொதல்லே மிதக்கிறது அப்பாவாகத்தான் இருக்கும். எழுபது வருஷத்துக்கு மேலே இந்த உலகத்துலே கிடந்து காஞ்ச உடம்பு அவருக்கு. கொஞ்சமாவா என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டிருக்காரு?'

கண்ணுச்சாமிக்குத் தன்னைப் பெற்ற குற்றத்தைக் கிழவர் மீது சுமத்துவது நியாயமாகப்படவில்லை. நாம்தான் பிறக்க வேண்டும் என்று அவர் நினைத்திருக்க மாட்டார் என்ற அளவுக்கு அவனால் சிந்திக்க முடிந்தது. பின்னே...? அவன் பிறந்து வளர்ந்த பிறகு அவரால் அவனுக்கு ஏற்பட்ட தொந்தரவுகளை அவனால் பொறுக்க முடியவில்லை.

'அட, சொத்து சுதந்திரந்தான் ஒண்ணும் வக்கில்லே. நாலு எழுத்தாவது சொல்லி வச்சிருக்கலாமில்லே. நானும் இப்போ இந்த மாதிரி அனல்லே கிடந்து காயாமே வெள்ளை வேட்டி வெள்ளைச் சொக்காய் போட்டுக்கிட்டு கௌரவமா ஓர் உத்தியோகம் பார்ப்பேனில்லே. நான் அந்தநாளிலே 'பள்ளிக்கூடம் போறேன்'னு சைக்கிளை எடுத்துக்கிட்டு ஊரைச் சுத்தினது என்னவோ வாஸ்தவம்தான். ஒரொரு வீட்டிலே அப்பாமாருங்க செருப்பாலே அடிச்சு ஒதச்சுப் படிக்க வச்சிருக்கலாமில்லே....செல்லம்...செல்லம் கொடுத்தே கெடுத்தாரு. இத்தினி வயசாச்சே இப்பக்கூட வேலைக்குக் கிளம்பும்போது வாசல் வரைக்கும் வந்து, 'ஜாக்கிரதையாய்ப் போயிட்டுவாடா தம்பி'ங்கறது. ராவைக்கு வீடு திரும்ப எந்நேரமானாலும் முழிச்சிக்கிட்டிருந்து 'மத்தியானம் வேலைக்குச் சோறு தின்னியா'ங்கறது. வயசானாலும் ஆச்சு, ஒரே தொணதொணப்பு சகிக்க முடியல்லே...'

ஸ்ரீபெரும்புதூர் வந்ததும் இறங்கிப்போய் ஹோட்டலிலிருந்து டபரா செட்டில் காப்பி வாங்கிக் கொண்டுவந்து வெறுப்பின்றி அவரிடம் கொடுத்தான் கண்ணுச்சாமி.

''எனக்கு என்னத்துக்குடா இப்ப? புள்ளைங்களுக்குக் குடு'' என்றார் கிழவர். இதைச் சொல்வதற்குள் நாலைந்துமுறை அவர் இருமினார்.


''புள்ளைங்க எங்கேயும் ஓடிப் போயிடாது. நீங்க குடியுங்கப்பா. தொண்டை பாறையாக்

பயர்ஸ்டோன்

Firestone

உங்களுக்குக் கூடுதலான பாதுகாப்பை - நீண்ட காலத்திற்கு அளிப்பதற்கு

இதுவே காரணம்



பயர்ஸ்டோனின் இன்னும் பிரத்தியேக மான பாதுகாப்பளிக்கும் டிரெட் டிசைன் அதன் ஆயிரக்கணக்கான, வழுக்கு வதைத் தடுக்கும், கோணங்கள் மூலம் பிரேக் பிடிப்பதற்கு மிக்க உறுதி யளிக்கிறது.

பிரத்தியேகமான முறையில் கலவை செய்யப்பட்ட பயர்ஸ்டோன் ரப்பர், நீடித்து உழைப்பதுடன், தேய்வு பெறாமல் உங்களுக்குப் பாதுகாப்பளிக் கிறது — நீடித்த காலத்திற்கு.

மிக உயர்ந்ததரமான தயாரிப்பு— எல்லா பயர்ஸ்டோன் டயர்களும், உலக மோட்டாரோட்டப் பந்தயக் காரர்கள் தங்களுடைய உயிர்ப் பாது காப்புக்கு எந்தத் தொழில் திறமையை நம்பி யிருக்கிறார்களோ; அதே தொழில் திறனின் தயாரிப்புகள்.

பயர்ஸ்டோன்

பொருத்துங்கள்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்கள்

இன்று சிறந்தவை - நாளை பெறும் சிறந்தவை

கட்டிக் கிடக்குது." இவரால் மறுக்க முடியவில்லே. டம்ளரை வாங்கி இரண்டு வாய் ஊத்திக் கொண்டார். பக்கத்தில் தயாராக நின்றிருந்த ராஜாங்கம் மீதிக் காப்பியை வாங்கிக் குடித்தான். கன்னுச்சாமி டபரா செட்டைக் கொடுத்து விட்டு வந்து வண்டியின் ஏறிக் கொண்டான்.

வண்டி ஓடிக் கொண்டிருக்கும்போது அவனுக்குத் தேர்த் திருவிழாக் கூட்டம் மாதிரி மனக்குள்ளே ஒரே நெரிசல். செம்பரம்பாக்கம் ஏரியை எப்போது கடந்து வந்தோம் என்பது தனக்குத் தெரியாமல் போய்விட்டது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதில் அவனுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். இன்னும் அரை மணி நேரம் அதிகமாக எல்லோரும் இந்த உலகத்தில் இருக்க வேண்டும் என்று கணக்கிடப் பட்டிருப்பதாக அவன் நினைத்துக் கொண்டான். இந்த அரை மணி இங்கிருந்து கல்குவாரி சத்திரம் செல்ல உத்தேசமாக ஆகும் நேரம் தான். கல்குவாரி சத்திரத்துக்கு அரை மைல் கிழக்கேயே ஒரு பெரிய சுமை தாங்கி இருக்கிறது. ஐந்தடிக்கு மேலே உயரம். அதற்கேற்ற அகலம். இப்போது கன்னுச்சாமியின் நம்பிக்கையைச் சுமந்து நிற்பதே அது தான். அதை ஒட்டி புளியமரம் ஒன்று.

'ரெண்டிலே ஒன்னு நிச்சயம்' என்று மனத்துக்குள் நிச்சயப்படுத்திக் கொண்டான் கன்னுச்சாமி.

கன்னுச்சாமி திரும்பிச் சேர்ந்தாற்போல் உட்கார்ந்திருந்த லக்ஷ்மியையும் சரோஜாவையும் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

சரோஜா வேலுப்பிள்ளைக்கு நாள் கழித்துப் பிறந்தவள். லக்ஷ்மி கன்னுச்சாமிக்குக் கல்யாணம் ஆன மறு வருஷமே பிறந்து விட்டாள். பதினொரு வயசுக்குள் என் பயம் மாதிரி மதமதன்னு வளர்ந்து போய்க் கிடக்குதுங்க. ஒரு கல்யாணம் பண்றதுக்குப் பட்டணத்திலே இரண்டாயிரம் இல்லாம முடியாது. எங்கே போறது.?

கன்னுச்சாமி தான் பல இடங்களில் அலைந்து தோல்வியுற்றதையெல்லாம் நினைவு படுத்திக் கொண்டான். பட்டினி கிடக்காமல் சாப்பிட்டதைத் தவிர இன்னும் காலணா அவன் சேர்த்து வைக்கவில்லே. 'இந்தச் சனியங்க இல்லாட்டி இத்தமாதிரி தொந்தர வெல்லாம் இல்லாம இருந்திருக்கலாமில்லே.'

இன்னும் இரண்டே மைல்தான்! மூன்றே 'நிமிஷங்கள்தான்! அதற்குப் பிறகு? சுக்குக் காகச் சிதறிப்போன 'வானின்' சிதிலங்கள்.

கன்னுச்சாமிக்கு உடம்பு வெடவெட வென்று நடுங்கியது. அந்தக் காட்சியைக் காணவே பிடிக்கவில்லே அவனுக்கு. வாழப் பிடிக்காத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதுபோல் பிடிக்காவிட்டாலும் இந்தக் காரியத்தைச் செய்தே தான் ஆகவேண்டும். நிரந்தர நிம்மதிக்கு வேறு வழி?

எதிரே அசுர வேகத்தில் வந்து ஒரே விநாடியில் 'வானே'க் கடந்து சென்ற லாரிக்கு விழித்துக்கொண்டு எச்சரிக்கையோடு ஸ்டியரிங்கைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் கன்னுச்சாமி. நட்ட நடுச்சாலையில் எதிரே வரும் வண்டிக்கு 'சைட்' கொடுக்காமல்வரும் அவனே லாரி டிரைவர் திட்டிக் கொண்டு போனது அவன் காதில் விழுந்திருக்க நியாயமில்லே.

கல்லுவார் சத்திரம் பெட்ரோல் பங்கில் 'வான்' நின்று வயிற்றை நிரப்பிக் கொண்டது. கண்ணுச்சாமி பில்லுக்குப் பணத்தைக் கொடுக்கும்போது கடைக்காரர் கேட்டார்: ''என்ன அண்ணே! லீவு நாளிலே கூட ஒழைக்கறாப்பலே இருக்கு. மொதலாளியைக் காக்காய் பிடிக்கவா?''

''ஆமா. காக்கா புடிச்ச மூட்டை சேத்து வச்சிருக்கேன், தங்கச்சிக்கும் மவளுக்கும் கண்ணாலம் பண்ண...போறியா..நீதான் ஒரு காசி யாத்துக்கும் 'வாயக்'கில்லாம போயிட்டே?'' என்று அலுத்துக் கொண்டான் கண்ணுச்சாமி.

''சே...சே...அப்படி யெல்லாம் சொல்லாதே அண்ணே. நேத்துத்தான் அந்த மணிக்கு மேலே சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போய்ப் பார்த்துட்டு வந்தேன். பையன் நல்லா இருக்கான். படிச்சிருக்கான். ஆபீஸ் உத்தியோகம்தான். அப்பா, அம்மா ரெண்டு பேரும் இருக்காங்க. நாளைக்கு வரும்போது சொல்லலாம்னு இருந்தேன். நீ இன்னிக்கே வந்துட்டே'' என்றார் கடைக்காரர்.

''இதோ பாரு. நான் வயத்துலே நெருப்பைக் கட்டிக்கிட்டிருக்கேன். உன்னாலே தான் இந்த இடம் முடியணும். என் சகலன் ஒரு இடஞ் சொன்னான். அதையும் போய்ப் பாத்துட்டு வரேன். ரெண்டும் நல்ல படியா முடிஞ்சா வர வைகாசியிலேயே ரெண்டு கல்யாணத்தையும் முடிச்சுடலாம். ஒரே செலவாகப் போகும். ஆனா ஒண்ணு. நம்ம சக்தி உனக்குத் தெரியும். பணங்காசு விஷயமெல்லாம் நீதான் பார்த்துப் பேசணும்.'' கண்ணுச்சாமிக்குப் படபடப்பில் உடல் வியர்த்தது.

டிரங்க் ரோட்டை விட்டு ரயில்வே லைனுக்கு இணையான சாலையில் 'வான்' திரும்பிய போது கண்ணுச்சாமி திரும்பி உள்ளேயிருந்த ஒவ்வொருவரையும் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தான். இந்த வாழ்க்கைக் கடலில் மிதக்கும் சின்னஞ்சிறு துரும்பான அவனை அலைக்கழிக்க எத்தனை அலைகள்? வேணுப் பிள்ளை, செல்வம், சரோஜா, லக்ஷ்மி, ராஜாங்கம், குழந்தை...உயிரோடிருந்தால் இன்னும் எத்தனையோ? அப்படி ஒன்றும் கண்ணுச்சாமிக்கு வயசாகி விடவில்லை.

இந்த வலியையும் வேதனையையும் சர்வ தீர்த்தக் குளத்து நீரிலே கரைத்து அழித்துக் கொண்டு விட வேண்டும்.. இரண்டு நாட்களாகப் பெய்த மழையில் குளத்தில் நிரம்பி அவனைத் தன்னுள்ளே ஐக்கியப் படுத்திக் கொள்ள 'வா, வா' என்று அலை மோதி அழைத்துக் கொண்டிருக்கிறது நீர்.

கண்ணுச்சாமி தீர்மானித்து விட்டான்.

என்ஜின் கொதிக்கக் கொதிக்க வண்டி அலறிப் புடைத்துக் கொண்டு பறந்தது.

வானைத் தன் மனோவேகத்தையும் மிஞ்சச் செய்துவிட வேண்டும் என்ற வேகம் கண்ணுச்சாமிக்கு. இந்த வேகத்தில் போனால் இன்னும் ஐந்தே ஐந்து நிமிஷப் பயணம்தான். காஞ்சீபுரம் நுழைவில் பஸ் நிலையத்து வாசலில் வான் வந்து நின்றது. கண்ணுச்சாமி உட்பட எல்லோரும் கீழே இறங்கினார்கள்.

''டப்போல்... எனக்கு ஒரு பம்பரம்பா..'' திருவிழாவை முன்விட்டு செப்பு, அப்பளக் குழவி, நாமக்கட்டி, குங்குமம் இத்தியாதிகளோடு வீதியில் விரிக்கப்பட்டிருந்த கடையைக் காட்டித் தலையைச் சொறிந்தான் ராஜாங்கம். அவன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டுக் கூட வாங்கி வந்திருந்த கிலு கிலுப்பையைச் செல்லத்தின் இடுப்பிலிருந்த குழந்தையிடம் நீட்டினான் கண்ணுச்சாமி. அதற்கு வாங்கிக் கொள்ளத் தெரியவில்லை. அழுந்த மூடிக் கொண்டிருந்த அதன் இடது கைவிரல்களைப் பிரித்து அதற்குள்ளே கிலு கிலுப்பையை வைத்தான். திரும்ப இழுத்துப் பார்த்தான். குழந்தை விடவில்லை. உடும்புப் பிடி. 'இந்த உலகத்தை விட்டுப் போகமாட்டேன்' என்ற உறுதி அதில் தெரிவித்ததாகக் கண்ணுச்சாமிக்குக் கற்பனை செய்து கொள்ளத் தெரியவில்லை.

''எல்லோரும் வீட்டுக்குப் போங்க. நான் ராவைக்குப் பத்து மணிக்கு வர்றேன். சரோஜா குழந்தையை நீ வாங்கிக்க. ஏலே ராஜா, தாத்தா கையைப் புடிச்சிக்க. கையை விட்டுட்டு ரோட்டிலே ஓடக்கூடாது. காரு கீரு வரும். ஓரமாக மெதுவாகவே போங்க. அப்பாவாலே வேகமாக நடக்க முடியாது.''

எல்லோருக்கும் குறிப்புக் கொடுத்துவிட்டுக் கண்ணுச்சாமி 'வானில்' ஏறி அமர்ந்து வண்டியை ஓட்டத் தொடங்கினான்.

''வெயில் ஏற ஏற உருகிற தார் ரோடு மாதிரித்தானய்யா மனுசனும். கஷ்டம் வரவரத் தான் அவனுக்கும் மனசு இளகுது.'' எவனோ ரொம்ப அனுபவிச்சவன் கணக்காக வீதியிலே பேசிக் கொண்டு போனது கண்ணுச்சாமிக்கும் கேட்டது. இந்தக் கூற்றின் பொருளை உண்மையென்று ஏற்க அவன் தயாராக இல்லை.

இன்றைக்கில்லாவிட்டால் இன்னொரு நாள். இந்தச் சனியன்களை ஏற்றிக்கொண்டு இன்று மாதிரி அவன் இன்னும் எத்தனையோ தடவைகள் போகப் போகிறான். அவற்றுள் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை அவன் பயன்படுத்திக் கொள்ளாமலா இருந்துவிடப் போகிறான். ஏதாவது ஒன்று என்ன? அடுத்த சந்தர்ப்பத்தையே நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளுவதென்று கண்ணுச்சாமி தீர்மானித்து விட்டான். அவன் செய்தால் செய்ததுதான்!

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10க்கு 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்கும் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு! சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்ந்திருக்கும் ருசியான நறுமணத்தினால், குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG.732QT-TAM.

'டெட்டால்'



வெட்டுக்காயம்

பரவாமல் காக்க உதவும்.



வெட்டுக்காயமோ, சிராய்ப்போ ஏற்பட்டால் உடனே டெட்டாலைத் தடவுங்கள். காற்று, தண்ணீர், நீங்கள் கையாளும் சாமான்கள் இவைகளில், வியாதியை பரவச் செய்யக்கூடிய, கண்ணுக்குத் தெரியாத, விஷக் கிருமிகள் மறைந்து வாழ்கின்றன. அவை, திறந்து வைக்கப்படும் காயத்தில் சுலபமாக நுழைந்து விடுகின்றன. அசட்டை செய்யாதீர்கள்—உலகத்திலேயே, மிகவும் நம்பிக்கை வாய்ந்த கிருமி நாசினி 'டெட்டால்,' காயம் பரவுதலிலிருந்து உங்களைப் பாதுகாக்க உதவுகிறது. 'டெட்டால்' விஷக் கிருமிகளை கொல்லக்கூடியது. இருந்தாலும் நமக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதல்ல.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWT AEL 3499

DI. 3A

பாபநாசத்துப் பாப விநாசர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

பஞ்சவடியிலே பர்ணசாலையில் இருந்த சீதையைச் சிறை எடுத்துச் சென்று விடுகிறான் இராவணன். சீதையைத் தேடி வரும் ராம லக்ஷ்மணரும் கிஷ்கிந்தை வந்து சேருகிறார்கள். ராமன் சுக்ரீவனுக்குத் துணை நின்று வாலியை வதம் செய்கிறான். சுக்ரீவனுக்குக் கிஷ்கிந்தை ராஜ்ய பாரத்தையே தருகிறான். அதன் பின் சீதை தேடும் படலம் தீவிரமாக ஆரம்பமாகிறது. வானர சேனை நான்கு திசைகளிலும் சென்று சீதையைத் தேடத்தொடங்குகிறது. அப்படிச் செல்லும் சேனை வீரரில் அனுமன் ஒருவன். அவனைத் தென்திசைக்கு அனுப்புகிறான் ராமன். அப்படி அவனை அனுப்பும்போது ஓர் எச்சரிக்கை செய்கிறான். 'தென்திசை நோக்கிச் செல்லும் நீ எங்கு வேண்டுமானாலும் போ. ஆனால் ஒரே ஒரு இடத்துக்கு மட்டும் போய்விடாதே. தெற்கே திருநெல்வேலிச் சீமையில் பொதியமலை இருக்கிறது. அங்கே அகத்தியர் இருந்து ஒரு தமிழ்ச் சங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார். தப்பித் தவறி அப்பக்கம் போய் அங்கு அச்சங்கத்தில் நடக்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு விட்டாயோ போச்சு என் காரியம். தமிழ் என்றால் அத்தனை இனிமையுடைய மொழி. அதிலும் அகத்தியர் நடத்தும் தமிழ்ச் சங்கம் என்றால் கேட்கவா வேண்டும்? நீயும் அத்தமிழுக்கே அடிமையாகி என் காரியத்தை மறந்து விடுவாய். ஆதலால் அந்தப் பொதிய மலைப்பக்கம் மாத்திரம் போகாதே. அகத்தியர் நடத்தும் சங்கத்தில் நுழையாதே. அங்கு பாடப்படும் தமிழ்ப் பாடல்களுக்குச் செவி சாய்க்காதே' என்கிறான். இப்படி ராமன் அனுமனை எச்சரித்தான் என்பதெல்லாம் என் சொந்தக் கற்பனை அல்ல. கம்பன் சொல்கிற காரியந்தான். கம்பன் பாடுகிறான்:

தென்தமிழ் நாட்டு
அகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற்றிரேல்

என்றும் அவன்
உறைவிடமாம், ஆதலால்
அம்மலையை இடத்திட்(டு)ஏகி

பொன்திணிந்த புனல்பெருகும்
பொருநை எனும்திருநதியும்
பின்பு ஒழிய

அகன்று வளர்தடஞ்சாரல்
மயேந்திரமா நெடுவரையும்
கடலும் காண்பீர்

என்பது பாட்டு. இப்படிக் கம்பன் ராமன் மூலமாக எந்த இடத்துக்கு அனுமன் போகக் கூடாது என்று எச்சரிக்கிறானோ, அந்த இடத்துக்கே உங்களை அழைத்துச் செல்ல விரைகின்றேன் நான். ஆம்! இன்று நாம் அந்தப் பொதிய மலைக்கே செல்கிறோம். அங்கு அம்மலை அடிவாரத்தில் உள்ள பாபநாசத்துக்கே செல்கிறோம்.

பாபநாசம் என்னும் தலம் செல்லத் திருநெல்வேலி தென்காசி லயனில் உள்ள அம்பாசமுத்திரம் என்னும் ஸ்டேஷனில் இறங்கவேணும். அங்கிருந்து மேற்கு நோக்கி நான்கு மைல் செல்ல வேண்டும். முதலில் விக்கிரமசிங்கபுரம் என்னும் ஊரைச் சென்று சேர்வோம். அதன் பின்னும் ஒரு மைல் நடந்தால் தாமிரபருணி நதிக் கரை வந்து சேர்வோம். அங்குதான் பாப விநாசத்தராம் முக்களா லிங்கர் உலகம்மையுடன் கோயில் கொண்டிருக்கிறார். அவரைத் தரிசிக்கு முன் மலைமேல் ஏறி, பாபநாசம் அணைக்கட்டு, மின்சார நிலையம் எல்லாம் பார்த்து விடலாமே. அங்கெல்லாம் காரில் செல்லலாம். பஸ் வசதிகளும் உண்டு. 'அப்பர் டாம்', 'லோயர் டாம்' என்ற அணைக்கட்டுகளையெல்லாம் பார்த்துத் திரும்பும் வழியில் ஒரு பள்ளத்தாக்கில் இறங்கினால் அங்கு அகத்தியருக்கும் அவர் வழிபட்ட முருகனுக்கும் சிறு கோயில்கள் இருப்பதைக் காண்போம். அக்



பாபநாசம் கோவில்

கோயிலுக்குப் பக்கத்திலேயே நன்றாகக் குளிப்பதற்கு வசதியாக அருவிக்கரை ஒன்று இருக்கிறது. அதற்கு அகஸ்தியர் அருவி என்றே பெயர். அங்கிருந்து நாலு பர்லாங்கு மலைமேல் ஏறிச் சென்றால் பிரும்மாண்டமான உயரத்திலிருந்து விழும் கல்யாணி தீர்த்தத்தைப் பார்க்கலாம். ஆம்! பார்க்கலாம்; எட்டி நின்றுதான் பார்க்கலாம். நெருங்கிச் செல்ல எல்லாம் முடியாது. அது பல பலிகள் வாங்கிய அருவி. சிறந்த தேசத்தொண்டரும் தமிழ் அறிஞருமான வ. வே. சு. ஐயரையும் அவரது மகளையும் பலி கொண்ட அருவி என்பதை நம்மால் மறக்க முடியுமா, என்ன? ஆதலால் வந்த சுவடு தெரியாமல் இறங்கி வந்து அகத்தியர் அருவியில் நீராடிவிட்டு அகத்தியரையும் முருகனையும் வழிபட்டு விட்டு, பாபநாசத்துக் கோயிலுக்கே வந்து விடலாம். பாபநாசம் கோயில் வருமுன் ஏன் இந்த அகத்தியர் இங்கு வந்து குடியேறினார் என்ற விவரம் தெரிந்துகொள்ள வேண்டாமா? கதை நமக்குத் தெரிந்ததேதான். இமவான் மகளான உமையை இறைவன் திருமணம் செய்ய இசைகிறான். அத் திருமணத்தைக் கண்டுகளிக்க நாட்டிலுள்ள மக்கள், முனிவர், தேவர் எல்லோருமே சென்று சேருகிறார்கள் இமயமலைச் சாரலுக்கு. இப்படி நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் குழுமியது காரணமாக, அந்த வடதிசை தாழ்கிறது. தென் திசை உயருகிறது. நாட்டைச் சமன் செய்ய வேண்டிய பொறுப்பு இறைவனைச் சார்கிறது. அவர் வந்திருக்கும் முனிவர்களிடையே இருந்த அகத்தியரை அழைக்கிறார்; அவரைத் தென்திசை செல்லச் சொல்கிறார். அவரோ, 'நான் மட்டும் திருமணக் கோலம் காண வேண்டாமா?' என்று ஏங்குகிறார். அதற்கு இறைவன் 'அகத்தியரே! என் சொல்லைத் தட்டாமல் தென் திசை செல்லும்; திருமணம் முடிந்ததும் நான் நேரே தென்திசை வந்து என் திருமணக் கோலம் காட்டுகிறேன்' என்கிறார். அதன்படியே கங்கா ஜலத்தைத் தம் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென் திசைக்கு வருகிறார் அகத்தியர். வழியில் குறுக்கே நின்று தடுக்கும் விந்திய மலையின் கர்வத்தை அடக்குகிறார். விந்தம் அடக்கிய வித்தகர் பின்னர் சோழ நாட்டிலே தம் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைப் பெருக்கெடுக்கச் சொல்கிறார். அதன் பின் பொதிய மலை வந்து பொருநை என்னும் தாமிர பருணியையும் உற்பத்தி செய்து அந் நதிக் கரையிலேயே தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவித் தமிழ் வளர்க்கிறார். 'என்றுமுள தென் தமிழை இயம்பி இசை'யுடன் வாழ்கிறார். அதனாலேயே தமிழை 'அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு' என்று போற்றுகிறார்கள் புலவர்கள். இப்படி இறைவன் கட்டளைப்படியே அகத்தியர் தங்கியிருந்த பொதிகைக்கே வருகிறார், இறைவன் இறைவியாம் உமையையும் அழைத்துக் கொண்டு. தம் திருமணக் கோலத்தையும் காட்டி அவரை மகிழ்விக்கிறார். இத்திருமணக்கோலம் காட்டிய வரலாற்றைத் தென் தமிழ்நாட்டில் உள்ள பல கோயில்களில் கேட்டிருக்கிறோம். என்றாலும் சிறப்பாக இத்தலத்தில் தான் இறைவன் காட்டியிருக்க வேண்டும். இங்குதானே அகத்தியர் தங்கியிருக்கிறார். இத்தனை விவரமும் தெரிந்து கொண்ட பின் கோயிலுக்குள் நுழையலாம். கோயில் நிரம்பப் பெரிய கோயிலும் அல்ல; சிறிய கோயிலும் அல்ல. கோயில் வாயிலில் பொருநை நதி ஓடுகிறது. அங்கு ஒரு சிறு மண்டபம் இருக்கிறது. அங்கு சென்றால் ஆயிரக்கணக்கான மீன்கள் துள்ளி விளையாடுவதைக் காணலாம். பொரியோ, கடலையோ வாங்கிப் போட்டு, அம் மீன் விளையாட்டைப் பார்த்தபின் கோயிலுக்குள் நுழையலாம். கோயில் வாயிலில் ஒரு கோபுரம், கோயிலுக்கு ஒரு பெரிய மதில். இந்த மதிலுக்குள்ளே ஒரு பிராகாரம். அந்தப் பிராகாரத்தின் மேல் பக்கத்திலே ஒரு களாமரம் மூன்று கவடுகளோடு நிற்கிறது. அந்தக் களாமரத்தடியிலே தான் இறைவன் லிங்கத் திருவுருவில் எழுந்தருளியிருக்கிறார். அதனால் அவர் முக்களாலிங்கர் என்ற பெயரும் பெற்றிருக்கிறார். நந்தி மண்டபம், மகா மண்டபம் எல்லாம் கடந்து சென்று, கருவறையில் உள்ள லிங்கத் திருவுருவைக் கண்டு வணங்கலாம். அவரை வணங்கிய பின் வெளியே வந்து உள் பிராகாரத்தைச் சுற்றினால் கன்னி மூலையிலுள்ள உத்சவமூர்த்தியைக் காணலாம். இவர் சோமாஸ்கந்த வடிவினரே. மற்றக் கோயில்களில் காணும் சோமாஸ்கந்த வடிவத்துக்கும் இங்குள்ள வடிவத்துக்கும் அதிக வித்தியாசம் ஒன்றுமே இல்லைதான். அதனை அடுத்த ஒரு சிறு மண்டபத்திலே உயர்ந்த பீடத்தின் மேலே ரிஷபாரூடராய் இறைவ



அகஸ்தியர்

உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று
போலிகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள் * முத்திரையுடன் பாது
காப்பு அமைக்கப்பட்ட மூடி இருக்கிறதா என்று கவனியுங்கள்.
உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆ… …னீஷியா ஒன்றே ஒன்று
முத்திரையுடன் பாதுகா… …க்கப்பட்ட மூடி இருக்கிறதா
என்று கவனியுங்கள் * … …ளை ஏற்றுக் … …தீர்கள்.
உண்மையான பிலிப்ஸ் மில்க் … …ஷியா ஒன்றே ஒன்று
போலிகளை ஏற்றுக் … * …த்திரையுடன் பாது
காப்பு அ… இருக்கிறத… கவனியுங்கள்.
உண்மைய… மில்க் ஆப் மக்… …ன்றே ஒன்று
முத்திரையுடன் பாதுகாப்பு அ… …டி இருக்கிறதா
என்று கவனியுங்கள் * போ… …கொள்ளாதீர்கள்.
உண்மையான பிலிப்ஸ் மி… …ா ஒன்றே ஒன்று
போலிகளை ஏற்றுக் கெ… …ிரையுடன் பாது
காப்பு அமைக்கப்பட்ட… …று கவனியுங்கள்.
உண்மையான பிலிப்… …ஒன்றே ஒன்று
முத்திரையுடன் பா… மூடி இருக்கிறதா
என்று கவனியுங்… …கொள்ளாதீர்கள்.
உண்மையான பி… …ஷியா ஒன்றே ஒன்று
போலிகளை ஏ… முத்திரையுடன் பாது
காப்பு அமை… …தா என்று கவனியுங்கள்.
உண்மையா… …க்னீஷியா ஒன்றே ஒன்று
முத்திரையுட… …க்கப்பட்ட மூடி இருக்கிறதா
என்று கவனியு… …ளை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.
உண்மையான பிலிப… ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று

பூரண பாதுகாப்பு



ஒவ்வொரு பிலிப்ஸ் பாட்டிலின் மூடியும் போலிகளை கலக்க முடியாதபடி பாதுகாக்கிறது. இந்த மூடி பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவின் ஒவ்வொரு துளியையும் அசல் என உத்திரவாதம் அளிக்கிறது. மலச் சிக்கல் ஏற்படும் பொழுது உங்களுக்கு பத்திரமாகவும், நிச்சயமாகவும் பூரண நிவாரணத்தை உறுதியாக்குகிறது.

பிரசித்தி பெற்ற மில்க் ஆப் மக்னீஷியா ஓர் இரவில் ஆரோக்கிய ஒழுங்கை திரும்ப ஒப்படைக்கிறது. அதி சீக்கிரம் அமிலத்தை சமனப்படுத்தி அதனால் ஏற்படும் வயிற்றுக் கோளாறுகளையும், வாயு எதிர்ப்பையும், வயிறு உபாதைகளையும் தவிர்க்கிறது.

போலிகளை கலக்க முடியாதபடி மூடி அமைக்கப்பட்டிருக்கும் நீல நிற பாட்டிலா என்று பாருங்கள். எப்பொழுதும் அசல் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவையே வாங்குங்கள். 2 அவுன்ஸ் 4 அவுன்ஸ் மற்றும் 12 அவுன்ஸ்களில்-கிடைக்கிறது.



இரைப்பையில் மிக மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



உண்மையான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா ஒன்றே ஒன்று

பிரத்தியேக விநியோகஸ்தர்கள்: டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்.



குமாரி சாரதாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் பம்பாய் மாதுங்காவில் சமீபத்தில் நடந்தேறியது. மகாராஷ்டிர விவசாய மந்திரி ஸ்ரீ பி. கே. ஸாவந்த் இக் கலை நிகழ்ச்சியைப் பார்வையிட்டுக் குமாரி சாரதாவைப் பாராட்டினார். குமாரி சாரதா ஸ்ரீ ராஜராஜேசுவரி பரதநாட்டிய கலாமந்திரின் மாணவி.

னும் இறைவியும் திருமணக் கோலத்தில், அகத்தியருக்குக் காட்சி கொடுக்கும் நிலையில் இருக்கிறார்கள். நல்ல அற்புதமான வடிவம். இச்சிலை வடிவினைப் பார்க்கும் போது, குற்றாலத் தலபுராண ஆசிரியர் பாட்டு ஞாபகத்துக்கு வராமல் போகாது.

மருமலர் விதான வெள்ளி
மண்டபம் கடந்து உள்போகித்
திருமண அறையில் மேவி
தேவியும் தாமும் ஆக
அருள்மணக் கோலக் காட்சி
அருளி வீற்றிருந்தார் மன்னோ!
கருதுவார் கருதும் வண்ணம்
காட்சி தந்தருளும் வள்ளல்.

சிலைபத்தின் காம்பீரியம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். கீழே தரையில் அகத்தியரும் அவரது மனைவி லோபாமுத்திரையும் கூப்பிய கையராய் நின்று கொண்டிருக்கிறார்கள் சிலை உருவில். குண்டோதரன் வெண் கொற்றக் குடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். இந்த அறையிலேயே மகாவிஷ்ணு ஸ்ரீதேவி பூதேவி சகிதம் எழுந்தருளி யிருக்கிறார், செப்புச் சிலை வடிவில் பக்கத்திலே. அகத்தியரும் லோபாமுத்திரையும் செப்புச் சிலை வடிவிலும் இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் தரிசித்த பின்னர் கோயிலைச் சுற்றிக் கொண்டு வந்தால் இறைவனுக்கு இடப் பக்கத்தில் உலகம்மை சந்நிதி இருக்கிறது. இவள் வரப்பிரசித்தி உடையவள். முக்களாலிங்கர், மூவர் முதலிகளின் பாடல் பெற்றவர் அல்ல. ஆனால் இந்த உலகம்மையை விக்கிரம சிங்கபுரவாசியான நமச்சிவாய கவிராயர் பல பாடல்களால் பாடிப் பரவியிருக்கிறார். உமையே உலகம்மையாக இருக்கிறாள் என்பதனையும் அவளையே இமவான் மனைவியான மேனைபெற்றெடுத்திருக்கிறாள் என்றும் கவிஞர்கூறுகிறார்.

நீட்டுதமிழ் மாமுனிக்குச்
சித்திரை மாதப்பிறப்பில்
காட்டுமணக் கோலமிந்தக்
காலமும்நான் காண்பேனோ?
வேட்டுமுலைப்பால் இமய
வெற்பரசி ஒக்கலைவைத்து
ஊட்டும் மகவே
உலகுடைய மாதாவே

என்பது பாட்டு. ஆம்! ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. இத்தலத்தில் சித்திரை விஷு-தான் சிறப்பான நாள். அன்றுதான் அகத்தியருக்குத் திருமணக் கோலத்தைக் காட்டியிருக்கிறார் இறைவன். இந்தப் பாடல் பாடிய நமச்சிவாய கவிராயர் நிரம்பக் கர்வம் வாய்ந்தவராக இருந்திருக்கிறார். அவர் கர்வம் அடைந்ததற்குக் காரணத்தையும் அவரே சொல்கிறார்.

பாரிலே நமக்கு ஒருவர் நிகரோ?
தென்றல் பருவதத்தில் வரு
தாம்பர பருணி ஆற்று
நீரிலே மூழ்கி வினை ஒழித்தோம்,
சைவ நெறியிலே நின்று
நிலை பெற்றோம், சிங்கை
ஊரிலே குடியிருந்தோம்,
எமது சீர்த்தி உலகம் எலாம்
புகழ்ந்து ஏத்த, உலகமாதின்
பேரிலே கவிதை எலாம் சொன்னோம்
பிறப்பில் எழுபிறப்பும் அறப்
பெறுகின்றோமே

ஆம்! நாமும் பாபநாசம் சென்று, தாமிரபருணியிலே நீராடி நமது பாவங்களெல்லாம் நாசமாகிப் போகும்படி செய்துகொள்ளலாம். உலகமாதின் புகழைப் பாடிப் பாடிப் பரவி முக்தி பெறலாம்.

இக்கோயில் விக்ரம சிங்க பாண்டியன் மகனான கருணாகரப் பாண்டியன் காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அவனது புத்திரனான ராஜ ராஜ பாண்டியன் முதலியவர்களால் விரிவாக்கப் பட்டிருக்கிறது. கி. பி. 13ம் நூற்றாண்டிலே இந்தக் கோயில் கட்டப்பட்டிருக்க வேணும் என்று தெரிகிறது. அதற்குரிய கல்வெட்டுகள் பல இந்தக் கோயிலில் இருக்கின்றன.



எட்வர்டு டிலானி அவர்களுக்கு,
டாக்டர் டில்லன் எழுதிய கடிதம்


அன்பார்ந்த ஐயா,

மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு பினமில் படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாது. எலும்பு முறிவு எப்போதுமே சள்ளை விவகாரம்.

விபத்தின் விளைவாக நிலையான ஊனம் எதுவும் ஏற்பட்டுவிடுமென நான் நினைக்கவில்லை. உடலைப் பொறுத்த வரை, பினமில் முற்றிலும் நலமாக இருக்கிறார். ஆனால், அவர் மனம்தான் நோய்வாய்ப்பட்டுள்ளது; எரிந்து விழுகிறார். அவரது இனிய சுபாவமெல்லாம் பறந்து விட்டது. அவருக்குப் பணிவிடை செய்வதற்காக நியூ போர்ட்டிலிருந்து மிஸ் பேனி பினமில் வந்திருந்தார். பினமில் என்ன செய்தார் தெரியுமா? மறுநாளே மிஸ் பினமில் கண்களில் நீர்மல்க ஊர் திரும்புமாறு செய்து விட்டார். இருபத்தேழு புத்தகங்கள் கொண்ட பால்ஸாக் நூல்களின் முழுத் தொகுப்பு ஒன்றை அவர் தம்முடைய சோபாவுக்குப் பக்கத்தில் வைத்திருக்கிறார். எதற்காகத் தெரியுமா? அவரது பணியாளான வாட்கின்ஸ் உணவு எடுத்து வரும்போதெல்லாம் அவன் மேல் வீசி எறிவதற்காக.

அவர் ஓர் ஏழையாக இருந்து அவரது அன்றாட உழைப்பையே நம்பியிருக்கும் ஒரு குடும்பமாயிருந்தால் இவ்வித எரிச்சலும் மனச் சோர்வும் இயற்கையாக இருக்கலாம். ஆனால், அவர் இருபத்தி நாலே வயதான இளைஞர். வேண்டிய பணம்; உலகில் ஒரு கவலையும் கிடையாது. இப்படியிருக்க,

“கெட்ட பையனின் கதை” என்ற தலைப்பில் தமது பிள்ளைப் பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதிய விறுவிறுப்பான புத்தகம் அமெரிக்க நூலாசிரியர் தாமஸ் பெய்லி ஆல்டிரிச்சைப் பிரபலமாக்கியது. எளிய கவிதை, சிறுகதை, இவை இரண்டிலுமே அவர் தலை சிறந்து விளங்கினார். தமது கதைகளை அவர் யாரும் எதிர்பாராத விதத்தில் முடிப்பது வழக்கம். இது எல்லாரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. ஆல்டிரிச் எழுதிய ஒரு கதையின் சுருக்கத்தை மகிழ்ச்சியுடன் இவ்வாரம் பிரசுரித்திருக்கிறோம்.



எதிர் வீட்டு அழகி

"அவர் நடந்து கொள்ளும் விதம், சகிக்க முடியவில்லை." தொடர்ந்து இவ்வாறு மனத் தடுமாற்றங்களுக்கு இடம் கொடுப்பாரானால் இறுதியில் அவரது முழங்கால் எலும்பு விலகல் கண்டு விடும். ஒருவனை ஓரளவு பகுத்தறிவுடன் நடந்து கொள்ளுமாறு செய்ய என்னிடம் மருந்தொன்றும் இல்லை. அது என் திறமைக்கு அப்பாற்பட்டது; ஆனால் உங்கள் திறமைக்குட்பட்டதாக இருக்கலாம். நீங்கள் பிளமிங்கின் நெருங்கிய நண்பர்; உயிர்த் தோழர். அவருக்குக் கடிதம் எழுதுங்கள், அடிக்கடி எழுதுங்கள், அவர் மனதை மாற்றி உற்சாகமூட்டுங்கள்.

தங்களிடம் அன்பும் மதிப்பும் கொண்டுள்ள,

புல்லன்.

எட்வர்ட் டிலானியிடமிருந்து ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்ட், 8ல.

என் அன்புள்ள ஜாக்,

இன்று காலை டாக்டர் புல்லன் எனக்கு ஒரு வரி எழுதியிருந்தார்; முதலில் கேள்விப்பட்டது போல உனக்கு அவ்வளவு பெரிய காயமில்லை என்றறிந்து மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய தந்தையின் உடல்நிலை காரணமாக நான் அவரைவிட்டு விலக முடியாமலிருக்கிறது. அவரைப் பார்த்துக் கொள்ள வேலைக்காரனை விட ஜாக்கிரதையான ஆள் தேவையாயிருக்கிறது. அதனால்தான் நான் உன்னிடம் வர முடியவில்லை. உனக்கு உற்சாகமளிக்கு மென்றால் ஒரு தபால் ஆபீஸ் நிறைய வேண்டுமென்றாலும் நான் கடிதங்கள் எழுதுவேன்.

கடலோர வீடுகளில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருந்தோமானால் திரள் திரளான கடல் கன்னிகைகள் பற்றியும், உள்ளம் கொள்ளை கொள்ளும் அவர்களுடைய பொன்னிறக் கூந்தல் கற்றைகள் தோளில் புரள்வது பற்றியும் எழுதி உன் கற்பனையை நிரப்ப முடியும். காலை உடுப்பிலும் மாலை உடையிலும் அழகு மிக்க நீச்சல் உடையிலும் காதல் தேவதையை உனக்கு அளிப்பேன்! ஆனால் நாங்கள் கடற்கரைக்கு அருகில் இல்லை. உணவு விடுதிகளிலிருந்து இரண்டு மைல் தொலைவில் குறுக்குச் சாலையொன்றில் ஒரு பண்ணை வீட்டில் நாங்கள் அறைகள் எடுத்து அமைதியான வாழ்க்கை நடத்துகிறோம்.

ஒரு பழமையான வீடு; பலகைத் தரை; உயரமான மரச் சுவர்கள். குறுகலான பலகணிகள். எதிரே ஒரு பைன் மரக் கூட்டம். காற்று வீசும்போதெல்லாம் அம் மரங்கள் இன்னிசை மீட்டுகின்றன. உண்மையில் கோடைக் காலக் காதல் கதை ஒன்று எழுத ஏற்ற இடம் இது. காட்டின் மணமும் கடலின் முழக்கம் இழையும் கதையாக அது திகழும். நான் ஒரு நாவலாசிரியனாக இருந்திருக்கக் கூடாதா?

எங்கள் குடியிருப்புக்கு ஏறக்குறைய எதிரே சாலையின் மறுபுறத்தில் இருக்கும் ஒரு பெரிய வெள்ளை வீட்டை நீ கற்பனை செய்து கொள். அது வீடு அல்ல; மாளிகை. மூன்றுபுறங்களிலும் அகலமான தாழ்வாரம். கட்டடக் கலைச் சிறப்பு மணக்கும் ஒரு கட்டடம் அது. இருபுறமும் வரிசையாகப் பலவகை மரங்கள் அணி செய்கின்றன. சில சமயங்களில் தாழ்வாரத்

தாமஸ் பெய்லி ஆல்டிரிச்

தில் ஓர் இளம் பெண் காட்சியளிக்கிறாள். அவள் கையில் ஏதோ பின்னல் துணி வைத்திருக்கிறாள்; முடிவில்லாமல் அதைப் பின்னிக் கொண்டிருக்கிறாள். அல்லது ஒரு புத்தகம் வைத்திருக்கிறாள். அங்கு ஓர் ஊஞ்சல் மஞ்சம் இருக்கிறது: பொன்னிற முடியும், கரிய விழிகளும் படைத்த அந்தப் பதினெட்டு வயதுப் பெண் வீற்றிருந்தால் ஊஞ்சல் மஞ்சம் வெகு அழகாகத்தான் தோன்றுகிறது! சீன நாட்டு இடைப் பெண் போல் பச்சை நிறப் பட்டு உடுத்தியிருக்கிறாள் அவள். இத்தனை அற்புதமும் அந்த ஊஞ்சல் மஞ்சத்தில் தஞ்சம் புகுந்து, பொன்னிற வெயிலில் அசைந்தாடும் குளத்து அல்லி மலர் போல் மெல்ல ஆடுகிறது. என் படுக்கையறையின் ஜன்னல் அந்தத் தாழ்வாரத்தைப் பார்க்க இருக்கிறது. நானும் அப்படித்தான்!

இந்த அபத்தமெல்லாம் போதும். உடல் நலக் குறைவாயிருக்கும் தந்தையுடன் விடுமுறையைக் கழிக்கும் அடக்கமான இளம் வழக்கறிஞன் ஒருவன் இவ்வாறெல்லாம் எழுதுவது இலட்சணமல்ல. அன்புள்ள ஜாக்! உண்மையில் உன் உடம்பு எப்படியிருக்கிறது என்று எனக்கு ஒரு வரி எழுதிப்போடு. நீண்ட கடிதமே எழுது. கோபமாகத் திட்டி எழுதினால் நான் சட்டப்படி உன் மேல் நடவடிக்கை எடுப்பேன்!

ஜான் பிளமிங்கிடமிருந்து
எட்வர்டு டிலானிக்கு

அன்பார்ந்த நண்பா,

பத்து நாட்களுக்கு முன் எனக்கு விபத்து நேரிட்டதிலிருந்து உன் கடிதம்தான் எனக்கு முதன்முதலாக ஆறுதல் அளித்த ஒன்று. உண்மையில் அரை மணி நேரம் அது என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நண்பா, என்னிடம் நீ அன்பு செலுத்தினால் உன்னால் முடிந்தவரை அடிக்கடி எனக்கு நீ நீண்ட கடிதங்கள் எழுது. எதைப் பற்றி எழுதினாலும் பரவாயில்லை. தாழ்வாரச் சிறு பெண் பற்றி எனக்கு அதிகம் எழுது. சீன நாட்டு இடைப் பெண், குளத்து அல்லி மலர் எல்லாம் மிக இன்பமாக இருந்தன. கற்பனை கொஞ்சம் கலந்திருக்கலாம்; ஆனால் மிக அழகாக இருந்தன. உன்னுடைய 'மேல் மாடி'யில் இவ்வளவு உணர்ச்சிச் சரக்கு உண்டு என்று நான் நினைக்கவேயில்லை. வறண்ட சட்டப் பத்திரங்கள், அடமானங்கள், வக்காலத்துகள் இவைதாம் உன் மண்டையில் அடைந்து கிடக்கும் என நான் நினைத்திருந்தேன்!

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்ட் 12உ.

நிஜமாகவே நான் எழுதுவதற்கு ஒன்றுமில்லை—சாலைக்கு அப்பாலுள்ள சிறு பெண்ணைத் தவிர. இந்த விநாடியில் அவள் ஊஞ்சல் மஞ்சத்தில் ஆடிக் கொண்டிருக்கிறாள்.

சிறிய மிதியடிகளை அவள் மாட்டிக்கொண்டு புறப்பட்டுப் போவதைப் பார்த்தாலே என் வாழ்வின் துன்பங்களெல்லாம் நீங்குகின்றன. அவள் யார்; அவள் பெயரென்ன?....அவள் பெயர் டா. மாஜி-கர்னலும் பாங்கருமான பீன்டர் ரிச்சர்டு டபின்யூ. டா என்பவரின் ஒரே மகள். தாய் காலமாகி விட்டாள். மகள் பெயர் மார்ஜரி—மார்ஜரி டா. கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது. இல்லையா? ஆனால் நீ உனக்குள்ளாகவே பல தடவைகள் சொல்லிப் பார்த்தபின் அது உனக்குப் பிடித்துவிடும். அதில் ஒரு புதுமையான இனிமையும் மலரின் மென்மையும் இருக்கின்றன.

நேற்றிரவு இங்கு என்னை விருந்தாளியாக ஏற்றுக் கொண்டுள்ளவரை சாட்சிக் கூண்டில் நிறுத்தி, மேற்கண்ட தகவல்களையெல்லாம் அவரிடமிருந்து கறந்தேன். நான் உலாவப் போகையில் திருவாளர் டா அல்லது குமாரி டா இருவரில் ஒருவரைப் பார்க்காமலிருக்கப் போவதில்லை. கடற்கரைக்குச் செல்ல அந்த இளங்கன்னிக்குப் பிடித்தமான பாதை ஒன்று உண்டு. என்றாவதொரு நாள் காலையில் நான் அவளை வழிமறித்து, என் தொப்பியைத் தூக்கி அவளுக்கு மரியாதை செய்வேன்: உடனே, அந்தக் கோமகள் பணிவார்ந்த வியப்புடன் என்னை நோக்கித் தன் அழகுத் தலையைத் தாழ்த்துவாள்; அதில் ஆணவமும் கலந்திருக்கும்.....

பத்து நிமிடங்களுக்கு முன்னால் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார்கள். என் தந்தையும் டாவும் ஒருவருக்கொருவர் பழைய பாணியில் முகமன் கூறிக் கொண்டிருக்கக் கண்டேன். தமது புதிய அண்டை வீட்டுக்காரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக அவர் வந்திருந்தார். விடைபெற்றுச் செல்லுமுன் கர்னல் ஓர் அழைப்பு விடுத்தார்; அது அவர் ஏதோ கட்டளை பிறப்பிப்பது போலத்தான் இருந்தது. உடல் நலம் சரியில்லை என்று கூறி, என் தந்தையார் அழைப்பை ஏற்க மறுத்து விட்டார். நான் ஏற்றுக் கொண்டுவிட்டேன்!

அடுத்த கடிதத்தில் நான் உனக்கு எழுத ஏதேனும் விஷயமிருக்கும். அந்த அழகியை நான் நேருக்கு நேர் பார்த்திருப்பேன்!

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்ட் 13உ.

என் அன்புள்ள ஜாக், விருந்து ரொம்பவும் அலுப்புத் தட்டும் வகையில் இருந்தது. கடற்படை லெப்டினன்ட் ஒருவரும் மதகுரு ஒருவரும் வெளியூர் பெரும் புள்ளி ஒருவரும் வந்திருந்தனர்.

நேரே விருந்து முடிந்தவுடனே கூட்டம் கலைந்து விட்டது; தாழ்வாரத்தில் அப்பாவைச் சுற்றிக் குமாரி மார்ஜரி வண்ணத்துப் பூச்சிபோல வட்டமிட்டாள். தூபச் சுழல்களிலிருந்து உயிர்த்தெழுந்த அழகிய தேவதை போல் தோன்றினாள். கதைகளில் வரும் சிலைகள்போல், அவள் காற்றில் கலந்து மறைந்து விட்டாள் என்றால், நான் ஆச்சரியப் படமாட்டேன்; துக்கப்படவே செய்வேன்.

பத்தரை மணி வரையில் நான் டா குடும்பத்தாருடன் அமர்ந்திருந்தேன்; கடலில் வெண் மதி உதிக்கக் கண்டேன்.

நாங்கள் எதைப் பற்றிப் பேசினோம்? பருவ நிலை பற்றியும், உன்னைப் பற்றியும்! உனக்கு ஏற்பட்ட விபத்து பற்றி என் நண்பர்களிடம்


அன்னையின் அன்புலகிலே பொன்னான பொருள்களை யன்றி வேறுண்டோ?
ஆதரவுக்கு ஆதாரவான அன்னைக்கு
ஆதரவு: டால்டா
காத்தருளும் அன்னையின் இரு கண்
இமைகளுக்குள்ளே நாம், நம் உலகம்...
அங்கே காண்பதெல்லாம் அன்பு... கேட்ப
தெல்லாம் அன்பு.... பெறுவதெல்லாம்
அன்பு... பொன்னான பொருள்களையே
எந்நாளும் தருவது அவள் பண்பு!
சுவைப்பதெல்லாம் அன்பு... குன்றாத
அன்பையே கூறுகிறது அன்றாடக் குழம்பும்
ரசமும்... இமைகொட்டாத கண்காணிப்
பிலே, உன்னதமான பண்டங்களாலான
உணவு... அருமை தெரிந்து அவள்
டால்டாவினால் சமைக்கும் நல்லுணவு!
தாத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களா
லான, தூய டால்டா... வளரும் உடம்புக்குத்
தேவைப்படும் வைட்டமின்கள் அடங்கிய
டால்டா... நல்லுணவின் செல்வத்துணை...
நம்மவர்க்கே உரிமையன்றோ...
டால்டா
டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.
DL 69-X32 T

சொன்னேன்; கடுமையான இந்தச் சோதனைக் காலத்தில் கூட நீ இனிய பண்பும் பொறுமையும் கொண்டிருப்பது பற்றிப் பேசினேன். உன் சகோதரி பேனியிடம் நீ காட்டும் உள்ளன்பு, உனக்குப் பணிவிடை செய்வதற்காக அவள் நகரில் தங்காமல் நீ தடுத்தது. நியூ போர்ட்டுக்கு அவளை நீ தைரியமாகத் திருப்பியனுப்பியது. வேலையாள் வாட்கின்ஸிடம் நீ கொண்டுள்ள பேரன்பு... இவை யெல்லாம் பற்றிக் கூறினேன்.

உன்னைப் பற்றிக் குமாரி மார்ஜரி எல்லா விதமான கேள்விகளும் கேட்டாள்; இந்தப் பேச்சில் அவள் தனி அக்கறை காட்டினாள்.

நீ மிகவும் விரும்பிப் போற்றக்கூடிய ஒரு பெண் குமாரி டா. முகத்தின் மூலம் ஒருவர் அகத்தை அறிய முடியு மென்றால், அவளைக் கர்வமில்லாத அழகி, உயர்ந்த இனிய பண்புள்ளவள் எனலாம்.



நாமக்கல் கவிஞர் அவர்களின் மருமகனும் கோவை அரசினர் கலைக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியருமான திரு கே. ஆர். அனுமந்த் மேல்படிப்புக்காக அமெரிக்க விஸ்கான்ஸின் பல்கலைக் கழகம் செல்வதை முன்னிட்டு ஒரு பாராட்டு விழா கோவையில் சமீபத்தில் நடைபெற்றது.

ஜான் பிளமிங்கிடமிருந்து
எட்வர்டு டிலானிக்கு

ஆகஸ்டு 17வ.

உன் கடிதங்கள் இல்லாவிட்டால் நான் என்ன செய்வேனே? அவை என்னைக் குணப்படுத்தி வருகின்றன. சென்ற ஞாயிற்றுக் கிழமை முதல், நான் ஒன்றையும் வாட்கின்ஸ் மீது வீசி எறியவில்லை. உன் போதனையின்கீழ் நான் விரும்பத் தக்கவனாக மாறியுள்ளேன்!

குமாரி டா அழகுள்ளவளாக இருக்க வேண்டும். நிச்சயம் எனக்கு அவளைப் பிடிக்கும். இல்லே, அவளை எனக்குப் பிடித்து விட்டது! எப்படியோ அவள் என் மனத்தை ஈர்த்துக் கொண்டு விட்டாள்; விந்தைதான். ஏன் என்று நான் காரணம் சொல்ல முடியாது. என் முன் பிறவி ஏதோ ஒன்றில் நான் அறிந்த அல்லது இப்பிறவியில் கனவு கண்ட ஒரு பெண்ணைப் பற்றியே நீ வர்ணிப்பதாகத் தோன்றுகிறது. சத்தியமாகச் சொல்கிறேன், நீ எனக்கு அவளது புகைப்படத்தை அனுப்பி வைப்பாயாகில் முதல் பார்வையிலேயே நான் அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியும் என நினைக்கிறேன்! இரவெல்லாம் நான் விழித்துக் கொண்டே கிடக்கிறேன். நட்சத்திரங்களுடன் உறவாடுகிறேன். நீ குறிப்பிட்டிருக்கும் வீட்டைப் பற்றியே என் மனம் என்னை மிடுகிறது. அவளது புகைப்பட 'ஆல்ப'த்திலிருந்து ஒரு படத்தை அமுக்கிக் கொண்டு வர உன்னால் முடியாதா? படத்தைக் காணோம் என்று அவள் தேட ஆரம்பிப்பதற்கு முன் நான் அதைத் திருப்பி யனுப்பி விடுகிறேன்.

என் காலை மறந்து விட்டேனே. அது இப்போது தேவலே.

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்ட், 20வ.

அன்று உனக்கு எழுதிய கடிதத்தைத் தபாலில் போடுவதற்காகப் போகையில், குமாரி டாவைச் சந்தித்தேன். பேச்சு மீண்டும் உன்னைப் பற்றித் திரும்பியது; முதல் நாள் மாலையில் அவள் முகத்தில் பூத்த விளக்க முடியாத ஆர்வச் சுடர் மீண்டும் பரவக் கண்டேன். உன்னைப் பற்றி அல்லது உன் சகோதரியைப் பற்றி அல்லது உன்னுடன் சம்பந்தமுள்ள நபர் அல்லது இடத்தைப் பற்றி நான் பேசாவிட்டால் அவள் கவனத்தை நான் கவரவில்லை என்பதை ஒவ்வொரு தடவையும் கண்டேன். அவள் ஏதோ குருட்டு யோசனையில் நிற்பாள்; அவள் கண்கள் என்னிடமிருந்து விலகி, தொலைவிலுள்ள கடல்மேல் திரியும்; அல்லது எட்டாத் தொலைவிலுள்ள ஏதாவதொரு பொருளைப் பார்ப்பாள்; அவளது விரல்கள் கையிலுள்ள ஒரு புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பிக் கொண்டிருக்கும்; நான் சொல்வதை அவள் கேட்கவில்லை என்பது எனக்கு உறுதியாகப் புலப்படும் விதத்தில் அவளது விரல்கள் ஏடுகளைப் புரட்டும். இந்தத் தருணங்களில் நான் திடீரென்று பேச்சை மாற்றி, என் நண்பன் பிளமிங் பற்றி ஏதாவது சொற்களை உதிர்த்தால் சோகம் தோய்ந்த நீலவிழிகள் உடனே என் பக்கம் திரும்பும்.

ஒரு போதும் சந்தித்திராத இருவர், நூற்றுக் கணக்கான மைல்கள் அவர்களைப் பிரித்து வைத்திருக்கையில் காந்தக் கவர்ச்சியால் ஈர்க்கப்படுவது நடக்கக்கூடிய காரியம் தானா? உள இயல் சம்பந்தமான இவ்வித விசித்திரங்களைப் பற்றி நான் படித்திருக்கிறேன்; ஆனால் ஒருபோதும் அவற்றை நம்பியதில்லை. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண

பதை நான் உனக்கே விட்டு விடுகிறேன். புகைப்படம்...அந்த மாளிகையின் முகப்பில் மார்ஜரியின் அழகிய படம் ஒன்றிருக்கிறது; தந்தச் சட்டம் போட்டது. அது- அதை எடுத்தால் உடனே தெரிந்து போய் விடும். ஜாக்! உனக்காக நியாயமான எதையும் நான் செய்வேன்; ஆனால் சிறு திருட்டுக் குற்றத்துக்காக உன்னூர் கௌரவ நீதிபதி முன்பு கொண்டு போய் நிறுத்தி வைக்கப்படுவதில் எனக்கு ஆசை கிடையாது.

பி. கு....இத்துடன் ஒரு கொத்து மலர் அனுப்பியுள்ளேன்; மென்மையாக அதைக் கையாளுமாறு உனக்கு யோசனை கூறுகிறேன். ஆம்! வழக்கம்போல நேற்றிரவும் நாங்கள் உன்னைப் பற்றிப் பேசினோம்.

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்டு 22உ.

என் முந்திய கடிதத்துக்கு நீ எழுதிய பதில் குறித்துக் காலை முழுதும் யோசித்தேன். என்ன நினைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. ஒருபோதும் நீ பார்த்திராத ஒரு பெண்ணிடம்—ஒரு நிழலிடம், உண்மையிலேயே நீ காதல் கொண்டு விட்டாய் என்று சொல்கிறாய்? எனக்கு இது புரியவேயில்லை. மென்காற்றில் மிதந்து பறக்கும் ஒரு ஜோடித் தெய்வப் பிறவிகள், நீங்கள். என் அற்ப அறிவுக்கு எட்டாதவர்கள். இவ்வித நுட்பமான உணர்ச்சியை நான் புரிந்து கொள்ளாமலே போற்றுகிறேன்!

உன் கடிதம் பற்றிச் சிந்தித்துப் பார்க்கையில், இந்தக் கடிதப் போக்குவரத்தை நான் தொடர்ந்து நீடிப்பது அறிவுள்ள செயலா என்று எனக்குத் திடமாகத் தெரியவில்லை. ஒன்றை நீ மனத்தில் கொள்ள வேண்டும். அவளை நீ உண்மையில் அறியும்போது உன் இலட்சியத்துக்கு அவள் மிகவும் குறைந்தவளாக இருப்பாள். பிறகு நீ கொஞ்சமும் அவளைப் பொருட்படுத்தப் போவதில்லை.

மலர்க்கொத்து நான் அனுப்பியதில்லை தான். இந்தச் சூழ்நிலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காதே. மதகுருவுக்கும் லெட்டினண்டுக்கும் கூட அவள் மலர்க்கொத்து கொடுக்கிறாள். அவள் மார்பை அணி செய்த மலர்க்கொத்திலிருந்து ஒரு ரோஜா மலரை எடுத்து உன் அடிமையான எனக்குக்கூடக் கொடுத்திருக்கிறாள். வசந்தகாலத்தைப் போல, மலர்களை வாரி வழங்குவது அவள் இனிய இயல்பு.

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்ட், 23உ.

மார்ஜரியுடன் மிகவும் விந்தையான சந்திப்பு ஒன்றுக்குப் பின் நான் இப்போதுதான் திரும்பி வந்துள்ளேன். உன்னிடம் தனக்குள்ள அக்கறை குறித்து அவள் என்னிடம் முழுதும் ஒப்புக்கொண்டு விட்டாள். ஆனால் என்ன பணிவு; என்ன கன்னியம்? அவளது வார்த்தைகளை நான் அப்படியே எழுத முயல்கிறேன்; முடிந்தால்தானே?

'ஹோல்'லில் சில நாட்கள் தங்க வேண்டுமென்று திடீரென என் தந்தையின் மூளையில் உதயமாகி விட்டது. இடைக்காலத்தில் நான் உனக்குக் கடிதம் எழுத முடியாது. தோட்டத்தில் மார்ஜரி, கர்னலுடன் உலாவுவதை நான் பார்க்கிறேன். அவளிடம் தனியாகப் பேச வேண்டும் என்று எனக்கு ஆசை; ஆனால் நாங்கள் புறப்படுவதற்கு முன் ஒருவேளை வாய்ப்புக் கிடைக்காமல் போகலாம்.

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

ஆகஸ்ட், 28உ.

இன்று காலையில் தான் நாங்கள் திரும்பினோம்; வந்ததும், என் மேஜையின்மீது உன் கடிதங்கள் மூன்று இருப்பதைக் கண்டேன்!

அன்புள்ள பிளமிங், நான் வெளிப்படையாகப் பேசுவதற்கு என்னை மன்னித்து விடு; உன்னுடைய கால் வலுப்பெற வலுப்பெற, உன் அறிவு வலுவிழந்து வருகிறது என்ற கருத்து என்னிடம் வலுவாக மேலோங்கி நிற்கிறது. குறிப்பிட்ட ஒரு விஷயம் குறித்து என்னுடைய புத்திமதியை நீ கேட்கிறாய். நான் புத்திமதி கூறுகிறேன்:— மலர்களுக்காக நன்றி தெரிவித்து, குமாரி டாவுக்கு நீ நேரடியாக ஒரு குறிப்பு எழுதுவதை விடப் புத்திகெட்ட செயல் வேறெதுவும் இல்லை என்பது என் கருத்து. அது அவளுடைய உணர்ச்சியைப் புண்படுத்தி விடும் என்பது உறுதி. என் மூலமாகத்தான் உன்னை அவளுக்குத் தெரியும். அவளுக்கு நீ ஓர் அருவம்; கனவில் வரும் ஒரு தோற்றம்—இலேசான அதிர்ச்சிகூட அவளை அக்கனவிலிருந்து கலைத்து எழுப்பி விடும். எனக்கு எழுதும் கடிதத்துடன் நீ அவளுக்கு ஒரு குறிப்பு வைத்து, அதை அவளிடம் சேர்ப்பிக்க வற்புறுத்துவாயானால் நான் அவ்வாறு செய்வேன். ஆனால் நேரடியாகக் கடிதம் எழுத வேண்டாம்.

ஒரு பிரம்பின் உதவியுடன் உன் அறைக்குள் நீ நடக்க முடிகிறதென்றும், பிரயாணத்தைத் தாங்கக்கூடிய வலிவு உனக்கு ஏற்பட்டு விட்டதாக டில்லன் கருதும் மறு விநாடியே நீ இங்கு வர உத்தேசித்துள்ளதாகவும் கூறுகிறாய். மீண்டும் நீ அவ்வாறு செய்யாதே என்று நான் புத்திமதி கூறுகிறேன். நீ தொலைவில் இருக்கும் ஒவ்வொரு மணி நேரமும் மார்ஜரிக்கு உன்னைப் பற்றி உண்டான பிரமை அதிகரிக்கிறது. அவள் மீது நீ கொண்டுள்ள செல்வாக்கு உயர்கிறது என்பது உனக்குப் புரியவில்லையா? அவசரத்தால் நீ அனைத்தையும் நாசமாக்கி விடுவாய். குணம் அடையும் வரை காத்திரு. எப்படியும் தகவல் தெரிவிக்காமல் வராதே.

நாங்கள் மீண்டும் திரும்பி வந்தது குறித்து குமாரி டாவுக்கு மகிழ்ச்சியே என்பது தெளிவு. கொஞ்சமும் கபடு இன்றி இரு கரங்களையும் நீட்டி என்னை வரவேற்றாள். மார்ஜரியின் மனசில் ஏதோ சங்கடம் இருப்பதாக எனக்குப்படுகிறது. எனினும், இது என் கற்பனையாக இருக்கலாம்...இத்துடன் இந்தக் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பிளமிங்குக்கு

நேற்றிரவு நான் எழுதிய கடிதத்துக்குப் பின்பு, இங்கு என்ன நடந்துள்ளதென்று





தலைவலி
உடம்புவலி
பல்வலி
கஷ்டமான நாட்கள் ?



Saridon

சொல்வதற்காக நான் வெகு அவசரமாக எழுதுகிறேன். நான் மிகப் பெரும் சிக்கலில் தவிக்கிறேன். ஒரு விஷயம் மட்டும் தெளிவு: இங்கு வருவது பற்றி நீ கனவுகூடக் காண லாகாது. மார்ஜரி தன் தந்தையிடம் எல்லா வற்றையும் சொல்லிவிட்டாள்! ஒரு மணி நேரத்துக்கு முன்பு, தோட்டத்தில் நான் அவளைச் சில நிமிஷங்கள் பார்த்தேன். குழப் பத்துடன் அவள் கூறியவற்றிலிருந்து, என்னால் முடிந்தவரை சேகரித்துக் கொண்ட விஷயங்கள் இவைதாம்: லெப்டினன்ட் பிராட்லி—சிவர் மவுத்தில் இருக்கும் கடற்படை அதிகாரி—கொஞ்ச காலமாகத் தன்னை மணந்துகொள்ளு மாறு குமாரி டாவிடம் கேட்டு வருகிறார். ஆனால் அவள் அதை அவ்வளவாக விரும்ப வில்லை. இந்த இளம் கனவானின் தந்தையும் மார்ஜரியின் தந்தையும் பழைய நண்பர்கள் என்று தோன்றுகிறது. கர்னல் டா, மகள் மார்ஜரியிடம் லெப்டினன்ட் பிராட்லியைப் பற்றிப் பேசினார். அவனை மணந்து கொள்ளு மாறு வற்புறுத்தினார் என நான் ஊகிக்கிறேன். லெப்டினன்டிடம் தனக்குள்ள வெறுப்பை அவருக்கே உரிய ஒளிவு மறைவற்ற முறை யில் தெரியப்படுத்தினாள் மார்ஜரி; இறுதி யாக அவள் தன் தகப்பனாரிடம் விஷயத்தைத் தெரிவித்து விட்டாள். அது அவருக்குக் கோபமூட்டியது. விவகாரத்தில் நானும் சிக்கி யிருக்கிறேன் என நினைக்கிறேன். கர்னல் என்னிடம் சீற்றம் கொண்டுள்ளார்.

எட்வர்டு டிலானியிடமிருந்து
டாக்டர் தாமஸ் டில்லன் அவர்களுக்கு

ஆகஸ்டு 30உ.

என் அன்பார்ந்த டாக்டர்!

பினமிங்கிடம் தங்களுக்கு ஏதாவது செல் வாக்கு இருக்குமானால், அதைப் பயன்படுத்தி அவன் தற்போது இந்த இடத்துக்கு வருவ தைத் தடுக்குமாறு நான் உங்களிடம் மன்றாடி வேண்டுகிறேன். அவன் இந்தச் சுற்று வட்டா ரத்துக்குள்வரக்கூடாது. அதற்குக்காரணங்கள் உண்டு. அவற்றை விரைவில் நான் உங்க ளுக்கு விளக்குவேன். இது சம்பந்தமாக நீங்கள் என் பெயரை வெளியிட மாட்டீர்கள் என நம்புகிறேன்.

எட்வர்டு டிலானியிடமிருந்து
ஜான் பினமிங்குக்கு

ஆகஸ்ட் 31உ.

நீ இங்கு வருவதென்று உறுதி பூண்டு விட்டதை அறிவிக்கும் கடிதம் இப்போது தான் கிடைத்தது. பெரும் தீமை விளைவிக் கும் உனது செயல். மார்ஜரியிடம் கண்ணே போல் அவள் தகப்பனார் அன்பு பாராட்டினா லும் தம்மை எதிர்த்தால் டா என்ன வேண்டு மானாலும் செய்துவிடுவார். டா அவளைக் கொடுமைப்படுத்துவதை விரும்ப மாட்டாய் என்று நம்புகிறேன்.

தந்திகள்

செப்டம்பர், 1—

1. எட்வர்டு டிலானிக்கு,

கடிதம் கிடைத்தது. நான் அங்கு இருக்க வேண்டுமென நினைக்கிறேன். —ஜே. எப்.

2. ஜான் பினமிங்குக்கு,

இருக்குமிடத்திலேயே இரு: விஷயங்களை நீ மேலும் சிக்கலாக்குகிறாய். —இ. டி.

3. எட்வர்டு டிலானிக்கு,

நான் அங்கு வருவதை இரகசியமாக வைத் திருக்க முடியும். நான் அவளைப் பார்த்தாக வேண்டும். —ஜே. எப்.

4. ஜான் பினமிங்குக்கு,

அதைப் பற்றி நினைக்கவே நினைக்காதே: அதில் பயனில்லை. டா, மார்ஜரியை அவளது அறையில் பூட்டிவைத்து விட்டார். உன்னால் அவளைச் சந்திக்க முடியாது. —இ. டி.

5. எட்வர்டு டிலானிக்கு,

கடவுளே; அவளை அறையில் பூட்டி வைத்து விட்டாரா? இனியும் யோசிப்பதற்கில்லை! 12-15 எக்ஸ்பிரஸில் நான் புறப்படுகிறேன்.

வருகை

1873 செப்டம்பர் இரண்டாம் தேதி 3-40 எக்ஸ்பிரஸ் ஹாம்டன் ரயில் நிலையத்தி லிருந்து கிளம்பியபோது, இளைஞர் ஒருவர், வாட்கின்ஸ் என்ற பணியாள் கைவாகு கொடுத்துத் தம்மைத் தாங்கப் பிளாட்பாரத் திலிருந்து ஒரு சாரட்டில் ஏறி, ரயில் நிலயத் திலிருந்து சில மைல்கள் தொலைவிலுள்ள பைன்ஸ் பகுதிக்கு விடுமாறு கேட்டுக் கொண்டார். மீண்டும் வாட்கின்ஸ் என்ற நபரின் தோளில் சாய்ந்த வண்ணம் பண்ணை வீட்டின் உள் வாசலுக்குச் சென்று எட்வர்டு டிலானி இருக்கிறாரா என்று கேட் டார். அவர் கதவைத் தட்டியது கேட்டுப் பதிலளிக்க வந்த வயதான மனிதர், முதல் நாளன்று எட்வர்டு டிலானி பாண்டனுக்குப் போய்விட்டதாகவும், ஆனால் அவர் தகப்பனார் ஜோன்ஸ் டிலானி உள்ளே இருப்பதாகவும் தெரிவித்தார். இந்தத் தகவல் புதிய ஆசா மிக்குத் திருப்தியளித்ததாகத் தோன்றவில்லை; ஜான் பினமிங்குக்கு எட்வர்டு டிலானி ஏதாவது கடிதம் கொடுத்துச் சென்றுள்ளாரா என்று இளைஞர் கேட்டார். பினமிங் என்ப வருக்கு ஒரு கடிதம் இருந்தது....

செப்டம்பர், 1—

கடிதப் போக்குவரத்தைத் தொடங்கிய போது, நோய் அறையின் சலிப்பைப் போக்கி உனக்கு உதவுவதைத் தவிர எனக்கு வேறெந்த நோக்கமும் கிடையாது. உனக்கு உற்சாக மூட்டுமாறு டாக்டர் டில்லன் என்னிடம் கூறினார். நான் முயன்றேன். என் நோக் கத்தை நீ புரிந்து கொண்டாய் என நினைத் தேன். சில நாட்களுக்கு முன்புவரைகூட, இந்த விவகாரத்தை நீ இவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொண்டு விடுவாய் என்று நான் நினைத்ததேயில்லை.

மனசுக்கு மகிழ்ச்சியும் இன்பமும் தருவதற் காக ஒரு சிறு காதல் கதை புனைய முற்பட் டேன். அதில் எனக்குள்ள திறமை நிரூபண மாகிவிட்டது. என் தகப்பனாருக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது: எனவே பெரியவரைக் குடைந்து எடுக்காதே. நீ இங்கு வரும்போது உன் கோபத்திலிருந்து தப்புவதற்காக நான் இதோ பறந்தோடுகிறேன்! அன்பார்ந்த ஜாக், உண்மையில் சாலைக்கு மறுபுறம் மாளிகை எதுவும் கிடையாது: தாழ்வாரம் ஏதும் இல்லை; மார்ஜரி டா என்றொருத்தியும் இல்லை!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10. Managing Editor, T. Sadasivam.


மஞ்சள்
LUX
Yellow
இளஞ்சிவப்பு
LUX
Pink
நீலம்
LUX
Blue
பச்சை
LUX
Green
தூய, மெல்லிள லக்ஸ் சோப்புக்கு
வானவில்லின் 4 வித வண்ணங்கள்
தவிர, நமதருமை வெண்மையும் உண்டு
புதுமையோ புதுமை! வண்ண வண்ணக் கோலமும் வாசனை
மேலுறையும் புனைந்து வருகுது லக்ஸ். வெண்ணிறமா? உண்டு.
உண்டு. நேயமுடன் நம்மோடு பழகிவிட்ட அதே லக்ஸ்.
எந்த வண்ணமும் நமக்கே சொந்த வண்ணம்,
எழிலோங்குதல் திண்ணம் திண்ணம்!
'என்ன என்ன இனிமை,
வண்ண வண்ணப் புதுமை: என் லக்ஸ்!'
என்கிறார் சாவித்திரி
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் தூய,
மெல்லினம் அழகுசாதன சோப்
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
L.T.S. 85-X52 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



லைப்பாய் இருக்குமிடம்
அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்

எல்லாம் இன்பமயம்-- லைப்பாய் தேய்த்துக்
குளிக்கும் நமக்கு! ஆஹாஹா... கிடைக்கும்
ஆரோக்கிய சுகம்! அன்றாட அழுக்கிலிருந்து நாம்
தப்பமுடியாது; அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது லைப்பாய் -- குடும்ப
முழுமைக்கும் குன்றாத ஆரோக்கிய சுகம்!

L. 23-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு